ஏப்ரல் 12-18, 2004 | 24 பக்கங்கள் | 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

APR 2004

# சுடர் ஒளி

THE SUDAR OLI | සුඩර් ඔළි | வார மலர்



புத்தாண்டு வாழ்த்துக்கள்



## புதிய அரசும் இந்தியாவின் நெருங்கிய பங்களிப்பும்

## ஜெனீவாவில் பொங்குதமிழ் பேரெழுச்சி!



# இனப்பிரச்சினை விவகாரத்தில் முக்கிய பங்காளியாகும் இந்தியா!

மஹிந்த ராஜபக்ஷ புதிய பிரதமரானார். கடந்த ஆறாம்திகதி செவ்வாய்க்கிழமை தனது பதவியேற்பு வைபவத்துக்கு தயாராகிக் கொ ண்டிருந்த் அதே பகல்பொழுதில் அவரைச் சந்தித்த செய்தியாளர்களிடம் ''இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும்; அது பெரும் பங்கை ஆற்ற வேண்டும்'' என்ற வகையில் கருத்துத் தெரிவித்தார்.

மஹிந்த பிரதமராகப் பதவியேற்றபின்பு முதன் முதலாகச் சந்தித்து வாழ்த்துக்களையும், மகிழ்ச்சியையும் பரிமாறிக் கொண்டவர் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென்தான். பிரதமர் சந்தித்த முதல் இராஜதந்திரியும் அவர்தான். பிரதமர் இந்தியத் தூதுவருடன் ஆழ்ந்த ஆலோசனைகளையும் செய்தார்.

## இந்தியா என்னதான் செய்யும்?

புதிய பிரதமர் பதவியேற்ற அன்றைய பகல் பொழுதில் அகில இந்திய வானொலியின் டில்லியிலிருந்து ஒலிபரப்பாகும் மதிய நேரச் செய்தி அறிக்கையில், இலங்கையில் பதவியேற்றுள்ள புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவின் பங்களிப்பைக் கோரியுள்ளார் என்று தெரிவித்திருந்தது. இந்தியத் தலையீடு தவிர்க்க முடியாதது என்று அவர் தெரிவித்ததாகவும் அது தெரிவித்தது.

எந்தவகையில் இந்தியா தலையிட வேண்டும் என்று அவர் கூறவில்லை. 1987 ஆம் ஆண்டு இலங்கை விவகாரத்தில் நேரடியாகத் தலையிட்ட இந்தியா தனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவத்தினால் அதில் தலையிடாத கொள்கையுடன் இருந்து வருகிறது என்று கூறப்பட்டது.

## இனப்பிரச்சினையை இந்தியாவிடம் ஒப்படைப்பார்களா?

மஹிந்த ராஜபக்ஷ ஓர் இந்திய ஆதரவாளர் என்று விவரிக்கப்படுபவர். இலங்கை – இந்திய உறவை மிகவும் ஓங்கி வளர்க்க வேண்டும் என்ற சிந்தனையுள்ளவர். தென்னாசியாவில் இந்தியாவின் வல்லரசுத்தன்மையை 'ஏற்றிப் போற்றி' இலங்கையின் பாதுகாப்புவிவகாரங்களில் இந்தியா பின்னிப் பிணைந்து நிற்க வேண்டும் என்ற கொள்கையுடன் தீவிரமாகச் செயற்பட்டு வருபவர்.

இலங்கைஇனப்பிரச்சினைவிவகாரத்தை மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைப்பதில் கடந்த சில வருடங்களாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் மிகவும் முனைப்பாகச் செயற்பட்டுவந்தனர் என்பது அனைவராலும் அவதானிக்கப்பட்ட விடயம்.

புதிய பிரதமராக மஹிந்த பதவியேற்றதில் ஜே.வி.பிக்கு அதிருப்தி இருந்தாலும் அவரது இந்திய ஆதரவுக் கொள்கைகளுக்கு ஜே.வி.பி ஒரு போதும் எதிர்ப்புத் தெரிவிக்காது. மேலும் சந்திரிகாவின் விசுவாசியான டக்ளஸ் தேவானந்தாவும் இந்தியத் தலையீட்டை விரும்புபவர்தான்.

கடந்த இரண்டு வருடங்களில் மஹிந்த ராஜபக்ஷ சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் டில்லிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். இலங்கைக்கு விஜயம் செய்துள்ள டில்லி அரசியல்வாதிகள் எவரும் மகிந்தவைச் சந்தித்து ஆழநீளமாக உரையாடிச் செல்வதே வழமை ஆகும்.

புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது புதிய அரசாங்கத்தை அமைப்பதற்குரிய பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. அதற்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் ஜனாதிபதி, புதிய பிரதமர் ஆகியோர் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை தமது பிரதிநிதிகளூடாக மேற்கொண்டனர்.

அதற்கிடையில் புதிய பிரதமர் ஒரு அவசர இந்திய விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா சென்று டில்லியில் ஆலோசனைகளை நடத்திவிட்டு வரும் வாய்ப்புக் கூட உள்ளது என்று கொழும்பில் ஊகங்கள் வெளியாகியிருந்தன.

## பிரதமர் நாடாளுமன்ற பலத்தை நிரூபிப்பாரா?

பிரதமர் மஹிந்த தனது அரசாங்கத்தின் பெரும்பான்மைப் பலத்தை விரைவில் நிரூபிக்க வேண்டியுள்ளது. இப் பெரும்பான்மையை நிரூபிப்பதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆறுமுகம் தொண்டமானின் ஆதரவைப் பெறுவதில் முன்னைய தடவைகள் போல இப்பொழுது ஒரு இலகுத் தன்மை இருக்கப் போவதில்லை.

கண்டி மாவட்டம் – நுவரெலியா மாவட்டம் ஆகிய இரு மாவட்டங்களும் அடங்கும் மத்திய மாகாணசபை, – பதுளை மாவட்டம் – மொனராகலை மாவட்டம் என்பன உள்ளடங்கும் ஊவா மாகாணசபை, இரத்தினபுரி மாவட்டம், கேகாலை மாவட்டம் என்பன உள்ளடங்கும் சப்பிரகமுவா மாகாணசபை ஆகியவற்றில் தனது அரசியல் எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ள வேண்டிய தேவையும் அம்மாகாணங்களில் வசிக்கும் மலையகத் தமிழர்களின் அரசியல் ஆதரவுத் தளத்தை இனங்கண்டு தேசிய அரசியலில் பங்கு கொள்ள வேண்டிய கட்டாயமும் இ.தொ.காவுக்கு உள்ளது.

புதிய அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுக்க இ.தொ.கா. தீர்மானிக்குமா என்ற கேள்வி பலரிடம் எழுகிறது. அவ்வாறு ஆதரவு கொடுப்பதில் இ.தொ.கா தயங்குவதாகவே தெரிகிறது.

ஏனெனில் தேசிய அரசியலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடனும் மாகாணசபை அரசியலில் ஐக்கிய தேசியக் கட்சியுடனும் கைகோத்தால் தனது அரசியல் எதிர்காலத்தை எவ்வளவுதூரம் வளர்க்க முடியும் என்கின்ற சந்தேகம் ஆறுமுகம் தொண்டமானுக்கு உள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மலையகத்தில் விழுந்த வாக்குகள் இ.தொ.கா – ஐக்கிய தேசியக் கட்சி கூட்டுக்கு விழுந்த வாக்குகளே! அந்த வாக்குப் பலத்தை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வழங்குவதன் மூலம், எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களில் எவ்வாறு தான் அரசியல் வியூகத்தை வகுப்பது என்பதில் ஆறுமுகம் தொண்டமானுக்கு குழப்பம் ஏற்படும். மேலும் விரைவில் ஈடாடிவிழுந்து விடும் என்று எதிர்பார்க்கப்படும் புதிய அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுப்பதிலும் ஆறுமுகம் அவ்வளவுவிருப்பம் கொண்டவராக இல்லை. எனினும் என்ன செய்வார் என்பது தெரியவில்லை! சிலவேளைகளில் இந்திய இராஜதந்திரிகளின் ஆலோசனை, அழுத்தம் என்பவற்றின் பேரில் ஆறுமுகம் தொண்டமான் காலக்கிரமத்தில் புதிய அரசாங்கத்தை ஆதரிக்க முன்வரலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமைப் பொறுத்தவரையில், ஜனாதிபதி சந்திரிகா 11 ஆவது நாடாளுமன்றத்தின் அமைச்சரவையிலிருந்து தன்னை தூக்கி வீசிய அனுபவத்திலிருந்து மேலும் இறுக்கமும் பலமும் அடைந்தவராகவே தென்படுகிறார். அன்றைய 11 ஆவது நாடாளுமன்றத்திலிருந்து ஹக்கீம் தூக்கி எறியப்படுவதற்கு முன்பாக ஜனாதிபதிக்கும் அவருக்குமிடையில் ஏற்பட்ட முரண்பாடுகளுக்கான அத்தனை காரணங்களும் இன்னமும் அவரால் முன்வைக்கப்படக் கூடிய பிரச்சினைகளாகவே உள்ளன. அத்துடன் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் பட்சத்தில் அதில் முஸ்லிம் தரப்புக்குரிய பங்கு பற்றிய சர்ச்சைகளும் ஹக்கீமிடம் உள்ளன.

இந்த நிலையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் புதிய அரசாங்கத்தை ஆதரிப்பது என்ற முடிவை மேற்கொள்வதில் பெரும் தடங்கல்கள் இருந்து வருகின்றன. கடந்த காலங்களில் நுஆ கட்சியின் தலைவி பேரியல் அஷ்ரப், ஜனாதிபதி சந்திரிகாவுடன் கூட்டாக நின்று ஹக்கீமை பலமாக எதிர்த்து பிரசாரம் செய்துள்ளமையும், ஹக்கீமை ஏமாற்றிவிட்டு சந்திரிகா குமாரதுங்கவுடன் இணைந்துகொண்ட அதாவுல்லா போன்றவர்களும் ஹக்கீமுக்கு பெரும் தடங்கலாக இருந்துவருகின்றனர்.

பிக்குகளின் அரசியல்கட்சியான ஜாதிக ஹெல உறுமய தர்ம இராஜ்ஜியமாக இந்த நாட்டை மாற்ற விரும்புவதாகவும் அதனை ஆதரிக்கும் அரசாங்கத்தை ஆதரிக்கப்போவதாகவும் அறிவித்து வருகின்றது.

அவர்கள் சொல்லிக்கொள்ளும் தர்ம இராஜ்ஜியத்தில் விடுதலைப் புலிகளோடு சமரசப் பேச்சுவார்த்தைகள் செய்யமுடியுமோ என்பது தெரியவில்லை. அவர்களைக் கூட்டுச்சேர்த்தால் தங்கள் தர்ம இராஜ்ஜியத்துள் என்ன நிகழவேண்டும்? என்ன நிகழக்கூடாது? என்று உரைக்கிறார்களோ அதையே செய்தாகவேண்டிய கட்டம் சந்திரிகாவுக்கும் மஹிந்தவுக்கும் ஏற்பட்டுவிடும். இந்த தர்ம இராஜ்ஜியக்காரர்களையும் இந்திய இராஜதந்திரம் பலமாகக் கையாளும் என்றே எதிர்பார்க்கலாம்.

## ஜே.வி.பி அமைச்சர்கள்

விவசாயம், காணி, நீர்ப்பாசனம் ஆகியவற்றுக்கான அமைச்சும், அதன் பிரதி அமைச்சு, கலாசாரம் தேசிய பாரம்பரியம் ஆகியவற்றுக்கான அமைச்சு, அதன் பிரதி அமைச்சு, கிராமியபொருளாதார அபிவிருத்தி அமைச்சு, அதன் பிரதி அமைச்சு; கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சு, அதன் பிரதி அமைச்சு ஆகியவற்றுக்கான அமைச்சர்கள் ஜே.வி.பி கட்சிகாரர்களே. அவர்கள் யார் யார் என்பதை ஜே.வி.பி பிரேரித்துள்ளது. அவர்கள் தமது அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கத் தயாராகவும் இருந்தனர். மேலும் பாதுகாப்பு அமைச்சு, நிதிஅமைச்சு, ஊடகத்தொடர்புத்துறை அமைச்சு ஆகியவற்றினதும் செயலாளர்களின் நியமனத்தில் தமது சிபாரிசுகளுக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டும் என்றும் ஜே.வி.பி வலியுறுத்தி வருகிறது. ஜே.வி.பி புதிய அமைச்சரவையில் ஆற்றப்போகும் பங்குமூலமாக தென்பகுதிச் சிங்கள மக்கள் மத்தியில் மேலும் தனக்கான பாரிய ஆதரவுத்தளத்தை விஸ்தரித்துக் கொள்ளப்போகிறது.

## புதிய அரசாங்கம் புலிகளுடன் பேசுமா?

ரணில் அரசாங்கம் , விடுதலைப்புலிகளுக்கு அதிகளவு விட்டுக்கொடுத்து சிங்கள இனத்துக்கு ஆபத்தை விளைவித்தது என்றுதான் ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்தன. இருகட்சிகளும் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான யோசனைகளை எதிர்க்கின்றன. இலங்கைத் தமிழரசுக்கட்சி பொதுத்தேர்தலில் நின்றபோது ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்துள் புலிகள் வரப்போகிறார்கள் என்று இனவாதம் கக்கின. இவ்விரு கட்சிகளினதும் ஆதரவுடன் அமையும் புதிய அரசாங்கம் புலிகளுடன் எப்படிப்பேசப்போகிறது என்ற கேள்வி எழுகிறது. மேலும் ஜனாதிபதியும் புதிய பிரதமரும் இந்தியாவின் தலையீட்டை விரும்புவதுடன் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றை முன்பு முயற்சிக்கப்பட்ட நிலையில் மேற்கொள்ளவும் முயலலாம். ஆனால் ஜனாதிபதியும், புதிய பிரதமரும் புலிகளுடன் பேசப்போவதாக அடிக்கடி அறிவித்திருக்கின்றனர்.

## விடுதலைப்புலிகளுக்கான அரசியல் ஆணை

வடக்கு –கிழக்கு மக்கள் பொதுத்தேர்தலில் விடுதலைப் புலிகளின் கொள்கைகளுக்கு மிகப் பலமான ஏகோபித்த அரசியல் ஆணையை வழங்கியுள்ளனர். தமிழினத்தின் ஏகப்பிரதிநிதித்துவத்தை வலியுறுத்துவதற்கான பூரணதகுதிவாய்ந்த அரசியல் இராணுவ இயக்கமாக விடுதலைப்புலிகள் இத்தேர்தலின் மூலம் பரிணாமித்துவிட்டனர்.

இந்தநிலையில் புலிகள் பிரதிநிதித்து வப்படுத்தப்போகும் சமாதானப்பேச்சுவார்த்தையை புதிய அரசாங்கம் எவ்வாறு இழுத்துச் செல்லுமோ தெரியவில்லை. புதிய அரசாங்கத்தை உருவமைக்கப்போகும் இந்திய இராஜதந்திரம், தமிழர்களின் அரசியல் ஆளுமையை மதிக்கும் வகையில் செயற்படுமா? மீண்டும் இந்திய இராஜதந்திரம் குட்டையைக் குழப்பாது என்றே தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

**– யாழ். ஆத்மா –**

---

# வாசகர் இதயம் பேசுகிறது

*தெ.சதீஸ்பாபு – கைதடி*

புதுவருடப் பொழுதில்
புதுமைகள் பல தந்திடும்
சுடர் ஒளியே
வாழபுக நீ பல்லாண்டு
சோதரன் யாழின்
சுடரே நீ கொழும்பில்
வாசகன் நான் உன்னை
வாழ்த்துகிறேன் இந் நாளில்
காலைக் கதிரவனும்
வானின் முழுமதியும்
வாழ்த்துக்கள் கூற
வந்தனவே சுடரே
சோலை மலர்ப் பூவும்
வீசும் தென்றல் காற்றும்
வாழ்த்து மடல் உனக்குத்
தந்தனவே சுடரே
தோகை இளம் மயிலும்
கூவும் இசைக் குயிலும்
சுடரே உன் நலத்தைக்
கேட்குது எம்மிடத்தில்
வாழ்க நீ சுடரே
வளர்க உன் ஒளியே.

*சங்கீதா மகேந்திரன் – யாழ்ப்பாணம்*

அன்புள்ள ''சுடர் ஒளி''க்கு என் வந்தனங்கள்!




ஒளியே உன் பக்கங்களில் வரும் அனைத்து அம்சங்களுமே சிறப்பானவை. அதிலும் கவிதைப் புனல், சினிமாப் பகுதி, சிறுவர் பகுதி, சிறுகதை, பித்தன் பதில் என் மனதை மிகவும் கவர்ந்திருக்கின்றன. வானம்உள்ள வரை, பூமி உள்ள வரை, காற்று உள்ள வரை உன் சேவையும் தொடரட்டும் என வாழ்த்துகின்றேன்.

*தங்கரூபன், விந்தன் – உடையார்கட்டு*

தினமும் வனப்பூவாய் வந்து மணம் வீசும் உனக்கு எமது நன்றிகள். எனது பக்கங்கள் ஒவ்வொன்றும் சொர்க்கங்கள்.

காலத்திற்கேற்றவாறு கோலம் போடும் தன்மை என்றும் புது இனிமையே. வழக்கமாய் என்றும் எம் வாழ்க்கையில் வந்து செல்லும் ஒளியே என்றும் எங்கும் மிளிர வாழ்த்துகிறோம்.

*மகீசா – புத்தளம்.*

சுடர்வீசும் பல அம்சங்களுடன்
எம் இதயங்களை கவரும் சுடர் ஒளியே!
உனது பக்கங்களைப்
புரட்டிப் பார்க்கையில் இன்னொரு
தடவை பார்க்கத் தூண்டும் அம்சமான
நெட் குறும்பு சூப்பரோ சூப்பர்.
சுடர் ஒளியே தொடர்ந்து எம் கரம் சுடர்வீச
வருகைதர எம் இனிய வாழ்த்துக்கள்.



## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ. 23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250-300 Col. C.M.) | | |

யாழ்ப்பாணம்



# அரசியல் அம்பலம்

## சமாதானப்புறாவாக மலைச்சந்திரன்

இரண்டு வருட இடைவெளிக்குப்பின்பு மீண்டும் அமைச்சராகும் வெற்றிக்களிப்பில் இருந்தார் கம்பளை ரத்ன. அவரிடம் அதிகார அம்மணி ஆள்பிடிக்கும் சில பொறுப்புக் களை ஒப்படைத்துள்ளாராம்.

''என்ன ஐயா தூண்டிலை எங்கே வீசி இருக்கிறீர்கள், எந்த மீனாவது சிக்கியதா'' என்று கேட்டார் நண்பர்.

''ஆகா வாங்க மாப்பிளே! எப்படிச்சுகம். நல்லா இருக்கீங்களா'' என்று சுகம் விசாரித் தார் கம்பளை ரத்ன.

''நாங்கள் நல்ல சுகம். இப்பதான் உங்கள் காட்டில் நல்ல மழை பொழிகிறதே! இனி என்ன குறைச்சல்? இனிமேல் எங்களோடு இப்படித் தாராளமாகப் பேசுவீர்களா, இல்லை உள்ளே தான் விடுவீர்களா?'' என்று மடக் கினோம்.

''என்ன மாப்பிளே அப்படிச் சொல்லிப் போட்டீங்க. இந்தக் கம்பளை ஆள் அன்றைக் கும், இன்றைக்கும், என்றைக்கும் இப்படித் தான். நான் மாற மாட்டேன்'' என்றார் ரத்ன.

''அது சரி. நாய் பிடிக்கத்தான் ஆள் விடு வார்கள். நீங்கள் என்னமோ ஆள்பிடிக்கும் பொறுப்பை உங்களிடம் கொடுத்து இருப் பதாக கூறுகின்றீர்கள்'' என விசயத்துக்கு இழுத்தார் நண்பர்.

''ஓ .... அதைக் கேட்டீர்களா? தெரிஞ்சோ தெரியாமலோ புலிகளுடன் பேசுவோம் என்று அம்மா சொல்லிப்போட்டா. இந்தப் போஸ்டர்காரர்கள் புலி என்ற வார்த்தை யையே ஒரு விஷம் போல் பார்க்கிறானுங்க. நேரடியாகப் புலிகளுடன் பேச எங்க கட்சி யிலையும் உருப்படியான ஒரு தமிழர் இல் லையே'' என்றார் கம்பளை ரத்ன.

*என்ன ஐயா, அப்படிச் சொல்லிப்போட்* டீங்க? உங்களுடைய காக்கிச்சட்டைக்காரர்க ளும், வர்ணச்சட்டை வீரர்களும் அங்கு இருக்கின்றார்கள் தானே! அவர்கள் மூலம் பேசலாமே'' என்றார் நண்பர்.

''என்ன மாப்பிளே நீங்க! சமாதானமா கப் பேசுவோம் என்றால் நீங்கள் சண்டைக்கு இல்ல வழி சொல்றீங்க'' என்று சிரித்தார் கம்பளை ரத்ன.

''அப்படீன்னா உங்கள் செட்ல ஒரு ஆள் இல்லையா?'' என்றார் நண்பர்.

''ஆட்கள் நிறையவே இருக்கே! ஆனால், உருப்படியான ஆட்கள் இல்லை. அதுதான் தலவாக்கலைப்பக்கம் தூது அனுப்பி உள் ளோம்'' என்றார் ரத்ன.

''என்ன தலவாக்கல பக்கமா?'' என்று வியந்தார் நண்பர்.

''ஆமாம் மாப்புளே, இப்ப பாருங்க. கிளிநொச்சிக்குப் போய் புலிகளோட நேரடி யாப் பேசக்கூடியவர் யார் இருக்கா?''

''நம்ப மலைச்சந்திரன் தலைவர்தான் இப்ப புலிகளின் கதவைத் தள்ளிக் கொண்டு போகக் கூடிய ஒரு ஆள். மலைச் சந்திரனும் முந்தி அம்மாவோட இருந்த ஆள் தானே! அது தான் முயற்சி பண்ணுகின் றோம். அம்மா எதைக்கொடுக்கவும் தயாராக இருக்காங்க'' என்றார் ரத்ன.

''அப்படீன்னா அந்த சேவல் கொடி யோன் எட்டுப்பே ரோடஇருக்காரே அவரைப் போய் பிடிக்கலாமே!'' என்றார் நண்பர்.

''அது உண் மைதான் மாப் பிளே. அவரோட செக்கு அங்க செல் லாது, அதுதான் மலைச்சந்திர னுக்கு வலை விரித்துஉள்ளோம். எங்களுடைய வலையில் சிக்கி னால் கிளிநொச் சிக்கு அரசின் சமா தானப்புறாவாகப் பறக்க விடவும் அம்மா தயாராக இருக்கின்றார்'' என்றார் ரத்ன.

''அப்படீன்னா நோர்வேக்காரங் களுக்கு அடுத்த படியா தலவாக்க லைச்சந்திரன் தான் மீடியேட்டர்'' என்று சொல்லுங் கள் என்றுசொல்லி விடைபெற்றார் நண்பர்.

## கதிர்காமக் கந்தனுக்கு அரோகரா ஆசை தோசையான கதை

அதிகார அம் மணிக்கு இரண்டு வருடங்கள் அல்ல, அதற்கு மேலும் அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்ற ஆசைதான். அதனால் தான் முதுப்பு உலகம் சுற்றிய வாலிபனாக இருந்த கதிர்காமக்கந்தனைப்பிரதமர் ஆசனத்தில் டம்மியாக அமர்த்தத் திட்மிட்டிருந்தாராம்

இதற்கு சிவப்புச்சட்டை போஸ்டர்காரர் களும் சப்போட்டாம். கதிர்காமக்கந்தன் மீது இவ்வளவு பக்தியா என்ற சந்தேகம் வரவே வழமைபோல் பௌமியமானவரின் நம் பரை சுழற்றினார் நண்பர்.

செல்போன் அல்லவா? நம்பரைப் பார்த் தவுடன் ''ஹலோ தம்பி எப்படி சுகம்'' என்றார் பௌமியமானவர்.

''நான் நல்ல சுகம். ஹாஜி உங்கள் நிலைமை எப்படி? எந்த அமைச்சுப்பொறு ப்பு உங்களுக்கு?'' என்றார் நண்பர்.

''சும்மா இருங்க தம்பி. அவன் அவன் இப் பவே கத்தியையும் கோடரியையும் தூக்கிக் கிட்டு திரியிறானுங்க. நான் இன்னும் அம்மா கிட்டவே போகவில்லை'' என்றார்.

''அது போகட்டும். இந்த போஸ்டர் வீரர் களுக்கு எப்படிக் கதிர்காமக்கந்தன் மீது இவ் வளவு பக்தி. அதைப்பற்றி ஏதும் தெரியுமா? என்று மெதுவாகத் தூண்டிலை வீசினார் நண்பர்.

''ஓகோ! அதைப்பத்திக் கேட்டீர்களா! அந்தக் கதிர்காமக்கந்தனுக்கும், போஸ்டர் வீரர்களுக்கும் எப்பவுமே ஏழாம் பொருத்தம். ஆரம்பம் முதலே சந்தானயாவை எதிர்த்தவர் கதிர்காம மஹிந்தன்.

எப்படியாவது கதிர்காம மஹிந்தனை கதிர்காமத்தாரை கொண்டே வெட்டிவிட்டால் மஹிந்தபெருமாளின் கோயில் பக்கம் தங்களின் கோட்டையைக்கட்டி எழுப்பிவிட லாம் என்பது தான் போஸ்டர்காரர்களின் திட்டம்.

இது எப்படியோ கதிர்காம மஹிந்தனுக்கு எட்டிவிட்டதாம். நீங்கள் தாராளமாக கதிர் காமத்தாரை போடுங்கள். நான் என்னுடைய பரிவாரங்களுடன் சமாதானத்தலைவனிடம் சரணடையப்போகின்றேன் என சிம்பிலாக சொல்லிவிட்டாராம்.

என்னடா இது முதலிலேயே வம்பாய்ப் போய்விட்டதே என்று பதறிப்போன அனு ராகத்தார் உடன்பிறப்பின் காலை கையைப் பிடித்து விசயத்தை சரிக்கட்டி விட்டாராம். இது தான் பின்னணி. மற்றும்படி போஸ்டர்காரர் களுக்கு கதிர்காமக்கடவுளின் மீது லவ் ஒன்றும் இல்லை'' என்று போட்டு உடைத்தார் பௌமியமானவர்.

## கிளைகளை வெட்டிவிட்டவர்கள் மரத்தையே பிடுங்கலாமா?

''என்னதான் இருந்தாலும் இந்த மரநாய கனுக்கு இப்படி ஒரு சோதனையும் வேதனை யும் வரக்கூடாது.'' என தனித்துவக்காங்கிர ஸின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் பெரிதும் விசனப்பட்டார்.

''ஏன் ஐயா நீங்கள் கவலைப்படுகின்றீர் கள். மரநாயகன்தான் கிழக்கில் மகத்தான சாதனை படைத்துவிட்டாரே இன்னும் என்ன வேண்டும்?'' என்றார் நண்பர்.

''சார் நான் யோசினை பண்ணுறன். அரசமைப்பை மாற்றனும். தேர்தல்ல போட்டி போட்ட எல்லாக் கட்சிகளுக்கும் தலா 19 போனஸ் சீட் கொடுக்கவேணும் என்று ஒரு சட்டம் போடணும்'' என்றார் அத்தலைவர்.

''என்ன ஐயா, மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சிப் போடுறீங்க. தலைவரின் சாதனையைப்பற்றிப் பேசி னால் நீங்க சட்டத்தை மாற்றுவதைப்பற்றி பேசுகின்றீர்களே'' என மீண்டும் சீண்டினார் நண்பர்.

''சார் சம்பந்தம் இருக்கு. தலைவர் சாதனை படைத்து விட்டார். கிடைக்கப் போறது ஒன்னோ ரெண்டோ போனஸ் சீட். ஆனால், அதுக்கு இப்பவே ஐம்பது பேர்போட்டி. மரநாய கனின் வீட்டின் முன் வடக்கு, கிழக்கு, மத்தி, தெற்கு என அனைத்து மாகாணங்களும் சங்கமமாகி இருக்கின்றன.

வன்னி ஒரு பக்கம். கிழக்கு மறுபக்கம். புத் தளம் இன்னொரு பக்கம். நடுவுல பேரு வளையும் கொழும்பும் தங்களுக்கே போனஸ் தரவேண்டும் என கேம்ப் அடித்துவிட்டனர்.

ஆதரவாளர்களிடம் இருந்து ஆரவாரம் பண்ணுகின்றனர். மரநாயகன் என்ன செய் வார்? தலையைப் பிச்சிப்புடுங்கிக்கொண்டு தவிக்கின்றார்.

யாருக்குக் கொடுப்பது, எவரை ஒதுக்குவது எனத் தடுமாறுகின்றார். அது தான் கவலை'' என்றார் அந்த சிரேஷ்ட தலைவர்.

''நீங்க சொல்றதும் சரிதான். சீட்டக்காக சீட்டுக்குலுக்கிப்போட்டால் சரி தானே?'' என்று மீண்டும் சீண்டிவிட்டார் நண்பர்.

''சார் அதைவிட இப்ப எனக்கு ஒரு நல்ல ஐடியா வருகுது. இப்ப பாருங்க, எங்க பார்த்தாலும் சுழற்சி முறைப்போராட்டம், சுழற்சிமுறை உண்ணாவிரதம். அந்தமாதிரி இந்த போனஸ் சீட்டையும் ஆளுக்கு ஆறு மாசம் என்று சுழற்சி முறையில் விட்டால் நல்லா இருக்கும் இல் லியா?'' என்றார் மரநாயகன் மீது பற்றும் பாசமும் கொண்ட அந்த சிரேஷ்டதலைவர்.

''ஆகா அருமை யான ஐடியா. உங்க ளுக்கு ஐடியா மன் னர் என்ற பட்டத் தையும் கொடுத்து விடலாம்'' எனக் கூறி விடைபெற் றார் நண்பர்.


சுவிஸில் உங்கள் அபிமான

சுடர் ஒளி

விளம்பர முகவர்

MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND

அனுமதி - வெற்றிடங்கள்

பாலர் வகுப்பு தொடக்கம் London O/L, A/L வரை.

கணிதம், உயிரியல் விஞ்ஞானம், பௌதிகம், வர்த்தகம், P.T Teachers, ஆங்கில பட்டதாரிகளும், பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் Nursery & Primary ஆசிரியர்கள். Clerks & Accounts Clerk விண்ணப்பங்களும் கோரப்படுகின்றன.

KINGSTON COLLEGE INTERNATIONAL

84, De La Salle Road, Mutwal. ☎2527111
40 / 8, Dharmarama Road, Wellawatte. ☎2582497
31, Samudrasanna Road, Mt. Lavinia. ☎4204047
Sri Madura Garden, 573 / 1, Main St, Matale. ☎066-2230229

LOTUS

பாலியல் பலவீனத்திற்கு ரிஷி அஜமாமிச லேகியம்

தேவையில்லை வயாகரா நம்பிக்கையுடன் பாலியல் பலவீனத்திற்கும், ஆண்மைக்கும், வீரிய விருத்திக்கும் ரிஷி அஜமாமிச லேகியம்

ரூபா.250/– தங்கபஸ்பம் கலந்தது ரூபா 1475/–

தங்கபஸ்பம் தனியாகவும் பெறலாம்

மூல வியாதியா ரிஷி லேகியம் பாவியுங்கள். உள்மூலம், வெளிமூலம் இவற்றை சுகப்படுத்தும் ரூபா. 250/–



ஞானசுந்தர வைத்தியசாலை

187, செட்டியார் தெரு, கொழும்பு-11. தொலைபேசி : 2421398

ஊடகமே உலகம்

DIPLOMA IN MASS MEDIA

தபால் மூலம்.

Dip. In. M.M.(Sri Lanka)

6 மாத கால பாடநெறி

தொடர்பு (011) 4512830

MMIC 50, 2nd Floor, "Colombo Plaza" Galle Road, Wellawatta. Colombo - 06.

Mass Media Institute of Ceylon (Pvt) Ltd.

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்ினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...
ஏப்ரல் 24 - 29 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A. Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

கல்முனையில்..
ஏப்ரல் 06, 07, ஆம்
திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பாமசி கல்முனை
Tel No. 067 2229329
Hot Line: 0777 569205

வவுனியாவில்..!.
ஏப்ரல் 10, 11, ஆம் திகதிகளில்.
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...
ஏப்ரல் 15 - 20வரை
A.S.N. கற்றலாவிடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

# சுடர் ஒளி

ஏப்ரல் 12 – 18, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com


## வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில்

பொதுத் தேர்தல் முடிவடைந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது.

எதிர்வரும் 22 அம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது சபாநாயகர் தெரிவு நடைபெறும். அப்பொழுது புதிய அரசுக்கு பெரும்பான்மை உண்டா, இல்லையா என்பது தெரிந்து விடும்.

தேர்தலில் 105 ஆசனங்களைப் பெற்ற சுதந்திரக் கூட்டமைப்பு அறுதிப் பெரும்பான்மை பெற இன்னும் 8 வாக்குகள் தேவை.

ஆட்சிக்கு வந்தால் விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கப் போவதாக ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களில் கூறி வந்தார். தேர்தல் முடிந்த பின்பும் அதனையே அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

இந்த நிலையில் தான் ஹெல உறுமய தனது இனவாதப் போக்கை வெளிக்காட்ட ஆரம்பித்திருக்கிறது. இனவாதத்தில் ஜே.வி.பியையும் மிஞ்சிவிடும் போல் இருக்கிறது ஹெல உறுமய.

ஜே.வி.பியும் அடங்கிய சுதந்திரக் கூட்டமைப்பை விடுதலைப்புலிகள் ஏற்கனவே சந்தேகக் கண் கொண்டு பார்த்து வருகின்றனர்.

''பொதுஜன ஐக்கிய முன்னணியினதும் ஜே.வி.பியினதும் கடந்த காலச் செயற்பாடுகளில் எமக்கு சந்தேகம் உள்ளது. அதில் இருந்து அவர்கள் திருந்தி மாறி வருவார்களானால் அவர்களுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குவோம்'' என்று புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்திருந்தார்.

ஆகவே, சமாதானம் பற்றி ஜனாதிபதி மேடைகளில் பெரிதாகக் கூறிவந்தாலும், புலிகளின் நம்பிக்கையை அவர் இன்னும் முழு அளவின் பெறவில்லை என்பதே உண்மை.

ஹெல உறுமயவின் நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளின் எதிர்காலத்தை மேலும் கேள்விக்குறியாக மாற்றி வருகின்றன.

இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களை புலிகளுடன் மட்டும் நடத்தக் கூடாது என்று ஹெல உறுமய புதிதாக ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறது.

அதேசமயம் பெரும்பான்மைப் பலம் இன்றித் தவிக்கும் சுதந்திர கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு வழங்கப் போவதாகவும் அது அறிவித்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தையில் மூன்றாம் தரப்பு கலந்து கொள்வதை புலிகள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் நடைபெற்ற பேச்சுக்களில் முஸ்லிம் காங்கிரஸை மூன்றாவது தரப்பாக சேர்த்துக் கொள்ளும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், கடைசிவரை அது நிறைவேறவில்லை.

புதிய அரசுக்கு ஆதரவு வழங்கப் போவதாக அறிவித்துள்ள ஹெல உறுமய புலிகளுடன் மட்டும் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என்று கோரி இருப்பது சமாதானப் பேச்சின் எதிர்காலம் குறித்து பெரும் அவநம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறது.

ஹெல உறுமயவின் ஒரே நோக்கம் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவில் பெரும்பான்மைக் கட்சிகள் இருக்கக் கூடாது என்பதும் சமாதானப் பேச்சுக்களில் புலிகளை ஓரம் கட்ட வேண்டும் என்பதுமே.

அரசுக்கு தனது ஆதரவை வழங்கிக் கொண்டு தனது காரியத்தைச் சாதிக்க திட்டமிடுகிறது ஹெல உறுமய.

அத்துடன் புலிகளுக்கு எதிரான சக்திகளை ஒன்று திரட்டி புலிகளை பலவீனப்படுத்தலாம் என்றும் ஹெல உறுமய நம்புகிறது.

யாழ். மாவட்டத்தில் சுயேச்சையாகப் போட்டியிட்டு படுதோல்வி அடைந்த ஆனந்த சங்கரிக்கு தனது தேசியப் பட்டியல் மூலம் எம்.பி பதவி வழங்க ஹெல உறுமய முன்வந்திருப்பது தென் இலங்கையின் இனவாதச் சக்திகள் எவ்வளவு தூரம் சுறுசுறுப்படைந்துள்ளன என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

இரண்டு வருடங்களுக்கு முன்பு புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமானபோது, சிங்கள மக்கள் கடந்த காலத் தவறுகளை உணர்ந்துவிட்டார்கள் என்றே நம்பப்பட்டது.

ஆனால், தற்போது போகிற போக்கு, வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறும் நிலையை தோற்றுவித்துள்ளது.

# ஹெல உறுமயவின் இனவாதமும் சமாதானத்தின் எதிர்காலமும்

13 ஆவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் சுமுகமாக நடந்து முடிந்து விட்டது. புதிய நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 105 ஆசனங்களையும், ஐக்கிய தேசிய முன்னணி 82 ஆசனங்களையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி 22 ஆசனங்களையும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 5 ஆசனங்களையும் பெற்றுள்ளன.

பெ. சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணியும், டக்ளஸ் தேவானந்தாவின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் தலா ஒரு ஆசனங்களைப் பெற்றுள்ளன.

புதிய பிரதமராக முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவாகி ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணமும் செய்து கொண்டார். இந்தத் தேர்தலில் சுதந்திரக் கூட்டமைப்பு 42, 22, 970 வாக்குகளையும் (45.60 சதவீதம்), ஐக்கிய தேசிய முன்னணி 35, 04, 200 வாக்குகளையும் (37.83 சதவீதம்) பெற்றன.

### பிரதமர் தெரிவு குறித்து இழுபறி

ஒன்பது கட்சிகள் அடங்கிய சுதந்திரக் கூட்டமைப்பு அமைக்கப்பட்டதன் நோக்கமே ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிரான சகல சக்திகளையும் ஒன்று திரட்டி ஐக்கிய தேசிய முன்னணி அரசைத் தோற்கடிப்பது தான்.

இந்தக் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட நாளில் இருந்தே முக்கிய பிரச்சினை ஒன்றை ஜனாதிபதி எதிர்நோக்கி வந்தார்.

கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றும் பட்சத்தில் யார் பிரதமர் என்பதே அதுவாகும்.

தேர்தல் பிரசாரக் காலங்களிலேயே பிரதமர் யார் என்பதை பிரதான கட்சிகள் அறிவிப்பது வழக்கம். ஆனால், எதிரணி வேட்பாளர்கள் கூட்டமைப்பின் அடுத்த பிரதமர் யார் என்று தேர்தல் பிரசாரங்களில் கேள்விக் கணைகளைத் தொடுத்த போதிலும் ஜனாதிபதி அதற்கு பதில் அளிக்கவில்லை. புதிய பிரதமர் யார் என்பதில் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் கருத்து ஒருமைப்பாடு ஏற்படத்தவறியதே இதற்குக் காரணம்.

மஹிந்த ராஜபக்ஷ, அநுரா பண்டாரநாயக்க, லக்ஷ்மன் கதிர்காமர், டி.எம்.ஜயரட்ண ஆகியோரின் பெயர்கள் பிரதமர் பதவிக்கு அடிபட்டன.

ஜனாதிபதி, கதிர்காமரையே பிரதமர் பதவிக்கு நியமிக்க விருப்பமாக இருந்தார். பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் கதிர்காமர் வெளிநாடுகளில் நடத்திய ஓயாத பிரசாரங்கள் விடுதலைப்புலிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி இருந்தன. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற வெளிநாடுகள் விடுதலைப்புலிகளைத் தடைசெய்வதற்குக் காரணமாக இருந்தவரும் கதிர்காமர் தான். கதிர்காமரின் ''சேவைக்கு'' பிராயச்சித்தமாக பிரதமர் பதவியை வழங்க ஜனாதிபதி எண்ணி இருந்தார்.

அத்துடன் கதிர்காமரை பிரதமர் பதவியில் அமர்த்துவதன் மூலம் சுதந்திரக் கூட்டமைப்பில் இன வாதம் இல்லை என்று உலக நாடுகளை ஏமாற்றலாம் என்றும் ஜனாதிபதி எண்ணி இருக்கலாம். ஆனால், எல்லாம் பிழைத்துப் போய்விட்டது.

கதிர்காமரை பிரதமர் பதவியில் அமர்த்துவதை சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எதிர்த்தனர்.

கதிர்காமரை நியமித்தால் தென் இலங்கையின் கிராமப் பக்கங்களில் உள்ள கீழ் மட்ட மக்கள் மத்தியில் கட்சியை வளர்த்துக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டு விடும் என்று கருதப்பட்டது. அதே சமயம் நாடாளுமன்றத் தேர்தல் மூலம் வெல்ல முடியாது தேசியப் பட்டியல் மூலம் எம்.பியான ஒருவருக்கு அரசாங்கத்தில் உயர் பதவி வழங்குவதா என்ற கேள்வியும் எழுந்தது.

இந்த நிலையிலேயே சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான பங்காளியான ஜே.வி.பியின் எதிர்ப்புக்கும் மத்தியில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

பிரதமர் பதவிக்கு அநுரா பண்டாரநாயக்க நியமிக்கப்படுவதையே ஜே.வி.பியினர் விரும்பினர். சுதந்திரக் கட்சியின் பிரதான கோட்டையாகக் கருதப்பட்ட கம்பஹா மாவட்டத்தில் விருப்பு வாக்குகளில் அநுரா பண்டாரநாயக்கவுக்கு இம்முறை இரண்டாவது இடமே கிடைத்தது. இது அவரது அரசியல் வாழ்வுக்கு ஒரு பின்னடைவாகக் கருதப்படுகிறது.

கம்பஹா மாவட்டத்தில் இம்முறை ஜே.வி.பியைச் சேர்ந்த விஜிதா ஹேரத் 2, 15, 540 விருப்பு வாக்குகளையும், அநுரா பண்டாரநாயக்க 1,98, 444 விருப்பு வாக்குகளையும் பெற்றனர்.

ஜே.வி.பி உறுப்பினர்கள் இம்முறை 39 பேர் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்டனர். 36 பேர் வெற்றி பெற்றனர். தேசியப் பட்டியில் மூலம் மேலும் மூன்று அல்லது நாலு பேர் தெரிவாகி உள்ளனர்.

சுதந்திரக் கூட்டமைப்பு போட்டியிட்ட பிரதான மாவட்டங்களில் கூடுதலான விருப்பு வாக்குகள் பெற்றவர்களில் ஜே.வி.பியினரே முன்னணியில் இருக்கின்றனர்.

அநுராபண்டாரநாயக்கா பிரதமராக வர முடியாவிட்டால், கதிர்காமர் பிரதமர் ஆவதை ஜே.வி.பியினர் எதிர்க்கவில்லை.

ஆனால், கதிர்காமர் பிரதமராக நியமனம் பெறுவதில் மற்றொரு பிரச்சினையும் தடங்கலாக இருந்தது.

ஆட்சிக்கு வந்தால் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கப் போவதாக ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களில் நாட்டு மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால், கதிர்காமரை பிரதமராகக் கொண்ட அரசுடன் புலிகள் சமாதானப் பேச்சு நடத்துவார்களா என்பது சந்தேகமே. கடந்த காலங்களில் செய்த 'சாதனைகள்'' மூலம் புலிகளின் முழு வெறுப்பைச் சம்பாதித்து விட்டார் கதிர்காமர். கதிர்காமர் பிரதமராக உள்ள ஓர் அரசுடன் புலிகள் நிச்சயமாகப் பேச்சுவார்த்தைக்கு போய் இருக்கமாட்டார்கள்.

ஜனாதிபதியின் விருப்பம் என்னவாக இருந்தாலும் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் நெருக்குதலுக்கு ஜனாதிபதி இணங்கிப் போக வேண்டியதாயிற்று.

மஹிந்த ராஜபக்ஷவின் பதவிப் பிரமாண வைபவம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

அநுரா அதில் கலந்து கொள்ளவில்லை. ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் கலந்து கொள்ளவில்லை. கடைசி நேரத்தில் தான் ஜே.வி.பியின் நந்தன குணதிலக்க வந்து கலந்து கொண்டார்.

### தமிழரசுக் கட்சியின் நிலைமை

புதிய நாடாளுமன்றம் இம்மாதம் 22 ஆம் திகதி கூடுகிறது. புதிய அரசு எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை போதிய பெரும்பான்மைப் பலம் இல்லாமையே.

சுதந்திரக் கூட்டமைப்புக்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் அடுத்ததாக மூன்றாவது பெரிய கட்சியாக 22 ஆசனங்களைப் பெற்று இலங்கை தமிழரசுக் கட்சி விளங்குகின்றது.

கூட்டமைப்புக்குள் ஏற்கனவே ஜே.வி.பி மற்றும் வடக்கு, கிழக்கைத் துண்டாடக் கோரும் முஸ்லிம் காங்கிரஸ் இருப்பதால் இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆதரவைக் கோரும் நிலையில் சுதந்திரக் கூட்டமைப்பு இல்லை. இனவாதிகளால் சூழப்பட்ட சுதந்திரக் கூட்டமைப்பில் சேரும்நிலையில் தமிழரசுக் கட்சியும் இல்லை.

மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த தமிழரசுக் கட்சியின் 5 உறுப்பினர்களின் ஆதரவைப் பெறவும் ஆரம்பத்தில் முயற்சி எடுக்கப்பட்டது.

ஆனால், சுதந்திரக் கூட்டமைப்பில் இந்த ஐவரும் இருக்கும் போது புலிகள் சமாதானப் பேச்சு நடத்த எப்படி வருவார்கள்?

ஒன்பது ஆசனங்களைப் பெற்ற பிக்குகளின் கட்சியான ஜாதிக ஹெல உறுமய ஆட்சி அமைப்பதில் எந்தக் கட்சியையும் தான் ஆதரிக்கப் போவதில்லை என்று ஆரம்பத்தில் கூறி வந்தது. ஆனால், இப்போது அதன் சுருதி மாறிவிட்டது. புலிகளுடன் மட்டும் தனித்து பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என்று அது போடும் நிபந்தனைகளைப் பார்த்தால் ஜாதிக ஹெல உறுமய கட்சியையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு சுதந்திரக் கூட்டமைப்பு புலிகளுடன் சமாதானப் பேச்சை நடத்த முடியாது. பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி நடத்த ஜாதிக ஹெல உறுமய அல்லது இ.தொ.காவின் ஆதரவு சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கு கட்டாயம் தேவை.

தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டியிட்ட இ.தொ.கா. சுதந்திரமாக இயங்கும் என்று அதன் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தற்போது கூறுகிறார்.

இந்தியத் தூதுவர் நிருபம் சென், ஆறுமுகம் தொண்டமானுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து இந்த நிலை உருவாகிஇருப்பதாக அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

பேரியல் அஷ்ரப், அதாவுல்லா கோஷ்டியினர் சுதந்திரக் கூட்டமைப்பில் உள்ளவரை ரவூப் ஹக்கீமின் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவு தரும் நிலையில் இல்லை. சுதந்திரக் கூட்டமைப்பில் சேருவது இல்லை என்று முஸ்லிம் காங்கிரஸ் கூறுகிறது. ஆனால், ஐக்கிய தேசிய முன்னணியுடன் இழுபறி நிலை நீடிக்கிறது.

ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி இம்முறை சிறுபான்மையினர் அதிகமாக வாழும் நுவரெலியா, பதுளை, கண்டி, கொழும்பு மாவட்டங்களிலேயே வெற்றி பெற்றுள்ளது.

வடக்கு – கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கே. ரணில் விக்கிரமசிங்க புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தி வந்தாலும் மறுபுறம் அவர்களைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தார்.

புலிகளைப் பலவீனப்படுத்துவதற்காக சர்வதேச வலைப்பின்னல் ஒன்றை அவர் ஏற்படுத்தியதும் இந்தியாவுடனும் அமெரிக்காவுடனும் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டதும் தென்னிலங்கையில் உள்ள சாதாரண சிங்கள மக்களுக்கு உரிய முறையில் சென்றடையவில்லை.

புலிகள் அமைப்பில் பிளவு ஏற்படுவதற்கு இரண்டு வருடகாலம் சமாதானப் பேச்சுக்கள் இழுத்தடிக்கப்பட்டதும் ஒரு காரணம் என்பதும் தென் இலங்கை மக்களுக்குத் தெரியாமல் போய்விட்டது.

புலிகளுடனான சமாதானப்பேச்சுக்கள் தேசிய நலனுக்கு பெரும் அச்சுறுத்தல் என்பதே தென் இலங்கை மக்களின் சிந்தனையில் இருந்து வருகிறது. புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்திய ஐக்கிய தேசிய முன்னணி தேர்தலில் தோல்வி அடைந்து விட்டதால், சமாதானப் பேச்சுக்களை சிங்கள மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்றே பெரும்பாலான தமிழர்கள் நம்புகின்றார்கள்.

தேர்தலில் ஜாதிக ஹெல உறுமயவும் ஜே.வி.பியும் பெற்ற வெற்றி சிங்கள மக்களின் சிந்தனை எத்தகையது என்பதைக் காட்டுகிறது. ஜே.வி.பி நாட்டை சரியான பாதையில் இட்டுச் செல்லும் என்கிறார் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் டி சில்வா.

### முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம்

முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் இம் முறை 14 ஆகக்குறைந்து விட்டது. கடந்த நாடாளுமன்றத்தில் 26 முஸ்லிம் உறுப்பினர்கள் இருந்தனர். பஷீர் சேகுதாவூத், நூர்தீன் மஷுர், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா ஆகியோர் தோல்வி அடைந்துள்ளனர். இவர்கள் முன்னைய அரசில் பிரதி அமைச்சர்களாகக் கடமையாற்றியவர்கள்.

மற்றும் முன்னாள் அமைச்சர்களான திஸர் தெளபீக், எம்.எஸ்.தெளபீக், சின்ன மஹ்ரூப், எம்.எம்.ஹரீஸ் ஆகியோரும் தோல்வி அடைந்தனர்.

பேரியல் அஷ்ரப், அதாவுல்லா ஆகியோரும் தோல்வி அடைந்து விட்டனர் என்று முதலில் ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன. எனினும் அவை தவறான ஊகங்கள் என்பது பின்னர் தெரியவந்தது.

எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது புதிய சபாநாயகர் தெரிவு நடைபெறும். சபாநாயகர் பதவிக்கு டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டாரவை நிறுத்துவது என ஐக்கிய தேசிய முன்னணி முடிவு செய்துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணிக்கும் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் இடையிலான பலப்பரீட்சையின் ஆரம்பமாக இதுதான் இருக்கப் போகிறது.

-சஞ்சாரன்-


அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்
1-9 தங்ககம்
167, யாழ் சாலை, கிளிநொச்சி
1-9 LODGE
1-9 REST
No: 167, Jaffna Road,
Kilinochchi.
Tel: 0712 349657


இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
வாடிக்கையாளர் நலன் கருதி
புத்தாண்டு தினத்தன்றும்
திறந்துள்ளோம்
365 நாள் சேவை
தொ.பே: 011 2372333
எங்கள் முகவர்கள் வடகிழக்கில்:
யாழ் நகரில்
குமார் ஏஜன்ட்
மகாலக்ஷ்மி ஸ்டோர்ஸ்
ராஜீ ஸ்டோர்ஸ்
கணேஷா ஜுவல் ஹவுஸ்
ஸ்ரீ முருகன்
அட்லஸ் இன்டர்
குகான் கமியுனிகேஸன்
திருநெல்வேலி
திருமுருகன் கொம்நெட்
யோகா கமியுனிகேஸன்
பருத்தித்துறை
கணேஷா
காரைநகர்
ஸ்ரீ முருகன்
மானிப்பாய்
தினேஷ் பேக் ஹவுஸ்
நெல்லியடி
அம்பிகா கமியுனிகேஸன்
நீதினி முகவர் தபால் நிலையம்
கொடிகாமம்
அட்லஸ் இன்டர்
வசந்தா முகவர் தபால் நிலையம்
பொலிகண்டி
ஓம் சரவணபவ கமியுனிகேஸன்
கோப்பாய்
எபணி முகவர் தபால் நிலையம்
இணுவில்
கணேசன் சென்டர்
சாவகச்சேரி
V.M.K. ஜுவலர்ஸ்
நல்லூர்
சந்தியா மள்டிகோட்யாட்
கொக்குவில்
ஞானம்ஸ் முகவர் தபால் நிலையம்
திருகோணமலை
லேசா ஸ்டேசனர்ஸ்
மட்டக்களப்பு
ஈஸ்வரி முகவர் தபால் நிலையம்
ஸ்ரீதரன் கமியுனிகேசன்
ரிவேரா என்டர்ப்ரைசர்ஸ்
காத்தான்குடி
அமானா வங்கி
கல்முனை
அமானா வங்கி
வாழைச்சேனை
TLT இம்பெக்ஸ்
அக்கரைப்பற்று
அடெம்ஸ் முகவர் தபால்
பொத்துவில்
N.M. ட்ரேடர்ஸ்
வவுனியா
கணேசா ஏஜன்சி
அம்பால் ஏஜன்சி
மன்னார்
முஞ்சுளா ஸ்டோர்ஸ்
இப்புதுவருடத்தில்
உங்களின் அன்புக்குரியவர்களிடமிருந்து
WESTERN UNION
MONEY TRANSFER
ஊடாக பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்
WESTERN UNION
MONEY TRANSFER
AUTHORISED AGENT
MMBL Money Transfer (Pvt) LTD
300,GALLE ROAD,COLOMBO-03

# பால் குடித்தவுடன் வாந்தி எடுக்கும் குழந்தைகள்!

**கேள்வி:– எனக்கு குழந்தை பிறந்து இப்போது 3 மாதம். பாலைக் குடித்தவுடன் சிறிது நேரத்தில் அப்படியே குடித்த அவ்வளவு பாலையும் வாந்தி எடுக்கிறது. பல டாக்டர்களிடம் குழந்தையைக் காட்டினேன். பெரிய நோய் ஒன்றும் இல்லை. காலகதியில் சுகமாகிவிடும் என்றார்கள். எனது குழந்தையின் நிலைமை பற்றி விளக்கமாகக் கூறுங்கள்.**

பதில்:– பிறந்த குழந்தைகள் அடிக்கடி வாந்தி எடுப்பது பெரும்பாலும் சாதாரண விஷயம்தான். வாந்தி எடுக்கும் போது–ஓங்காளித்து பெரும் அளவில் தூரத்துக்கு வீசுவதுபோல் (PROJECTILE VOMITING) வாந்தி எடுத்தால் செமிபாட்டு தொகுதியின் மேல் பகுதியில் ஒரு தடை இருப்பதாகக் கொள்ளலாம்.

இந்நிலையில் குழந்தை எடைபோடாது. போஷாக்கு இல்லாத குழந்தைபோல் இருக்கும். இந்தக் குழந்தைகளுக்கு சத்திரசிகிச்சை செய்வது அவசியம் . ஆனால், அநேகமாக குழந்தைகள் வாந்தி எடுப்பதற்கு பல சாதாரண காரணங்களே முக்கியமாக இருக்கின்றன.

முதலாவது முக்கிய காரணம் குழந்தையின் வயிற்று அளவைவிட அதிகமாக பலூட்டுவதே. இந்தக் குழந்தைகள் அடிக்கடி வாந்தி எடுத்தாலும் புஷ்டியாக இருக்கும்.

இன்னும் சில தாய்மார்கள் பாலைக் கொடுக்கும் போது – சரியான முறையில் கொடுக்காததால் குழந்தை பாலோடு, கொஞ்சம் காற்றையும் வயிற்றினுள் நிறைத்துக்கொள்ளும். இதனாலும் குழந்தை பாலுண்டபின்னர் வாந்தி எடுக்கக்கூடும். இந்தக் காற்றை – பால் கொடுத்து முடிந்த பின்னர்– குழந்தையை தாய்தன் தோளில் போட்டு – குழந்தையின் முதுகுப்புறத்தில் மெல்லத் தட்ட – வயிற்றினுள் இருந்து காற்று வெளியேறிவிடும். குழந்தையும் வாந்தி எடுக்காது.

சிலதாய்மார் பால் கொடுத்தபின்னர் – குழந்தையை தூங்கச்செய்ய – காலில் போட்டு விரைவாக ஆட்டுவார்கள். இந்தக் குலுக்கலிலும் குழந்தை வாந்தி எடுக்கலாம்.

சில குழந்தைகளுக்கு செமிபாட்டுத் தொகுதியில் வயிற்றுக்கும் – உணவுக் குழாய்க்கும்(OESOPHAGUS) இடைப்பட்ட பகுதியில் உள்ள வால்வு பூரண வளர்ச்சியடையாமல் இருக்கும். இக்குழந்தைகளுக்கு சிறிய குலுக்கல் கூட வயிற்றில் உள்ள பாலை வெளியில் கொண்டுவந்துவிடும்.

ஆனால், இந்த நிலை குழந்தை வளரவளர தானாகவே சரியாகிவிடும். உங்கள் குழந்தைக்கும் மேற்கூறிய சாதாரண காரணங்களில் ஒன்றாக இருந்ததனால் தான் உங்கள் வைத்தியர் உங்களுக்கு அப்படிக் கூறினார்.

**கேள்வி:–என் மகனுக்கு வயது 16. ஆண்மகனுக்குரிய இலட்சணங்களான மீசை, தாடி முளைத்திருக்கின்றன. ஆனால், குரல் தான் பெண் குரல்போல் இருக்கின்றது. வயதுக்கு ஏற்ப குரல் மாறவில்லை இது நோயா? சிகிச்சை கூறவும்.**

பதில்:– ஆண்– பெண் இருபாலாருக்கும் சிறுவயதில் ஒரே வித ஒலியுள்ள குரலாகத்தான் இருக்கும். பருவமடையும் போது–இவர்களின் LARYNX அல்லது VOICE BOX என்ற குரல் வளையில் முதிர்ச்சி மாற்றங்கள் ஏற்படுகின்றன.



இந்த மாற்றங்கள் ஆண்களில் கொஞ்சம் அதிகமாகவும், பெண்களில் குறைவாகவும் ஏற்படுகின்றன. குரல்வளையில் சத்தத்தை உருவாக்க VOCAL CORDS என்ற ஒரு சோடி குரல் நாண்கள் உள்ளன. பருவத்தின் போது இதன் பருமன் தடிப்பதால், குரல் மாற்றமடைகின்றது. இதனால் ஆண்களுக்கு பருவவயது அடையும் போது குரல் உடைந்து ஆண்மைகுரிய கம்பீரமான தடித்த குரல் வருகின்றது.

சிலவேளைகளில் பருவமாற்றத்துக்குரிய – மற்றைய மாற்றங்களான முகத்தில் உரோமம் வளர்தல் என்பன சாதார்ணமாக ஏற்பட்டாலும் பருவமடைவதற்கு முன்னாலிருந்த குரல் மாறுவதே இல்லை. இதனை – மருத்துவத்தில் PUBERPHONIA அல்லது MUTATIONAL FALSETTO என்று கூறுவர்.

அப்படி நடைபெறுவதற்கு பல காரணங்களை சொல்கின்றார்கள். சகல காரணங்களும் மனோயியல் அடிப்படையைக் கொண்டுள்ளன.

## இது நோயா? தடுக்க வழி உண்டா?

பருவமடைந்து பெரியவனாகினால் பொறுப்புகள் வந்துவிடுமே என்ற பய உணர்வு, தனது வயதொத்தவர்களுக்கு குரல் உடையுமுன்னரே தனக்கு ஏற்பட்டு விட்டது என்ற கூச்ச உணர்வு, குரல் உடைந்ததால் தன்னை பெரியவனாகக் கருதி தாயின் அன்பை இழந்து விடுவோமோ என்ற அச்ச உணர்வு–போன்ற காரணங்கள் பருவமடைந்தும் குரல் மாறாமலிருப்பதற்கு காரணங்களாக கருதப்படுகின்றன.

இவர்களுக்கு – COUNSELLING என்ற மருத்துவ ஆலோசனை தேவை. ஆலோசனையின் போது இந்த உணர்வுகளை விளங்கப்படுத்தி– அவர்களின் மனதை திடப்படுத்திய பின் – SPEECH THERAPY என்ற பேச்சுப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இதனை SPEECH PATHOLOGIST என்ற விசேட சிகிச்சை நிபுணரிடம் பெறவேண்டும். ஒரு முக்கியமான விஷயம். இதனால் பாதிக்கப்பட்ட நோயாளி – தானாக முழுமனதோடு விரும்பி சிகிச்சை பெற்றால் மட்டுமே இந்தச் சிகிச்சையில் குணம் காண முடியும்.

**கேள்வி:– வயது 48 பெண். கால், கை, பாதங்கள் மிளகாய் அரைத்து பூசியதுபோல் எந்த வேளையும் எரிந்து கொண்டேயிருக்கின்றன. இரவில் எரிவு அதிகம். பாதங்களில் உணர்ச்சி குறைவு. நடந்தால் சாணியை மிதித்தபின் நடப்பதுபோல் பாதத்தில் ஒரு உணர்ச்சியுமே தெரிவதில்லை. டாக்டரின் ஆலோசனைப்படி விற்றமின் BCO ஊசி போட்டும் குணமில்லை சிகிச்சை கூறவும்.**

பதில்:– உங்களுக்கு ஏற்பட்டுள்ளது PERIPHERAL NEURITIS என்ற நரம்பு தளர்ச்சி நோய். ஆண்களைவிடப் பெண்களே இந்நோயினால் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள்.நரம்புகளில ஏற்படும் அழற்சி, அழிவுப்பாடு (DEGENERATION) என்பவற்றால் தான் இது ஏற்படுகின்றது. விட்டமின் B சத்து குறைவு, மதுபானம் அருந்தல், நீரழிவு வியாதி என்பன இந்த நரம்புத் தளர்ச்சிக்கு காரணங்களாகின்றன. B விட்டமின் ஊசி மருந்துகள், E விட்டமின்கள், PRIMROSE OIL என்ற மருந்து, GINSENG மாத்திரைகள் ஓரளவிற்கு இந்த நோயிலிருந்து நிவாரணம் தந்தாலும் முற்றாக குணமடையலாம் என்பது சந்தேகமே.

**கேள்வி:– வயது 28. கர்ப்பமாயிருக்கின்றேன். இப்பொழுது 8 மாதம். எனது மகப்பேற்று மருத்துவர் சிறுநீர்ப் பரிசோதனை செய்தபோது நீரிழிவு (DIABETES) நோயிருப்பதாக கண்டறிந்தார். ஆகார கட்டுப்பாட்டின் மூலமும் – இன்சுலின் மூலமும் நீரிழிவு நோயை கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றேன். எனக்கோ என் குடும்பத்திலோ இதுவரை ஒருவருக்கும் நீரிழிவு நோய் இருந்ததில்லை. ஏன் எனக்கு இப்படி ஏற்பட்டது?**

பதில்:– குடும்பத்தில் நீரிழிவு நோய் இல்லாவிடினும் கர்ப்பிணி தாய்மாருக்கு 7–8 மாத கர்ப்பகாலங்களில் நீரிழிவு நோய்க் குணம் காணப்படுவதுண்டு. இதனை கர்ப்பகாலத்து நீரிழிவு (GESTATIONAL DIABETES) என்று சொல்வார்கள்

கர்ப்பகாலத்தில் ஏற்படும் மனநெருக்கம் (STRESS) மற்றும் சிறுநீரகங்களின் வடிகட்டும் பண்பில் ஏற்படும் தளர்வு என்பன இதற்கான காரணங்களாகச் சொல்லப்படுகின்றன.

பிரசவம் ஆகி – ஓரிரு மாதங்களில் இந்த நீரிழிவுக்குணம் மறைந்து போய்விடும். ஆனால், இப்படிக் கர்ப்பகாலங்களில் நீரிழிவுக்குணம் தோன்றும் பெண்களில் 75 வீதமானோர் பிற்காலங்களில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுவதுண்டு என்று மருத்துவ ஆய்வுகள் பகருகின்றன.

கர்ப்பகாலத்தில் ஏற்படும் நீரிழிவு குணத்தினால் கர்ப்பத்தில் உள்ளகுழந்தை பெரும் வளர்ச்சி அடைவதுண்டு. சில குழந்தைகள் 5 கிலோவரை பிறப்பு நிறை கொண்டவர்களாகப் பிறப்பதும் உண்டு.

மேலும் இம்மாதிரியான நீரிழிவு நோய் ஏற்படுவதால் – குழந்தை பிரசவ காலத்திற்கு முன்னரே கர்ப்பத்தில் இறந்துவிட நேரிடலாம். எனவே நீரிழிவை கர்ப்பகாலத்தில் கட்டுப்பாட்டுடன் வைத்திருப்பது மிகவும் அவசியம்.

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | அன்பு மடல் | அன்பு மடல் |
| 7.05 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | வணக்கம் தாயகம் | காலைக்கதிர் |
| 7.30 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சங்கீதமேடை | காலைக்கதிர் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நேரம் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | கிட்ஸ் மூவி | சிறுவர் நேரம் |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | குட்டி சுட்டி | ஸ்டார் சமையல் |
| 9.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமால. ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கானங்கள | இசைத் தென்றல் | திரைவானம் | டொப் 10 மூவிஸ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மறக்க முடியுமா | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | சுப்பர் சீனஸ் | திரை விமர்சனம் | மீண்டும் சிரிப்பு | பிரபலன்கள் ரசித்தவை | ரிலாக்ஸ்டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார்ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை (நேரடி) | வீக் என்ட் மேட்னி | பிளாக் பூஸ்டர் மூவி |
| 2.00 | (ரொமேன்ஸ்) | (அக்ஷன்) | (கொமடி) | (கிளசிக்) | (மங்கையர் நிகழ்ச்சி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | (விவரண சித்திரம்) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னிவேல்ட் | டிஸ்னிவேல்ட் | கில்லி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஜீபூம்பா |
| 4.30 | கேர் பியர்ஸ் | ஹி–மேன் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஓ போடு |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் சீன்ஸ் | என்றும் கலாட்டா | நகைச்சுவை நேரம் | வேலன் |
| 5.15–5.30 | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத தென்றல் | இசைத்தென்றல் | 5.30 6.00 இப்படிக்கு நீங்கள் | வேலன் |
| 6.00 | களம் | இளைய கானம் | ஓப்போடு | பாடல்கள் | கோல்டன் முமன்ஸ் ஒவ் கிரிகெட் | மின்னல் | மின்னல் |
| 6.30 | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | மின்னல் | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | அக்ஷன் சீரியல் | அக்ஷன் சீரியல் |
| 7.30 | நதி எங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | நதிஎங்கே போகிறது? | (அலைஸ்) | (24) |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | ருத்ர வீணை | இளைய கானம |

# ஜெனிவா மாநகரையே உலுக்கிய பொங்கு தமிழ் நிகழ்வு



உண்மையில் இன்றைய இக்கட்டான சூழலில் பிரதேச வாதமும், துரோகத்தனமும் தலைதூக்கித் தாண்டவமாடும் நிலையில் இலங்கைத் தமிழர் மட்டுமன்றி, புலம் பெயர் மக்களும் தடம் பிறளாது, நிலை பிறளாது தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதி பிரபாகரனே என்ற ஆணையை வழங்கியுள்ளமை, தமிழ் மக்களின் தெளிவான சிந்தனையையும் தலைவர் மேலுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையையும் காட்டுகின்றன.

தமிழினம் தனது இலட்சியப் பாதையில் மெல்ல மெல்ல முன்னேறி தடம் பதித்து வரும் நாட்களில் அதன் இலட்சியத்தை முறியடிக்கவென்றே சில தீய சக்திகள் இயங்குவதும், அவற்றுக்குத் துணை போகும் கோடரிக் காம்புகளும் முளைவிட்டு இலட்சியங்களை கொச்சைப்படுத்தியும், தேசியத்தை பேரம் பேசியும்வரும் நிலையில் மக்கள் தெளிந்த நீரோடை போன்ற சிந்தனை கொண்டிருப்பது பாராட்டத் தக்கவிடயம்.

தமிழ் மக்கள் தமது ஏகப் பிரதிநிதி பிரபாகரனே என கடந்த 2ஆம் திகதி இடம் பெற்ற தேர்தலில் மொத்தமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 20 உறுப்பினர்களைத் தெரிவு செய்து நிரூபித்தனர். அது மட்டுமன்றி, கடந்த 5 ஆம் திகதி ஜெனீவாவில் இடம் பெற்ற பிரமாண்டமான பொங்கு தமிழ் நிகழ்வில் ஒன்று கூடிய பல்லாயிரம் தமிழ் மக்களின் பங்களிப்பும் இதனையே பிரதி பலித்துள்ளது.

அன்று இடம் பெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் பல்வேறு நாடுகளிலிருந்தும் தமிழ் மக்கள் ஜெனிவாவுக்கு வந்து தமது அபிலாஷையை உலகமறியச் செய்துள்ளனர். சுவிட்ஸர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க், நோர்வே, ஹொலண்ட் மற்றும் ஐரோப்பாவின் பல பாகங்களிலிருந்தும் தன்சானியா, தென்னாபிரிக்கா, மலேசியா, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற நாடுகளில் இருந்தும் பொங்கு தமிழுக்காக மக்கள் வந்திருந்தனர். இவர்கள் தமிழீழத் தேசியக் கொடியுடன் தாம் வசிக்கும் நாடுகளின் கொடிகளையும் ஏந்தி வந்து அந்த நிகழ்வை சிறப்புற வைத்தது மட்டுமன்றி, தமிழ் தேசியம் மீதான தமது பற்றுறுதியையும் வெளிப்படுத்தி உள்ளனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் தொகை ஜெனிவா நகரையே திக்குமுக் காடச் செய்து பேரதிர்ச்சிக்குள்ளாக்கி உள்ளது.

இந்த எழுச்சிப் பேரணி ஜெனிவா ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பமாகியது. பேரணி ஆரம்பமாகி 4 மணித்தியாலங்களின் பின்பும் ஆரம்பித்த இடத்திலிருந்து கூட்டம் நகர்ந்த வண்ணமே இருந்தது என்ற ஆரம்பச் செய்தியே பேரணியின் பெரு வெற்றிக்கு கட்டியம் கூறிவிட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னுள்ள மைதானம் சனத்திரளை உள்ளடக்கப் போதாமல் இருந்ததால் வெளியே பல வீதிகளை மூடி, மக்களை அப்பகுதிகளில் இருந்து நிகழ்வுகளைப் பார்க்க ஒழுங்கு செய்யப்பட்டதால் நாட்டின் பல பகுதிகளில் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது.

ஆரம்பத்தில் 15,000 மக்களே கலந்து கொண்டதாக கணிக்கப் பட்டாலும் பின்னர் கலந்து கொண்ட ஜனத்திரள் இதனைப் பொய்யாக்கி விட்டது.

இணைந்து கொண்ட மக்கள் அனைவரும் தமிழ்த் தேசியத் தலைவரின் படத்தை ஏந்தி வந்தனர்.



''எங்கள் சூரியத்தேவன்'' என்று ஒருவர் முழக்கமிட ''பிரபாகரன்'' என்று உரத்து முழக்கமிட்டு தமிழ் தேசியத்தின் மீதான பற்றுதலையும், தலைவர் மீதான நம்பிக்கையையும் ஜெனீவா வீதிகளில் உரத்து முழக்கமிட்டு வெளிப்படுத்தினர்.

''எங்கள் தலைவர் பிரபாகரனே! எங்கள் காப்பரண் புலிப்படையே! எங்களுக்கு ஒரே தலைவர் பிரபாகரனே! தமிழீழத் தாயகம் தான் எமக்கு ஒரே தாயகம்!! வடக்கு – கிழக்கே எமது தாயகம்!! தமிழீழத் தாயகமே எங்கள் தாகம்!!'' என மக்கள் அனைவரும் முழங்கிய வண்ணம் சென்ற காட்சி புரட்சிகரமாயமைந்தது.

தமிழீழத்தின் பாரம்பரிய கலை நிகழ்வுகள் இந்தப் பேரணியில் இடம் பெற்றன.




பேரணி நிறைவில் தமிழீழத்திலிருந்து வந்திருந்த தலைவரின் பிரதிநிதிகளும், விடுதலைப்புலிகளின் சர்வதேச சட்ட ஆலோசகர் ருத்திரகுமார், அருட்தந்தை கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவெல், யாழ்.பல்கலைக் கழகப் பேராசிரியர் சிதம்பரநாதன் என்போர் உரையாற்றினர்.

யாழ். மண்ணிலிருந்து ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ள பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரகுமார் ஆகியோரின் வாழ்த்துச் செய்திகளும் வாசிக்கப்பட்டன.

அன்று இந்நிகழ்விற்கு முன்னர் செய்தியாளர் சந்திப்பு நடந்தது. அருட்தந்தை கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவேல் தலைமையிலான இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் மட்டக்களப்பு – அம்பாறை பகுதியின் அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன், விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் கரிகாலன், சட்டத்தரணி வி.ருத்திரகுமார், யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் சிதம்பரநாதன், சுவிஸ் வாழ் தமிழ் அமைப்புக்களின் கூட்டமைப்பின் செயலாளர் அன்ரன் பொன்ராஜா ஆகியோர் பங்கேற்றனர்.

பெருந்திரளான எண்ணிக்கையில் செய்தியாளர்கள் கலந்து கொண்ட இச்சந்திப்பில் கௌசல்யன், கரிகாலன் உட்பட வி.ருத்திரகுமாரும் விளக்கங்களை வழங்கினர்.

மட்டக்களப்பில் தற்போதுள்ள நிலை தற்காலிகமானதாகவும் இது பற்றி சர்வதேச சமூகத்திற்கு தாம் விளக்கம் கொடுத்து வருவதாகவும் கரிகாலன் கூறினார்.

இந்தப் பொங்குதமிழ் நிகழ்வானது உலகெங்குமுள்ள தமிழ் மக்களின் தமிழ்த் தேசியப்பற்றையும், தமிழீழத் தேசியத் தலைவர் மீதுள்ள நம்பிக்கையையும் புடம் போட்டுக் காட்டுகின்றது.

–ஆஷா–


அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

வன்னி மக்களின் தேவைகளை நிறைவு செய்யும்

மருதம் வாணிபத்தின்

புதிய சேவைகள்

அணைகலன் வாணிபம்
முதன்மைச் சாலை,
கிளிநொச்சி.

Nilkamal
வன்னி முகவர்

வடபகுதிக்கான முகவர்



காலணி வாணிபம்
முதன்மைச் சாலை, கிளிநொச்சி.
Bata வன்னி ஏக முகவர்

கோழிப் புலால்
விற்பனை நிலையம்
முதன்மைச் சாலை, கிளிநொச்சி.
வழமையாளர்களின் தேவையை
உடன் நிறைவு செய்ய குளிரூட்டப்பட்ட/
உடன் கோழி இறைச்சியை
எந் நேரத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.


வணிகர்களுக்கு சிறப்புக் கழிவு வழங்கப்படும்

# பித்தன் பதில்கள்

*க.அர்ச்சனா, புத்தளம்*

கேள்வி:— பித்தா! உண்மையைச் சொல்லும். நீர் உமது மனைவியை கண்கலங்காது பார்த்துக் கொள்கிறீரா? சொல்லும்?

பதில்:— ஐய்யய்யோ.. அந்த அநியாயத்தை ஏன் கேட்கிறீர்கள். மனைவி கொஞ்சம் கோபக்காரி என்றாலும் கேட்பதெல்லாம்



வாங்கிக்கொடுத்து கண் கலங்கவிடாமல் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வருகிறேன் தான். ஆனால், என்ன பிரயோசனம்? ரீ விக்கு முன்னால் போயிருந்து குங்குமம், கோலங்கள் என்று பார்க்கத் தொடங்கினால்.... அவ்வளவுதான்... கண்ணிலிருந்து பொல... பொல தான்.

*ஜெ.தர்சன், ஸ்கந்தபுரம்*

கேள்வி:— ஹலோ பித்தா! நானும்— மனைவியும் வீதியால் வரும்போது நாய் ஒன்று என்னை விட்டு விட்டு – எனது மனைவியை மட்டும் துரத்தக் கனவு கண்டேன். என்ன காரணமாக இருக்கும்?

பதில்:— ஊரில் எவ்வளவோ ஒழுங்கான மூஞ்சிகளெல்லாம் இருக்கும்போது— உமக்கு இந்த மூஞ்சிதானா கிடைத்தது? 'கர்மம்... கர்மம்... பேசாமல் ஓடிப் போய் ஒழுங்கான ஒரு மூஞ்சியைப் பிடி' என்று துரத்தி இருக்கும்.



*க.மதிவதனன், மல்லாவி*

கேள்வி:— இன்றைய தகவல் யுகத்தில் மட்டக்களப்புக்குள் வரவிடாமல் செய்திப் பத்திரிகைகளை தடை செய்வதன் மூலம் கருணா எதனைச் சாதிக்கப்போகிறார்?

பதில்:— இந்திய இராணுவம் இருந்த காலங்களில் வடபகுதியில் இருந்த நிலைமைதான் தற்போது மட்டக்களப்பில். அப்போது இந்திய இராணுவமும், தமிழ்க் குழுக்களும் கூட்டாகச் சேர்ந்து போட்ட ஆட்டத்தினால்தான் மக்கள் விடுதலைப் புலிகளின் பக்கம் திரும்பினார்கள். அதிகமான இளைஞர்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்தார்கள். இதேபோன்ற ஒரு நிலைமையைத்தான் தற்போது கருணா அங்கு ஏற்படுத்துகிறார். அவரது நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் அங்கு விடுதலைப் புலிகள் எப்போது வருவார்கள் என்ற ஏக்கத்தைத்தான் அதிகரித்து வருகிறதே ஒழிய.... கருணா பக்கம் சாதகமானதாக அமையப் போவது இல்லை. அதேபோன்றதே பத்திரிகைத் தடையும். பத்திரிகைகளை அங்கு தடை செய்யச் செய்ய மக்களுக்கு பத்திரிகைகளை வாசிக்கும் ஆர்வம் அதிகரிக்கிறதாம். கொழும்பிலிருந்து – யாராவது உறவினர்கள் வீடுகளுக்கு வந்தால் ஓடிச் சென்று பத்திரிகை வாங்கி வந்தீர்களா என்று கேட்கிறார்களாம் சுற்றத்தார்.

*க.மதிவதன், மல்லாவி*

கேள்வி:— ஐயா! பொதுவாக ஒரு குடும்பத்தில் பிள்ளைகள் – அம்மாவை நல்லவர் – அன்பானவர் என்று சொல்லும் அதே நேரம் – அப்பா அதே அம்மாவைக் குறை சொல்கிறாரே காரணம் என்ன?

பதில்:— தம்பி... சங்கடமான கேள்விதான். ஆனால், உண்மை என்னவென்றால் பிள்ளைகளுக்கு இருப்பதெல்லாம் ஒரே ஒரு தாய். அதனால் அவர் நல்லவரா— கெட்டவரா – அன்பானவரா – அன்பில்லாதவரா என்றெல்லாம் ஒப்பீடு செய்து பார்க்க முடியாது என்பது மட்டுமல்ல. ஒப்பீடு செய்து பார்க்க வேறொருவர் கிடைக்கவும் மாட்டார். ஆனால், அப்பாமார் நிலை அப்படியல்ல. பெரிய வீடு – சின்ன வீடு என்று ஏகப்பட்ட வீடுகள் இருக்கும். அதனால் எவ்வளவுதான் விழுந்து விழுந்து உபசரித்தாலும் குறை சொல்வது என்பது தவிர்க்க முடியாததாக இருக்கும்.



*க.கருணா, யாழ்.பல்கலைக்கழகம்*

கேள்வி:— பித்தா! உங்களுக்கு உங்கள்வீட்டாரையா, மனைவி வீட்டாரையா அதிகம் பிடிக்கும்?

பதில்:— எங்கள் வீட்டாரை மனதாரப் பிடிக்கும். மனைவி வீட்டாரை பயத்திலே பிடிக்கும்.

*ஸ்ரீதேவி, மட்டக்களப்பு*

கேள்வி:—தேர்தலில் போட்டியிடுபவர் எப்படி இருக்க வேண்டும்?

பதில்:— ஆறறிவு படைத்தவராக இருக்க வேண்டும்.

*சி.சர்மி, வட்டக்கச்சி*

கேள்வி:—பித்தனே! காதல் திருமணமா? பெற்றோர் பேசிச் செய்யும் திருமணமா எது சிறந்தது?

பதில்:— சர்மி ... உமக்கு தற்போதைய நிலையில் நல்ல காதலர் ஒருவர் மாட்டிவிட்டாரா? அப்படியென்றால் காதல் திருமணம்தான் நல்லது. அல்லது இதுவரை காதலர் ஏவருமே சிக்கவில்லையா? அப்படியென்றால் பெற்றோர் பேசிச்செய்யும் திருமணமே சிறந்தது.

*எஸ். விஜயன், யாழ்.பல்கலைக்கழகம்*

கேள்வி:— அன்புள்ள பித்தா! எனக்கு கறுப்பு நிறம் பிடிக்கும். எனது காதலிக்கு நீல நிறம் பிடிக்கும். இருவரும் திருமணம் செய்து கொள்ளலாமா?

பதில்:— இருவருக்கும் எப்போது கரு – நீலம் பிடிக்கத் தொடங்குகிறதோ... அப்போது திருமணம் செய்தால் குடும்பம் குழப்பமில்லாமல் இருக்கும்.

*கை.பொன்கலன், பண்டத்தரிப்பு*

கேள்வி:— மது அருந்துபவர்கள் எல்லோரும் கெட்டவர்களா? அருந்தாதவர்கள் எல்லோரும் நல்லவர்களா?

பதில்:— குடிப்பவர்களில் நல்லவர்களும் இருக்கிறார்கள் – குடிக்காதவர்களில் கெட்டவர்களும் இருக்கிறார்கள். குடிப்பவர்களில் பலர் மப்பு ஏறிய போது கெட்டவர்களாகவும் – மப்பு இறங்கியபின் நல்லவர்களாகவும் இருக்கிறார்கள். வேறு சிலர் மப்பு ஏறிய போது நல்லவர்களாகவும் – மப்பு இறங்கிய பின் கெட்டவர்களாகவும் இருக்கிறார்கள். சிலர் மப்பு ஏறினால் என்ன இறங்கினால் என்ன கெட்டவர்களாகவே இருக்கிறார்கள். வேறு சிலர் மப்பு ஏறினால் என்ன இறங்கினால் என்ன நல்லவர்களாகவே இருக்கிறார்கள்.

ஆனால், குடிக்காதவர்கள் நிலைமை வேறு. அவர்கள் குடிக்காதவர்கள் என்ற போதிலும் அவர்களில் சிலர் கெட்டவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால், குடிக்காதவர்கள் என்ற காரணத்தினால் அவர்களை நாங்கள் நல்லவர்கள் என்று கூறி விட முடியாது. சிலர் முன்னர் குடிக்கும் போது கெட்டவர்களாக இருந்தார்கள். இப்போ குடியைவிட்டு விட்டு நல்லவர்களாகி விட்டார்கள். வேறு சிலர் முன்னர் குடிக்கும்போது நல்லவர்களாக இருந்தார்கள். இப்போ குடியைவிட்டபின் கெட்டவர்களாகி விட்டார்கள். வேறு சிலர் முன்னர் குடிக்கும்போதும் கெட்டவர்களாகவே இருந்தார்கள். இப்போ குடியைவிட்ட பின்பும் கெட்டவர்களாகவே இருக்கிறார்கள்.

அதேபோல் சிலர் முன்னர் குடிக்கும் போதும் நல்லவர்களாகவே இருந்தார்கள். இப்போ குடியைவிட்ட பின்பும் நல்லவர்களாகவே இருக்கிறார்கள். இதனை வைத்துக் கொண்டு முன்பு குடித்துவிட்டு இப்போ குடியை விட்டு விட்டவர்களெல்லாம் கெட்டவர்கள் என்ற முடிவுக்கும் நாம் வந்துவிட முடியாது. அதேவேளை முன்பு குடித்து விட்டு இப்போ குடிக்காமல் இருப்பவர்களை எல்லாம் நல்லவர்கள் என்ற முடிவுக்கும் நாம் வந்துவிடக்கூடாது.

இதேவேளை முன்பு குடிக்காமல் இருந்து விட்டு இப்போ குடிக்கத் தொடங்கி இருக்கிறார்களே! அவர்கள் பற்றி சொல்லப்போனால்.... ( என்ன பொன்கலன் இந்த விளக்கம் போதுமா.... அல்லது இன்னும் விலாவாரியாக விளங்கப் படுத்த வேண்டுமா?)

*து.விவேக், பாண்டிருப்பு*

கேள்வி:—பித்தா! நீர் சீதனம் வாங்கித்தான் உமது மனைவியைத் திருமணம் செய்தீரா?

பதில்:— நானா? சீதனமா? சீ... சீ... எனது மனைவியின் வீட்டார் எவ்வளவோ வற்புறுத்தினார்கள். கட்டுக்கட்டாக பணத்தைக் கொண்டு வந்து கொட்டித் தரத் தயாராக இருந்தார்கள். பித்தனா.... கொக்கா... கைகளினால் தொடமாட்டேன் என்றுவிட்டேன்... வங்கியிலே எனது பெயரில் போடச் சொல்லிவிட்டேன்.

*வி.சதாசிவம், வவுனியா*

கேள்வி:— தேர்தல் முடிவுகளைப் பார்த்தால் மீண்டும் சண்டை தான் வரும் போலிருக்கிறது?

பதில்:— எங்கே – வடக்கு – கிழக்கிலா? நான் அப்படி நினைக்கவில்லை. ஏனென்றால் தற்போது கிடைத்திருப்பதோ அறுதிப் பெரும்பான்மையற்ற அரசு. ஆகவே.... இதுவும் நித்யகண்டமாகத்தான் இருக்கப் போகிறது. எனவே ஆட்சிக்கு வரும் அரசியல் கட்சிக்குள்தான் அடிக்கடி சண்டை வரலாமே ஒழிய.. வடக்கு–கிழக்கில் சண்டை வர நாளாகும்.

*பி.செந்தில், வண்ணார்பண்ணை*

கேள்வி:— பித்தா! எப்போதும் மனைவியிடம் அடிவாங்குகிறீரே.. ஒரு நாளைக்கு ஓங்கி ஒன்று கொடுத்துப் பாருமேன்?

பதில்:— சில வேளைகளில் எனக்கும் அப்படித்தான் செய்யத் தோன்றுகிறது. ஆனால், பின்னர் நான் இல்லாமல் போய்விட்டால் எனது பிள்ளைகள் தனித்துப போய்விடுவார்களே என்ற பயத்தில் தான் அடக்கி வாசித்து வருகிறேன்.



*சங்கீதா மகேந்திரன், யாழ்ப்பாணம்.*

கேள்வி:— பித்தா! எனது நண்பி நடிகர் தனுஷை உயிருக்குயிராக காதலிக்கிறார். அவரின் காதல் வெற்றி அடையுமா?

பதில்:— இப்படித்தான் எங்களுடைய பெண்கள் பலர் நிலாவைப் பார்த்து நாய் குலைப்பது போல் எங்கோ இருக்கும் திரை நட்சத்திரங்களை காதலிப்பதாக காலத்தை அநியாயமாக்குகிறார்கள். இவர்கள் வ ழ்க்கையில் தனுஷை சந்திக்கப்போவதும் கிடையாது. அவர் இவரை காணப்போவதும் கிடையாது. ஆனால், ஏதோ அருகே இருப்பது போலவும், ஓடி வந்து அவர் காதலிப்பார் என்பது போலவும் கற்பனை வாழ்க்கை வாழ்கின்றார்கள். யாழ்ப்பாணத்தில் சதைப்பற்றுள்ள, அழகான, கவர்ச்சியான, எடுப்பான இளைஞர்கள் பலர் இருக்கும்போது அந்த ஈக்குக்குச்சி சோதாப் பயலை காதலித்து வாழ்க்கையை அநியாயமாக்க வேண்டாம் ஏன்று உமது தோழிக்கு புத்தி சொல்வதை விட்டு... என்னிடம் ஆலோசனை கேட்கிறீரே! அம்மாடி தனுஷ் எல்லாம் கொஞ்ச நாளைக்குத் தான். அடுத்த ஒரு வினுஷ்...ஓ.... சதீஷ்.... ஓ வந்தால் என்ன செய்வீர்?

*நிலா, கொழும்பு*

கேள்வி:— Dear பித்தா! சொர்க்கம் எங்குள்ளது?

பதில்:— அவரவர் மனங்களில்.

*கலைவாணி, கிளிநொச்சி*

கேள்வி:— பித்தா! மனைவியிடம் அடங்கிப் போகும் நீர் நல்லவரா? கெட்டவரா?

பதில்:—அதை நான் சொல்லக் கூடாது.

*சிவாணி, வத்தளை*

கேள்வி:— மனிதர்கள் ஏன் பொறாமைப் படுகிறார்கள் பித்தா?

பதில்:— மனிதர்களாக இருப்பதால் தான்.

*நீசன், கல்குடா*

கேள்வி:—ஒவ்வொரு மனிதனது வாழ்விலும் முக்கிய கட்டம் எது?

பதில்:— வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்பவர்களுக்கு ஒவ்வொரு நாளுமே முக்கிய கட்டம்தான்.

*பரணி, இளவாலை*

கேள்வி:— பித்தா! மனிதன் எதற்கு பயப்பட வேண்டும்?

பதில்:— மனச்சாட்சிக்குத் தான்.

*ரூபினி, வற்றாப்பளை*

கேள்வி:— Dear பித்தா! மறுபிறப்பு என்பது பற்றி என்ன நினைக்கிறீர்?

பதில்:— இப்பிறப்பையே கல்லிலே நாருரித்து போக்காட்டிக் கொண்டிருக்கும் எனக்கு மறு பிறப்பை பற்றி ஏன் ஞாபகப்படுத்துகிறீர்?

*சாரு, உடுப்பிட்டி*

கேள்வி:—பித்தா! கடன் வாங்குபவர்கள் பற்றி?

பதில்:— கடனாக எதை கேட்கிறார்கள் என்பதைப் பொறுத்துத் தான் சொல்ல முடியும்.



*கரன், வவுனியா*

கேள்வி:— குடும்பம் ஒரு கோயில் என்கிறார்களே?

பதில்:— ஆமாம். நல்ல குடும்பம் ஒரு கோயில் தான்.

*சிவா, உடுவில்*

கேள்வி:— புறம்பேசுபவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

பதில்:— தன்னம்பிக்கை அற்றவர்கள்.

*வாணி, வத்தளை*

கேள்வி:—எதற்கு எடுத்தாலும் இறைவன் இருக்கிறான் என்று சொல்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?

பதில்:— கடவுள் நம்பிக்கை இருக்கத்தான் வேண்டும். அதற்காக முயற்சியே செய்யாமல் கடவுள் பார்த்து கொள்வார் என்று இருந்து விட்டால் பார்த்த கடவுளும் பார்க்க மாட்டார்.

## பித்தனின் கேள்வி

கேள்வி:— ஆண்கள் கனவு காண்பது எதனால்?

## வாசகர் பதில்கள்

*கு.ரமணன் — வெள்ளவத்தை.*

(அலங்)கோல உடையில் வீதியில் அலையும் பெண்களைக் கண்கள் காண்பதால்.

*தர்ஷனா — யாழ்ப்பாணம்.*

அழகான பெண்கள்மீது கொண்ட எல்லையற்ற காதலினால் அடையமுடியாத ஆசைகளைக்கனவு மூலம் அடைகிறார்கள்.

*சி.தேவி — கொட்டாஞ்சேனை.*

நிஜவாழ்வில் சாதிக்கமுடியாதவற்றை கனவு மூலம் கண்டு சந்தோஷப்படுவதற்காக.

*ச.முருகானந்தம் — திருகோணமலை.*

நிம்மதியாக நித்திரை கொள்வதால்.

*மு.குணாளன் — அளவெட்டி.*

பக்கத்து வீட்டு அழகிய அம்மணியின் தொந்தரவினால்.

*ந. ரவிதரன் — வெள்ளவத்தை.*

கேள்வி:— இப்போது ஆட்சியமைக்கப் போகும் அரசு எத்தனை மாதம் நீடிக்கும் என எண்ணுகிறீர்?

பதில்:— அது ஆட்சியமைக்கும் பொருட்டு கூட்டுச் சேரும் கட்சிகளின் விட்டுக்கொடுப்பில் தங்கியுள்ளது.

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில்மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—


நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான — குறும்பான — யதார்த்தமான — பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை ஏப்ரல் 18ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.




பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85,ஜெயந்தமல்லி மாராய்ச்சி வீதி,
கொழும்பு—14.

# ஒட்டகப் பந்தயத்தில் இயந்திரச் சிறுவர்கள்



இயந்திர மனிதர் எனப்படும் ரோபோக்கள் உருவாக்கப்பட்டு அவை ஏற்படுத்தி வரும் புதுமைகள் உலகம் அறிந்தவையே. தற்போது இயந்திரச் சிறுவர்களை உருவாக்கி அவற்றை ஒட்டகப் பந்தயத்தில் பங்குபற்றச் செய்கிறார்கள். மத்திய கிழக்கு நாடுகளில் ஒட்டகப் பந்தயத்தில் இந்தியச் சிறுவர்களையே இதுவரை ஈடுபடுத்தி வந்தார்கள். ஆனால், அதற்கு உலக நிறுவனங்கள் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து தற்போது இயந்திரச் சிறுவர்களைப் பயன்படுத்தும் முறை ஏற்பட்டிருக்கிறது.

# அழைத காட்டிநிற்தும் வர்ணக் குரங்குகள்



## மசாலா மிக்ஸ்

சீனாவில் இந்த வருடம் குரங்குகளுக்கு அபரிமிதமான வரவேற்பு ஏற்பட்டிருக்கிறது. காரணம் இது சீனர்களுக்கு குரங்கு வருடம் ஆகும். ஒவ்வொரு வருடத்தையும் வெவ்வேறு விலங்குகளின் பெயரில் கொண்டாடுவது சீனர்களின் வழக்கம் ஆகும். குரங்கு வருடத்தைக் கொண்டாடும் விதத்தில் ஷென்யாங் மாநிலத்திலுள்ள சபாரி பூங்காவில் குரங்குகளுக்கு விதம் விதமாக வர்ணம் பூசி மகிழ்ந்தார்கள்.


# மூழ்கிப் போன கப்பல் காட்சிக் கூடம் ஆகிறது!



கடலில் மூழ்கிப் போன கப்பல்களைக் காட்சிக் கூடங்களாக்கி அங்கெல்லாம் நீர் மூழ்கிக் கப்பலில் மக்களை அழைத்துச் சென்று கடல்வாழ்க்கையைத் தத்ரூபமாகக் காட்டுவார்கள் சிலர். மேற்கு இங்கிலாந்தில் ஒரு பழைய யுத்தக் கப்பலை வெடி வைத்துத் தகர்த்து, கடலில் மூழ்கடித்திருக்கிறார்கள். இந்தக் கப்பலின் பாகங்கள், கடலில் மூழ்கிக் கிடந்து காட்சிக் கூடங்களாக மாறப் போகின்றன. யுத்தக் கப்பல் வெடிவைத்துத் தகர்க்கப்படும் காட்சியை இங்கு காணலாம்.

# "ரோபோ" அழகியிடம் கலகலப்பான பேட்டி!

அழகுராணிகளைத் தொலைக்காட்சிகளில் பேட்டி கண்டு ஒளிபரப்புவார்கள். அந்த நிகழ்ச்சிகளைக் கண்டு ரசிப்பதற்கு பெரும் கூட்டமே காத்திருக்கும். ஜப்பானிலுள்ள மிட்சுபிஷி நிறுவனம் வகாமாரு எனும் "ரோபோ" அழகியை உருவாக்கியது. அந்த "ரோபோ" அழகியை தொலைக்காட்சி பெண் அறிவிப்பாளர் ஒருவர் பேட்டி காண்பதைப் படத்தில் காணலாம்.



# அழகிப் போட்டியில் மான் கொம்பு கிரீடம்



மேல் நாடுகளில் நடைபெறும் அழகிப் போட்டிகளில் பெண்கள் விதம் விதமான தலை அலங்காரங்களுடன் வந்து அனைவரையும் அதிர வைப்பார்கள். பாரிஸில் நடைபெற்ற டச்சு அலங்காரக் காட்சியில் இந்த அழகியோ மான் கொம்புகள் பொருத்தப்பட்ட இந்தக் கிரீடத்தை அணிந்து வந்து அனைவரையும் கவர்ந்து விட்டார்.

# ஒளிந்திருக்கும் முகம் எது?




மார்ச் 28, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் நெப்போலியன் உடையது. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு:

1. ச. யமுனா, கொக்குவில். 2. சி.டினேஸ், கடற்கரை வீதி, திருகோணமலை. 3. மு.சிவகணேசன், மட்டக்களப்பு. 4. அ.விமலேந்திரன், வல்லை வீதி, அச்சுவேலி. 5. செ.றதீப்தா, மானிப்பாய் வீதி, உடுவில்.

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிர்ஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்தவாரம் ஒளிந்திருக்கும் இந்த உருவம் யாருடையது?

முன்னாள் தமிழ் திரையுலகக் கதாநாயகியும், தற்போது அரசியல் வாதியுமாவார்.



இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் எங்கள் புதிய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# இந்தப் பார்வை எங்கே செல்லும்?

பிரச்சினை என்றுவரும் போது அது எமது வீட்டுப்பிரச்சினையாக இருந்தாலும் சரி நாட்டுப்பிரச்சினையாக இருந்தாலும் சரி அது பிரச்சினையே.

இத்தகைய பிரச்சினைகள் தோன்றும்போது அவற்றை நாம் பார்க்கும் பார்வையே அப்பிரச்சினையின் உள்ளார்ந்த நிலைகளை வெளிப்படுத்தும்.

எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அவ்வற்றை உணர்வு பூர்வமான நிலையில் பார்ப்பதை விட புத்தி பூர்வமான நிலையில் பார்ப்பதே சிறந்த ஒன்றாகும்.

தர்க்க ரீதியாகவும் பக்கம் சாராமலும் பிரச்சினைகளின் உண்மைத்தன்மைகளை பார்க்க வேண்டிய புத்திஜீவிகள் என்ற பதப்பிரயோகத்துக்குரிய ஒவ்வொரு கல்வியாளருக்கும் உள்ள மிகப் பிரதான கடமை.

இந்த நிலையில் அண்மையில் புகைவிட்டுக்குமுறுகின்ற கிழக்கிலங்கை பிரச்சினையை புத்தி பூர்வமாக பார்க்க வேண்டியது அவசியமானது.

இந்தப் பார்வை ஊடாக உண்மையையும், உள்ளூரவுள்ள இடர்பாடுகளையும் வெளியுலகின் பார்வைக்கு முன்கொணர வேண்டியது புத்திஜீவிகளுக்கு உள்ள பிரதான கடமையாகும்.

புத்திபூர்வமாக பார்க்கப்படுபவை, சிலவேளைகளில் கசப்பான விடயங்களாக இருந்தாலும், அவற்றை பயமின்றி முன்கொணர்ந்து சமூகத்தின் மேம்பாட்டுக்கு முன் வைக்க வேண்டியது அவசியம்.

இன்றைய கிழக்கிலங்கைப் பிரச்சினை, நீறுபூத்த நெருப்பாக புகைவிட்டுக் கொண்டிருந்த இன உணர்வுகளை – ஊதிவிட்டு நெருப்பாக்கியதால் எழுந்தது என்பது எல்லோராலும் உணரப்படும் ஒன்றாக இருக்கின்றது.

இதன் உள்ளார்ந்த உண்மைத் தன்மைகளை புரிந்து கொண்டும், மௌனம் காப்பதும், எமக்கு எதற்கு வம்பு என ஒதுக்கிவிடுவதும் தமிழினத்திற்கு செய்யும் பெரும் துரோகமாகவே கொள்ளப்பட வேண்டும்.

இராணுவ பலத்துடன் சேர்ந்த மக்கள் பலம் வெகுண்டெழுந்து நின்று சர்வதேச சமூகத்தின் மத்தியில் உண்மைகளை தட்டிக் கேட்டும் நிலை தோன்றி வருகின்ற தக்க நேரத்தில் அதனை சிதறடிக்க எடுக்கப்பட்ட முயற்சியாகவே இது கருதப்படுகின்றது.

இனவாதிகளினால் விரிக்கப்பட்ட வலையில் வீழ்ந்துவிட்ட சில்லறைகளின் வெளிப்பாடு இது என்பது சிறுபிள்ளைகூட ஆய்ந்து அறிந்து கொள்ள கூடிய ஒன்றாகும்.

சரியான சந்தர்ப்பத்தில் திட்டமிட்டு எடுக்கப்பட்ட இந்த பிரதேச வாதமானது எத்தகைய பாரியபின் விளைவுகளுக்கு முத்தாய்ப்பாய் இருக்கப் போகின்றது என்பதற்குக் காலம் தான் பதிலளிக்கப் போகின்றது.


அத்தகைய பதில் ஒன்று கிடைக்கின்ற நேரத்தில் நீங்கள் எல்லோரும் புத்திஜீவிகளாக இருந்து அதனை ஏன் எடுத்துச் சொல்லவில்லை என்ற வடு நிச்சயம் கிழக்கிலங்கையில் உள்ள புத்திஜீவிகள் சமூகத்தின் முன் நிற்கத்தான் போகின்றது.

இதில் இருந்து தப்பிக் கொள்ள வீணேவிதைக்கப்படும் பிரதேசவாதத்தீயை அணைக்க புத்திஜீவிகள் சமூகம் முன்வர வேண்டும் என்பதே இனத்தின் மீது உணர்வுகொண்ட ஒவ்வொருவரதும் கடமையாகும்.

நடக்குமா? வாதங்கள் பறக்குமா? பொறுத்திருந்து பார்க்கலாம்.

நாச்சியூரான்

# கவிதைப் புனல்



## நட்பு

நீயும் நானும்
சந்தித்தபோது
எம்மைப்பற்றி
உன்னுள் நானும்
என்னுள் நீயும்
நுழைந்து
அன்பில்
திளைத்த போது
இருவரும்
கைகோர்த்து
ஒருவராய் ஒன்றித்து
சிரிப்பெனும்
சிறகு விரித்து
சிறு நொடியும் பிரியாது
பள்ளி வானில்
பறந்த போது,
கள்ளமில்லா
எம் உள்ளத்தில்
மெல்லென
மலர்ந்த உடல்
மரித்தாலும்
உயிருடன் கலக்கும்
இனம்புரியா
இவ்வுணர்வு
இன்று நாம்பிரிந்தாலும்
என்றும்
நிலைத்திருக்கும்.

*பா.ஜினரஞ்சனி,*
*பொகவந்தலாவ.*

## உன் புன்னகை போதுமடி

கடல் கொண்ட
அலையானது
என் மனது.
கடற்கரை
மணல் வீடாய்
என் நினைவு.
புரிந்தும் புரியாதவளாய்
என்னை – நீ
ஏங்க வைக்கிறாய்!
புரிய வைக்க – நீ
குழந்தையல்ல.
என்னை ஏங்க
வைக்கும் சக்தி
உன்னைத் தவிர
வேறெவருக்கும்
இங்கில்லை.
உன் உதடுகள்
அசைய வேண்டாம்.
உனது விழிகளில்
ஆயிரம் வார்த்தைகள்!
அது எனக்கு மட்டுமே
தெரிகிறது.
இதுவும் ஒரு
மௌனத் தொடர்புதான்
எமக்கிடையில்.
உன் வார்த்தைகளை
என் இதயத்
துடிப்பாக்கிவிட்டாய்.
துடிக்கும் வரை
மறக்க மாட்டேன்.
உன்
ஒரு புன்னகை
போதுமடி
நான் உயிர் வாழ.

*அஷ்வினி,*
*அக்கரைப்பத்தனை.*


## கனவு



கண் அசைத்து–நீ
கடந்து போன
காட்சிகள்
என் கண்களுக்குள்
கரைந்ததனால் தான்
கண் அயரும்
வேளையெல்லாம்
கனவு வந்து–என்
உறக்கம் கலைக்கிறது.
பகல் எல்லாம்
பார் முழுதும்
உன்னையே
தேடி அலைகிறேன்.
நீயோ
இரவில் மட்டும்
அதுவும்
கனவில் தானே
காட்சி தருகிறாய்!
கண் விழித்து
கற்பனை பல வடித்து
எப்படியெல்லாம்
ஏங்கி நின்றாலும்
கண் உறங்கும்
காலத்தில் தான்
காண வருகிறாய்
கோடி இன்பம்
தருகிறாய்
கண் திறந்தால்
ஓடி மறைகிறாய்.

*ரகுபாரதி,*
*கம்பர் மலை.*

## கசிந்த காயங்கள்



காதல்த் தீக்கு
இதயத்தை
இரையாக்கியவளே,
நீ கண்களால்
சுட்ட இரவுகள்
மிகக்
கொடுமையானது
காத்திருந்த
காலமெல்லாம்
கழுத்தறுத்து
போய்விட்டாய்.
இப்பொழுதெல்லாம்
மரண வீட்டிலும்
மங்கையுன்
ஞாபகம் தான்.
ஊரே
உறங்கிவிட்ட
பொழுதில்
விழித்திருக்கும்
விழிகளின்
புரியாத வயதுக்கு
புத்திமதி
சொல்லுங்கள்.
கண்கள் பட்டே
கருகிவிட்ட உடல்
காத்திருக்கிறது
அவளின்
கண்ணீர்
அஞ்சலிக்காய்!


*நளீம்,*
*புத்தளம்.*

## எண்ணிப்பார்

மூலையில்
முடங்கியிருந்து
முடிவு தனை
எதிர்பார்க்கும்
மானிடனே,
பிறர் வெற்றி கண்டு
ஏன்
ஏக்கப் பெருமூச்சு
விடுகிறாய்?
நீயும் மனிதன் தானே?
பாவியர் செல்லும்
இடமெல்லாம்
பள்ளமும் திட்டியும்
என்றெண்ணி
உள்ளத்திலும்
எண்ணத்திலும்
ஏன்
கரியைப் பூசுகின்றாய்?
முன்னே
சென்று பார்
முன்னேறி
சென்றவர்களின்
முகவரி தெரியும்.
உன் உள்ளத்தில்
உறங்கும்
தன்னம்பிக்கையை
தட்டியெழுப்பு.
அது
தடங்கலனைத்தையும்
தகர்த்தெறியும்.
வெற்றியின் பாதைக்கு
இட்டுச் செல்லும்.
அப்போது
திரும்பிப் பார்
அனைத்தும்
சிறு புள்ளியாய்
தோற்றமளிக்கும்
உன் கண்ணுக்கு!
அப்போது
உணர்வாய்
உன் பெருமையை நீயே!

*எஸ்.சசீவன்,*
*யாழ்ப்பாணம்.*

## என்னுள்...!



மௌனமாய்
அசையும்
மேகம் போல்,
இனிமையாய்
பாடும்
குயிலினம் போல்,
அமைதியாய்
தழுவும்
தென்றல் போல்,
இதயத்துள்
இதம் தரும்
இயற்கை போல்,
என்றென்றும்
மனதுக்குள்
ஏதோவொன்று
இருந்துகொண்டே
இருக்குமென
ஏதோ
ஓர் உணர்வு
என்னுள்!

*சதா,*
*கொழும்பு.*



## சந்தேகம்

வாழ்வையே சீரழிக்கும்
அறியாமையின்
தாண்டவம்.

## தன்னம்பிக்கை

வாழ்வுக்கு
வல்லமை தரும்
வலிமையின் மருந்து.

## காதல்

இரு மனங்களிடையே
ஏற்படும்
இதமான வருடல்.

## கவிதை

சிந்தையில் எழும்
சித்திரம்.


*சி.சாளினி,*
*புதுக்குடியிருப்பு.*

## புரிந்துகொள்வாய்

நான் மலர்களை
நேசித்தபோது
அவை
உதிர்ந்துவிட்டன.
நான்
நிலவினை
நேசித்தபோது–அது
தேய்ந்துவிட்டது.
உன்னை
உயிராக
நேசித்த போது–நீ
பிரிந்து சென்றுவிட்டாய்.
பிரிந்தாலும் ஓர் நாள்
என்னை
நீ –நிச்சயம்
புரிந்துகொள்வாய்!

*சி.உதயன்,*
*வின்வமடு.*

## எப்படிப் பெண்ணே?



கனவு அழும்
கவிதை அழும்
கண்ணியும் அழும்
உன் சோகக்கதையை
கேட்டால்!
இரவெல்லாம்
வெளிச்சமாய்
இருந்த –நீ
ஒரே பகலில்
இருட்டானது எப்படி?
ஒரு மேகத்தைப் போல்
சுதந்திரமான நீ
ஒரு மழைத்துளியைப்போல்
கைதானதேன்?
உன்
வாழ்வை எண்ணி
எழுத முடியவில்லை
என்னால்
கண்ணீரின்
கனம் தாங்காமல்
வசனங்கள்
நொண்டுகின்றன.

*ரி.சுரேஸ்கோபி,*
*ஆரையம்பதி.*

## வேடிக்கை



வேதனையின்
விழிம்பிலே –என்
கால்ப்பங்கு
இதயம்
ததும்புகிறது.
மீதி இதயத்தை
நீ வைத்துக்கொண்டு
என்னை
வேடிக்கை பார்க்கிறாய்.

*கு.மதன்*
*கணுக்கேணி.*

## செல்போன்

கைகளில் கிணுகிணுக்க
காதோரம் கிசுகிசுக்க
இன்றைய
இளஞ்சந்ததியினர்
வீதிகளில்
வலம் வருகின்றனர்

## சந்தேகம்

உறவுகளைப்பிரிக்கும்
ஓர் இயமன்

*நேசன்*
*நெல்லியடி.*

## வாழ வேண்டும்

என் சமுதாயம்
நீண்ட நாட்களாகவே
தேடிக்கொண்டிருக்கிறது
விடியலின் விலாசத்தை.
தெரிந்தவரே கூறுங்கள்.
வாழ வேண்டும்
என் சமுதாயம்!

*கு.தவசீலன்,*
*விசுவமடு.*

# திருமலை மக்களின் பகீரதப் பிரயத்தனம் தமிழ் கூட்டமைப்புக்கு 2 ஆசனங்கள்

திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்களின் பகீரதப்பிரயத்தனம் காரணமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்க்கூட்டமைப்புக்கு இரண்டு ஆசனங்கள் கிடைத்துள்ளன.

மட்டு – அம்பாறை மாவட்டங்களில் ஜோசப் பரராஜசிங்கம், அரியநாயகம்சந்திரநேரு என்று பழையவர்கள் ஒதுக்கப்பட்ட நிலையில் திருமலையில் பழையவர்களையே மக்கள் ஆதரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.


துரைரெட்ணசிங்கம்

கடந்தகால கசப்புணர்வுகள் மற்றும் ஏமாற்றங்களை மறந்து அளிக்கப்பட்ட வாக்குகளை இனிமேல் தக்கவைத்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு மீண்டும் தெரிவானவர்களின் கைகளில் உள்ளது.

தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு உள்ள பொறுப்புகள் பற்றியும், அவர்களால் சில விடயங்கள் செய்ய முடியாதுபோனது பற்றியும் விடுதலைப்புலிகளின் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.திலக் சில இடங்களில் பிரஸ்தாபித்து இருந்ததை வாக்காளர்கள் புரிந்து கொண்டதுடன் ஏற்றுக் கொண்டனர் என்பதும் உண்மை. வருங்காலத்தில் சாக்குப்போக்குகளை விடுத்து மாவட்ட நலன் கருத வேண்டிய தேவை அதிகம் உள்ளது.

பல்கலைக்கழக சமூகம், பாடசாலைச் சமூகம், பொது அமைப்புகள், நிறுவனங்கள் என்று பிரசாரத்தில் ஈடுபட்டமை, மாவட்டத்தின் மூலை முடுக்கெல்லாம் பிரசாரம் செய்தமை, இடம் பெயர்ந்தோர் வாக்களித்தமை, இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேச மக்களுக்கு வாக்களிக்க சந்தர்ப்பம் அளித்தமை, விடுதலைப் புலிகள் நேரடியாகப் பக்கபலமாக நின்றமை என்பன திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்க்கூட்டமைப்புக்கு இரண்டு ஆசனங்கள் கிடைப்பதற்கு வாய்ப்பாகின.

மேற்படி காரணங்களோடு 80 சதவீதத்துக்கு மேற்பட்டோர் வாக்களிப்பாளர்களானால் இரண்டு ஆசனங்கள் கிடைக்கும் என நாம் முன்கூட்டியே ஆரூடம் கூறி இருந்தோம்.

அதேவேளை, சிங்கள வாக்குகளின் சிதறலால் ஓர் ஆசனமும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முதன்மை வேட்பாளர் எம்.ஏ.எம்.மஹ்ரூபை விட நஜீபுக்கே ஆதரவு அதிகம் என்றும் நாம் எதிர்வு கூறியிருந்தோம். அது நிரூபணமாகிவிட்டது.

இதன்படி இலங்கைத் தமிழரசுக்கட்சி சேருவல தொகுதியில் 6, 178 வாக்குகளையும், திருகோணமலைத் தொகுதியில் 43, 880 வாக்குகளையும், மூதூர் தொகுதியில் 17, 005 வாக்குகளையும் பெற்று இரண்டு ஆசனங்களைப் கைப்பற்றியுள்ளது. இதன்படி 67ஆயிரத்து 63 மொத்தவாக்குகளைப்பெற்றுள்ளது. மூன்று தொகுதிகளிலும் 63, 548 மொத்த வாக்குகளைப்பெற்று ஓர் ஆசனத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தட்டியுள்ளது. 27, 687 மொத்த வாக்குகள் பெற்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஓர் ஆசனத்தைப் பெற்றது.


சம்பந்தன்

சேருவில தொகுதியில் 19 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெற்றுள்ளது. 45ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகளை மூதூர் தேர்தல்தொகுதியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தட்டியுள்ளது. எனவே, இப்பகுதியில் தமிழ்க்கூட்டமைப்பின் செயற்பாடு மந்தமாக உள்ளது என்பதையே உணர முடிகிறது. எதிர்காலத்தில் இத்தவறு தவிர்க்கப்பட வேண்டும்.

இங்குள்ள மூன்று தொகுதிகளிலும் 14 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகளை ஐக்கிய தேசிய முன்னணியும், 503 வாக்குகளை ஈ.பி.டி.பி.யும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஈ.பி.டி.பியை விட ஜாதிக ஹெல உறுமய கூடிய வாக்குகளைப் பெற்றுள்ளது.

மாவட்ட தேர்தல் முடிவுகளின்படி 47,735 விருப்பு வாக்குகளைப் பெற்ற இரா. சம்பந்தன், 37,774 விருப்பு வாக்குகளைப் பெற்ற க. துரைரெட்ணசிங்கம் ஆகிய இருவரும் எம்.பிக்களாகத் தெரிவாகியுள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸ் முதன்மை வேட்பாளர் முன்னாள் எம்.பி. எம்.ஏ. எம். மஹ்ரூப்பை விட, நஜீப் அப்துல் மஜீத் 26, 948 விருப்பு வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் முன்னாள் எம்.பி. குணவர்த்தனாவை விட ஜே.வி.பி. சார்பில் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்ட ஜயந்த விஜயசேகர 19,983 விருப்பு வாக்குகளையும் பெற்று எம்.பி.களாகத் தெரிவாகியுள்ளனர்.

நடந்து முடிந்த தேர்தல் திருகோணமலை தமிழர் பூமி என்பதை நிரூபித்துள்ளதுடன் தமிழர், தாயகம் வடக்கு – கிழக்கு என்பதையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

எனினும், அதிகப்படியான வாக்குகள் நிராகரிக்கப்பட்டதும், மூதூரில் தமிழ்க் கூட்டமைப்பு தனித்துவம் இழந்ததும் திருத்தப்பட வேண்டியவைகள் ஆகும்.

எஸ்.எஸ்.ஆர்.

# ராசி பலன்

**இவ்வார 'ராசிபலன்'**
**12–04–2004 முதல்18–04–2004 வரை**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

ராசிநாதன் செவ்வாய் இரண்டாம் வீட்டில் ஆட்சி பெற்ற சுக்கிரனோடு இருப்பது சிறப்பானது. மேலும் தன் சொந்த நட்சத்திரமான மிருகசீரிடத்தில் சஞ்சரிப்பது விசேஷமானது. ராகு,ராசியில் இருப்பது ஒரு குறை. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,7) உரிய சுக்கிரன் இரண்டில் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு பிரகாசமாக இருக்கும். இருப்பினும் 7இல் கேது இருப்பது சில தடைகளை ஏற்படுத்தலாம். நாலுக்குரிய சந்திரன் 12 முதல் 2 வரையான வீடுகளில் சஞ்சரிப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 10க்குரிய சனி 3இல் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். குரு நல்ல இடத்தில் இருப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

ராசிநாதன் சந்திரன் ராசியில் ஆட்சியாக இருப்பது விசேஷம். மேலும் ஆரம்பத்தில் சந்திரனின் நட்சத்திரத்திலும் பின்பு செவ்வாயின் நட்சத்திரத்திலும் செயல்படுவது நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய புதன் 11இல் பலவீனமாக இருந்தாலும் கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நாலுக்குரிய சூரியன் 12இல் உச்சம் பெற்றாலும் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (7,12) உரிய செவ்வாய் ராசியில் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். 10க்குரிய சனி இரண்டில் இருப்பதும் 10ஆம் வீட்டை குரு பார்ப்பதும் தொழில்துறை முன்னேறும்.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 10இல் பலவீனமாக இருப்பது மத்திம பலன் தான். ஆனால் தன் நட்சத்திரத்திலும் பின்பு சனியின்நட்சத்திரத்திலும் செயற்படுவதால் உடல் ஆரோக்கியம் உண்டு.எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும்.வீடு, வாகனம் லாபம் தரும்.இரண்டாம் வீடு சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். (7,10) உரிய குரு மூன்றில் இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழில் துறையில் பின்னடைவு வர வாய்ப்பு உண்டு. மேலும் ராசியில் உள்ள சனி (7,10) வீடுகளை நோக்குவது நல்லதல்ல. பல வழிகளிலும் தடைகள் வர வாய்ப்பு உண்டு. 7ஆம் வீட்டை சுக்கிரன், செவ்வாய் நோக்குவதால் ஓர் அளவு ஆறுதல் உண்டு.

**கடகம்: புனர்பூசம்4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் ஒன்பது முதல் பதினோராம் வீடு வரை சஞ்சரிப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. இரண்டுக்குரிய சூரியன் 10இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். நாலுக்குரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 7க்குரிய சனி 12இல் மறைவதால் திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. இருப்பினும் இரண்டாம் வீட்டில் உள்ள குருவால் பலனை மாற்றக்கூடிய ஆற்றல் இருக்கலாம். 10ல் சூரியன் உச்சமாக இருப்பதாலும் 10க்குரியவர் 11இல் இருப்பதாலும் தொழில் துறை முன்னேறும். சூரியன், சுக்கிரன், குரு நல்ல அமைப்பில் இருப்பதால் மிக நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

| CÆ ÁÕµ QµP | Ø» | | |
|---|---|---|---|
| ¦uß | `¶ ¯ß µÕß | _UQµß Ö\ÆÁÕ´ | \Û |
| | செவ்வாய் மிருகசீரிடம் செவ்வாய் / சுக்கிரன் ரோகிணி+மிரு சந்,செவ் / புதன் ரேவதி+உத் புதன்,சனி / சூரியன் அச்ச+பரணி கேது,சுக் / குரு பூரம் சுக்கிரன் / சனி திருவாதிரை ராகு | | |
| | | | S , |
| | | ÷Px | |

]zvøµ 7¬uÀ ]zvøµ13 Áøµ

\¢vµß «Ú® ¬uÀ Chf® Áøµ

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் 9இல் உச்சமாக இருப்பது சிறப்பானது. ஆரம்பத்தில் கேதுவின் நட்சத்திரத்தில் இருந்தாலும் பின்பு சுக்கிரனின் நட்சத்திரத்தில் பிரவேசிப்பது சிறப்பானது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். ராசியில் குரு இருப்பது நல்லதல்ல. இரண்டுக்குரிய புதன் 8இல் மறைவதால் கையில் பணம் இருக்காது. (4,9) உரிய செவ்வாய் 10இல் இருப்பதால் பெற்றோர் நலம். வீடு, வாகனம் வாங்க ஏற்ற காலம். ஏழுக்குரிய சனி 11இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். இருப்பினும் ராசியில் உள்ள குரு அதற்கு சாதகமாக இல்லை. 10ஆம் வீடு பலம் பெறுவதால் தொழில்துறை முன்னேறும்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 7இல் பலவீனமாக இருப்பது மத்திம பலன் தான். ஆனால் தன் நட்சத்திரத்திலும் பின்பு சனியின் நட்சத்திரத்திலும் இருப்பதால் உடல் ஆரோக்கியம் உண்டு.எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். தொழில்துறை முன்னேறும்.10இல் சனி இருப்பது தொழில் துறையில் ஒரு உந்து சக்தியைக் கொடுக்கலாம். (2,9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லது. (4,7) உரிய குரு 12இல் மறைவதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. குரு மறைவது பல வழிகளிலும் நன்மை தராது.

**துலாம்: சித்திரை 3,4. சுவாதி. விசாகம் 1,2,3.**

ராசிநாதன் சுக்கிரன் தனது இன்னுமொரு ராசியில் ஆட்சியாக இருப்பது நல்லது. சுக்கிரன், சந்திரன், செவ்வாய் ஆகிய நட்சத்திரசாரத்தில் செயல்படுவது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2,7) உரிய செவ்வாய் 8இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. ராசியிலும் 7இலும் ராகு, கேது இருப்பது நல்லதல்ல. (4,5) உரிய சனி 9இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 10ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். குரு சுகம் இருப்பதால் நல்ல பலனைத் தரும்.

**விருச்சிகம்: அனுசம், கேட்டை**

ராசிக்குரிய செவ்வாய் 7இல் ஆட்சி பெற்ற சுக்கிரனுடன் இருப்பது நல்லது. மேலும் தன் சொந்த நட்சத்திரமான மிருகசீரிடத்தில் செயல்படுவது சிறப்பானது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய குரு 10இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகள் சிறப்படைவர். (7,12) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். (3,4) உரிய சனி 8இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். இளைய சகோதரம் விலக வாய்ப்பு உண்டு. 10இல் குரு இருப்பதால் தொழில்துறை முன்னேறும்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 9இல் இருப்பது நல்லது. மேலும் சுக்கிரனின் நட்சத்திர சாரத்தில் இருப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும்.வீடு, வாகனம் லாபம் தரும். (2,3) உரிய சனி 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். இளைய சகோதரம் உதவி செய்யும். (7,10) உரிய புதன் 4இல் பலவீனமாக இருப்பதும் சனியின் பார்வை பெறுவதும் நல்லதல்ல. குரு 9இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. தொழில்துறையில் ஓர் அளவு முன்னேற்றம் இருக்கும். சனி 7இல் இருந்து ராசியைப் பார்ப்பது நல்லதல்ல. நல்ல பலனைக் கொடுக்கக் கூடும்.

**மகரம்: உத்தராடம்2,3,4,.திருவோணம்,அவிட்டம்1,**

(1,2) உரிய சனி 6இல் இருப்பது நல்லது. ஆனால் ராகுவின் நட்சத்திர சாரத்தில் செயல்படுவது நல்லதல்ல. எடுத்த முயற்சி தாமதமாகலாம். கையில் பணம் இருக்காது. மேலும் குரு 8இல் மறைவது நல்லதல்ல. நாலுக்குரிய செவ்வாய் 5இல் சுக்கிரனோடு இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். 7ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் குடும்பத்தில் அமைதி நிலவும் திருமண வாய்ப்பு உண்டு. ஆனால் குரு 8இல் மறைவது நல்ல பலனைப் பாதிக்கலாம். தொழிலுக்குரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். குரு மறைவதால் நல்ல பலனை எதிர்பார்க்க முடியாது. சுக்கிரன் நல்ல நிலையில் இருப்பதால் ஓர் அளவு ஆறுதல் உண்டு.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

ராசிநாதன் சனி ஐந்தில் இருப்பது நல்லதல்ல. மேலும் சனி ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். ஆனால் குரு ராசியைப் பார்ப்பது ஆறுதல் உண்டு. (2,11) உரிய குரு 7இல் இருப்பது கையில் பணம் இருக்கும். நண்பர்கள் உதவுவர். மூத்த சகோதரத்துக்கு நல்லது. (4,9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பது பெற்றோருக்கு நல்லது. வீடு, வாகனம் லாபம் தரும்.அதிஸ்டம் உண்டு. 7க்குரிய சூரியன் மூன்றில் இருந்தாலும் 7இல் குரு இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். 10க்குரிய செவ்வாய் 4இல் இருப்பதால் தொழில்துறை முன்னேறும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 6இல் இருப்பது நல்லதல்ல. ஆனால் சுக்கிரனின் நட்சத்திரத்தில் இருப்பது ஓர் அளவு ஆறுதல் வேண்டும். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். தொழில்துறையில் பின்னடைவு வர வாய்ப்பு உண்டு. (2,9) உரிய செவ்வாய் மூன்றில் இருப்பதால் கையில் பணம் இருக்காது. அதிஸ்டம் இருக்காது. (4,7) உரிய புதன் ராசியில் இருப்பது வீடு , வாகனம் இலாபம் தரும். திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். குரு 6இல் இருப்பதால் குரு சுகம் குறைவதால் பலனில் மாறுதல் ஏற்பட மாறுதல் இடமுண்டு. 4இல் உள்ள ராசியைப் பார்ப்பதும் நல்லதல்ல. ராசியில் உள்ள புதனும் பலவீனமாக இருப்பதால் இவ்வாரத்தை அவதானமாக கழிக்கவும்.

# செல்வமும் செழிப்பும் பூத்த சித்திரைப் புத்தாண்டே வரு...

நாளை 13ஆம்திகதி பிறக்கப்போகும் சித்திரைப் புத்தாண்டு மக்கள் மனங்களில் நிம்மதி, அமைதி, சுபீட்சம், சகவாழ்வு என்பவற்றை ஏற்படுத்தும் வகையில் சிறப்பாகப் பிறக்கப் போகிறது. அனைத்து இனங்களின் ஒற்றுமையையும், நாட்டின் சமாதானத்தையும், எதிர்கால சுபீட்சத்தையும் கட்டியங் கூறுவதாக நாளைய பொழுது புலரப் போகின்றது.

இற்றைநாள் வரை பட்ட துன்பங்களும், துயரங்களும் இன்னல்களும்இடுக்கண்களும் ஆதவனைக் கண்ட பனிபோல் அகன்று விடும், நாம் சந்தோஷமாகவும், மகிழ்ச்சியாகவும் இனபந்துக்களுடன் ஒன்று சேர்ந்து இன்பமாக வாழலாம் என்ற எதிர்பார்ப்புடன் மக்கள் துயிலெழுந்து சித்திரைப் பெண்ணை வரவேற்கப் போகிறார்கள்.

இருகரங் கூப்பிச் சிரந்தாழ்த்தி வணங்கி வாழ்த்திக் குதூகலத்துடன் வாழ்க்கையைத் துவங்கும் தமிழர் தம் வாழ்வில் வசந்தம் தலைதூக்க ஞாயிறு கதிரொளி வீசிப் புறப்பட்ட வேளை ஆலய மணியானது ''டாண்'', ''டாண்'' என்று ஒலி எழுப்புவது எல்லோர் மனங்களிலும் அவர்களுடைய எதிர்பார்ப்புக்கு கட்டியங் கூறுவது போலவே அமையும்.

பழையன கழிந்து புதியன புகுமாப் போல நாளை பிறக்கும் தாரண வருஷமானது கஷ்டங்கள் யாவற்றையும் களைந்து, துன்பங்கள் எல்லாவற்றையும் துடைத்து ஓர் இனிய புத்தாண்டாக இனிக்கும் நிகழ்வு




VCD DVD MP3 SONGS AUDIO CD'S VHS CASSETES AUDIO CASSETES

Vision Park

No. 132, Sri Kathiresan Street, Col - 13. Tel: 2 - 384440

பம்பலப்பிட்டியில்... மாணிக்க பிள்ளையார் கோவில் எதிரில்





புகைப்படத்துறையில் 20 வருட அனுபவமுள்ளவர்களால் தரமான முறையில் துல்லியமான நவீன தொழில்நுட்பத்துடன் விரைவாக உங்கள் புகைப்படங்களை கழுவிப்பெற்றுக்கொள்ள

*Same day Service, Developing & Printing
*Special Service For Photographers
*Special Wedding Photography & Albums.
by THIRU

COLLECTING AGENTS
Abiramy Communication, 212, Ramanathan Road, Thirunelveli, Jaffna. (Opp Campus) Tel - 2222360
Pon Kaveen Colour Lab, 11 First Cross Street, Vavuniya. Tel. 0712-356210

Visionarts Studio (PVT) Ltd.
DIGITAL MINI LAB
292 காலி வீதி, பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல - 011 2...



Siva Trading Co
No: 23, Kandy Road, Kilinochchi
பலசரக்குப் பொருட்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும், உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கொள்வனவுக்கும், விற்பனைக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்
சிவா வர்த்தக நிலையம் இல. 23 கண்டி வீதி, கிளிநொச்சி
வாடிக்கையாளர்களின் வேண்டுகோள்களுக்கு இணங்க மீண்டும் 08.02.2004 முதல் பழைய இடத்திலே இயங்குகின்றது.



Hotel Swarkka & Restaurant
For Quality Food
Comfortable A/C, Non A/c Rooms.
and Take Away.



#33, Soosaipillaiyarkulam Road, Vavuniya. Tel: 0242221291 Mobile: 0777563991 E.mail:hotelswarkka@hotmail.com



Nalines
INSTITUTE OF HERBAL, AROMA THERAPY & BEAUTY CLINIC
No - 79/2, W.A.Silva Mawatha, Wellawatte, Colombo - 06.
Tel: 012365360, 2503138
Mobile: 0777 383846

PROFESSIONAL SERVICES OFFERED
BRIDAL DRESSING
FACIAL
TREATMENTS
WEDDING ARRANGEMENTS
CONDUCTING CLASSES
ONLY FOR LADIES
'BEAUTY IS A JOY FOREVER'

# துக் குலுங்கிட

# க!

களைத் தரும் மகத்தான ஆண்டாக மிளிரப் போகின்றது. மங்களம் பொங்கும் இந்தத் தாரண வருஷம் மக்கள் மத்தியில் அன்பையும் அஹிம்சையையும், ஆத்மீக உறுதிப்பாட்டினையும் ஏற்படுத்தி உன்னதமான இலட்சியம் நிறைந்த மனித சமுதாயம் உருவாக் வழிவகுக்கும் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை. உலகெங்கும் பகைமை பஞ்சம் மறைந்து மங்களம் பொங்க வேண்டும் என்ற நோக்கில் வாசலில் மெழுகி மாக்கோலமிட்டு பூரண கும்பம் பொலிவுடன் வைத்து மகரதோரணம் கட்டி மாவிலையிட்டு மாலை சூட்டி சூரியனுக்குப் பொங்கல் வைத்து போற்றி வணங்கும் மரபு தொன்று தொட்டு நிலவி வருகிறது.

புத்தாண்டினை இன்முகத்துடன் வரவேற்று புத்தாடையணிந்து தெய்வத்தை வழிபட்டு வணங்கி கண்ணாடி, குங்குமம் முதலிய மங்கலப் பொருட்களை பரிசளித்து மகிழ்பவர்கள் மக்கள் மன நிறைவோடு முகத்தில் பூரண பொலிவு வரப்பெற்றவர்களாக இன்புறுதல் நிகழ்வாகும்.

குதூகலம் நிறைந்த உள்ளத்துடன் துயில் நீத்து எழுந்து பண்பொழுக்கம் பேணி உலகு வியக்கும் வகையில் மருத்து நீர் தேய்த்து நீராடி அதிகாலையிலேயே ஆலய தரிசனம் செய்து மகிழ்வோடு மக்கள் உலாவருங்காட்சி மகோன்னதமானது.

சிறுவர், சிறுமியர், இளைஞர், பெரியோர் அனைவருக்கும் ஓர் இனிய நாள் இது. இல்லறம் சிறக்க இவ் இனிய புத்தாண்டில் மக்கள் அனைவரும் மகிழ்வுடன் கூடி குதூகலிக்கும் ஓர் அரிய நாள் இது.

புத்தாண்டு நன்னாளில் சுபநேரம்பார்த்துக் கைவிஷேசம் பரிமாறி சுற்றத்தவர்களுடன் ஒன்று சேர்ந்து உண்டு மகிழ்வர். இனிய புத்தாண்டு எல்லோருக்கும் இன்பத்தை அள்ளித் தரும் என்று கூறி இனிப்பான பட்சணங்களை, தித்திப்புடன் கலந்து தெவிட்டாமல் வழங்கி இன்புறுவர்.

வாழ்க்கையில் எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது சகஜம். ஆகவே, சொந்த பந்தங்களுடன் உறவு கொண்டாடி மகிழ்வுடன் மாட்சிமை நிறைந்த மகத்தான வாழ்வுக்கு வழிசமைத்துத் தர வேண்டுமென்று ஆதவனுக்குப் பொங்கலிடுவார்கள். புத்தாண்டுப் பொங்கலை இனிமையான சுவையைத் தரவல்ல இனிப்புப் பொங்கலாக பொங்குவார்கள். பொங்கற்பானையில் வரும் பொங்கல், பொங்கிச் சரியும் போது கிழக்கு நோக்கிச் சரிந்து உதயசூரியன் உன்னதமான வாழ்வு அருளுவான் என்பதற்குச் சான்று பகருமாப் போல் மங்கலத்தைக் காட்டி நிற்கும்.

உள்ளத்தில் உவகை பொங்க, கள்ளங்கபடமற்ற மக்கள் தமது வாழ்வில் வசந்தம் வீச வேண்டுமென்று எல்லாம் வல்ல பெருங்கருணைக் கடலாக விளங்குகின்ற பரம் பொருளான இறைவனைப் பணிந்து போற்றித் துதிப்பது நாளைய மங்கல நிகழ்வாகும்.

''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே''

என்று சீர்காழி வேந்தரான நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தப் பெருமான் பாடிய தேவாரம் அழகாகக் கூறி நிற்பது இன்பமான மங்கள வாழ்வையே.

எனவே, நாளை பிறக்கும் புத்தாண்டில் கஷ்டங்கள் யாவும் விலகி, இன்பம் மலர்ந்து மங்களம் நிறைந்த சந்தோஷமான சகவாழ்வுக்கு இறைவன் பேரருட் கருணையை அள்ளி வழங்க வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்போமாக.

''நல்லதை எண்ணு நல்லதே நடக்கும்.''

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்


விடுவிக்கப்பட்ட வன்னிமண் எங்கும்...

அறிவியல், அரசியல், பகுத்தறிவு, பெண்ணியம், தலித்தியம், தத்துவம், மொழி, சிறுவர் நூல்கள், செய்தித்தாள்கள், பருவ இதழ்கள், பாடசாலை உபகரணங்கள்.

ஈழத்து வெளியீடுகள்
போராட்ட, போராளிகள் வெளியீடுகள்

மொத்தமாகப் பெற குறைந்த விலை

அறிவமுது பொத்தகசாலை

பிரதான சாலை, கிளிநொச்சி.

தொலைபேசி: 021 228 3961

மின் அஞ்சல்: arivamuthu2000yahoo.com

கிளைகள்:

புதுக்குடியிருப்பு | வட்டக்கச்சி
விசுவமடு | ஸ்கந்தபுரம்
முள்ளியவளை | மல்லாவி
முழங்காவில்

பால், சாதி, மத, பிரதேச வேறுபாட்டை எரிப்போம்!






யுத்தத்தால் பாதிக்கப்பட்டம் எமது மக்களின் கட்டட நிர்மாண வேலைகளை உடன் நிறைவு செய்ய மக்களின் சேவையில் வைரமாளிகை.

மிற்சுயி, ஹினோடே சீமெந்து வகைகள், மக்ஸன் நெற் வகைகள், எஸ்லோன் பி.வீ.சி. பைப் வகைகள், கெவில்ட்டன் மின்னியல் பொருட்கள், ஆகியவற்றுடன் கட்டட நிர்மாணத்திற்கான அனைத்துப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

மிற்சுயி உலகின் முதற்தர சீமெந்து : வடபகுதிக்கான முகவர்

மக்சன் நெற் : வன்னிக்கான முகவர்

எஸ்லோன் : வன்னிக்கான முகவர்

வழமையாளர்களுக்கும், ஒப்பந்தகாரர்களுக்கும் விற்பனையின் பின் சேவையும், வியாபார சிறப்புச் சலுகையும் வழங்கப்படுகிறது


வைரமாளிகை
கட்டடப் பொருள் வாணிபம்

கரடிப்போக்குச் சந்தி அருகாமை, முதன்மைச் சாலை, கிளிநொச்சி

# பா.ம.க. – ரஜனி ரசிகர் மோதல் தி.மு.க. கூட்டணிக்குப் பின்னடைவு

இந்திய லோக்சபா தேர்தல்களம் சூடுபிடித்திருக்கும் இன்றைய நிலையில் தமிழ்நாட்டில் சுவாரஸ்யமான சம்பவங்கள் நடந்தேறிவருகின்றன. இவற்றில் கடந்த வாரம் பரபரப்பை ஏற்படுத்தியது பா.ம.க – ரஜனி ரசிகர் மோதல் ஆகும்.

மதுரை வந்த பாட்டாளிமக்கள் கட்சித்தலைவர் ராமதாஸுக்கு கறுப்புக் கொடி காட்டமுனைந்த ரஜனிகாந்தின் ரசிகர்கள் மீது பா.ம.கவினர் தாக்குதல் நடத்தியது ரஜனி ரசிகர் சங்கங்களின் சீற்றத்தை தூண்டிவிட்டது அதன் விளைவு லோக்சபா தேர்தலில் பா.ம.க போட்டியிடும் 6 தொகுதிகளிலும் பா.ம.கவைத் தோற்கடிக்கப்பாடுபடப் போவதாக ரஜனிகாந்த் அறிவித்துள்ளார். இது பெரும் அதிர்ச்சியை தி.மு.க கூட்டணி வட்டாரங்களில் ஏற்படுத்தியுள்ளது. காரணம் ரஜனி ஜெயலலிதாவின் பரமவைரியாக கருதப்பட்டவர்.



1996 தேர்தலில் ஜெயலலிதாவின் படுதோல்விக்கு முக்கிய காரணம் என்று கூறப்பட்டவர் ரஜனி. கருணாநிதி, ப.சிதம்பரம், மூப்பனார் போன்ற தலைவர்களுடன் மிகவும் நெருக்கமானவரும் கூட. அப்படிப்பட்ட ரஜனி அ.தி.மு.க – பா.ஜ.க கூட்டணி வெற்றிக்கு பாடுபடப்போவதாக கூறியிருப்பது பெரும் பாதிப்பை தி.மு.க கூட்டணிக்கு ஏற்படுத்தலாம்.

இந்த 6 தொகுதிகளில் 3 இல் அ.தி.மு.கவும் 3இல் பா.ஜ.கவுக்கு பா.ம.கவை எதிர்த்து போட்டியிடுகின்றன வீழ்த்த அ.தி.மு.க வேட்பாளர்களை இம்மூன்று தொகுதிகளிலும் ஆதரிப்பது என்பதே ரஜனியின் முடிவு.

ரஜனியின் 'பாபா' படவெளியீட்டை எதிர்த்து பா.ம.கவினர் நடந்து கொண்டதற்கு பழி தீர்க்கவே இது என்கின்றனர் நோக்கர்கள். மறுபுறம் ரஜனி – ஜெயலலிதா இடையே பகைமை இருந்தாலும் வெளிப்படையாக அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் தாக்கிப்பேசுவது அரிது. ஆகவே மொத்தத்தில் பரமவைரிகளான ஜெயலலிதாவும் ரஜனியும் இணைகிறார்களா என்பதே தி.மு.க கூட்டணியின் கலக்கம். அது மாத்திரமன்றி ரஜனிகாந்த் அரசியலில் நுழைவார் என்ற பலத்த எதிர்பார்ப்புகள் பல காலமாக நிலவிவரும் சூழலில் புதிதாக தனிக்கட்சி தொடங்குவதைவிட ஏற்கனவே ஓரளவு காலூன்றிவிட்ட ஒருகட்சி மூலம் அரசியல் பிரவேசம் செய்வதே சிறந்தது எனக் கருதப்படும் நிலையில் ரஜனி பா.ஜ.க பக்கம் சாய்கிறாரா என்பதே முக்கிய கேள்வியாகிறது. ஒன்றில் காங்கிரஸ் அல்லது பா.ஜ.க மூலம் அரசியல் பிரவேசம் செய்வது நடக்கக்கூடும் என பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

மூப்பனார், சிதம்பரத்துடனான ரஜனியின் நட்பு காங்கிரஸுக்குள் அவரை இழுத்துவிடலாம் என முன்பு கூறப்பட்டது. இப்போது அ.தி.மு.க. – பா.ஜ.க கூட்டணியின் வெற்றிக்காக ரஜனி உழைப்பது என்பது தி.மு.க கூட்டணியின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது. பா.ம.க. போட்டியிடும் 6 தொகுதிகளில் மட்டும் தானே என்பது அப்பாடா தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போய்விட்டது என்ற உணர்வை கூட்டணியினருக்குத் தந்துள்ளது.

இதற்கிடையில் ஒருவாறு தட்டுத்தடுமாறி ஒருவழியாக காங்கிரஸ் தனது வேட்பாளர் பட்டியலை அறிவித்தாகி விட்டது. அதிலும் திருநெல்வேலி வேட்பாளர் இன்னும் அறிவிக்கப்பட்டபாடில்லை. முன்னாள் காங்கிரஸ் தலைவரும் தமிழ் மாநில காங்கிரஸில் சேர்ந்த பின்னர் ஜெயலலிதா – மூப்பனார் உறவால் அதிருப்தி அடைந்து வெளியேறி தனிக்கட்சி தொடங்கியவருமான ப.சிதம்பரம் காங்கிரஸ் சார்பில் சிவகெங்கையில் போட்டியிடுவாரென அறிவிக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் ஜெயலலிதாவுடன் உறவானாலும் பகைமையானாலும் ஜெயலலிதாவுடன் கடைசிவரை ஒத்துப்போகவே முடியாத ஒரே காங்கிரஸ் தலைவர் இவர் தான். இவரது செல்வாக்கு தி.மு.க கூட்டணிக்கு உதவும். முன்னாள் தமிழக காங்கிரஸ் தலைவர்களான கே.வி.தங்கபாலு, ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் முறையே சேலம், கோபி செட்டிபாளையம் தொகுதிகளில் போட்டியிடுகின்றனர். இப்போதைக்கு காங்கிரஸுக்கு எடுத்த புகைச்சல் ஓரளவு அடங்கிவிட்டதாகவே தோன்றுகிறது.

இதேவேளை தேர்தல் பிரசாரத்தில் தலைவர்களை தனிப்பட்ட முறையில் தாக்கும் விளம்பரங்களை தணிக்கை செய்யும் நடவடிக்கையை இந்திய தேர்தல் ஆணையம் எடுத்துள்ளது. காங்கிரஸ் தலைவர் சோனியா, பிரதமர் வாஜ்பாய் மீது எதிர்க்கட்சியினர் தனிப்பட்ட முறையில் சேற்றை வாரிஇறைப்பதை அடுத்தே இந்நடவடிக்கை. தவிரவும் தேர்தலுக்கு முன்பும் தேர்தல் வாக்களிப்பின் பின்பும் எடுக்கப்படும் கருத்துக்கணிப்புக்களை தடை செய்யும் நடவடிக்கை பற்றியும் ஆணையம் ஆராய்ந்து வருகின்றது.

ஒவ்வொரு கட்சியும் தனது கட்டுப்பாட்டிலுள்ள ரி.வி. நிறுவனத்தைக் கொண்டு தமக்கு சார்பாக களநிலவரம் இருப்பதாக கருத்துக்கணிப்புகளை வெளியிடுவது வாக்காளரை தவறாக வழிநடத்தும் என்கிற காங்கிரஸ் வாதம் இதுவரை எடுபடவில்லை. கடந்த 1999 தேர்தலிலும் இதே பிரச்சினை கிளப்பப்பட்டு, கருத்துகணிப்பு மக்களின் செய்தி அறியும் சுதந்திரமாகும் என உச்சநீதிமன்றம் கூறி காங்கிரஸ் வாதத்தை நிராகரித்தது குறிப்பிடத்தக்கது.

—எஸ்.சுரேந்திரஜித்

# இராஜன் சத்திய மூர்த்தியின் சடலத்தையே பாதுகாக்க முடியாதவர் கிழக்கை பாதுகாப்பாரா?

## கருணாவுக்கு மற்றும் ஒரு மடல்

கருணா, நீ கொண்டு வந்த பிரதேசவாதம் பிசுபிசுத்துப்போனாலும் அது தமிழ்த் தேசியத்தில் மாறாத – மறையாத வடுவாகிப்போய்விட்டதை அறிவாயா?

மட்டு–அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா அம்மான்என்ற பெயர் இப்போது தேய்ந்து மறைந்து விட்டது. தளபதி போய், கேணல் போய், அம்மான் போய் எஞ்சியிருப்பது வெறும் ''கருணா'' தான்.

போலிக்குற்றச்சாட்டுக்களை அடுக்கிக் கொண்டு வந்த பிரதேசவாதம் எடுபடாது போனதும் நீ பேதலித்து விட்டாய்.

இதுவரை செய்யப்பட்டது பொறுக்கப்பட்டது மறக்கப்பட்டது என்றிருந்தோம். இப்போது நீ நடந்து கொள்ளும் விதம் இன்னும் பயங்கரமானது. மனிதாபிமானத்தை மறந்தாயே கருணா என்று கேட்கத் தோன்றுகின்றது.

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குவதாகச் சொன்ன கிழக்கு மாகாணத்துக்கு அல்லது மட்டு–அம்பாற மாவட்டத்துக்கு போதிய பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்று சொன்னாய். ஆனால் இப்போதைய உனது நடவடிக்கை அதற்கு சம்பந்தம் இல்லாமலே போகிறது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இருந்து சுமார் 20 வைத்தியர்கள் தம் ஊருக்குச் சென்றுள்ளனரே! பெண்ணியல் மகப்பேற்று சத்திரசிகிச்சை நிபுணர் கூட சென்று விட்டார் என்று அறிந்தோம். அப் பிரதேசத்தில் அவர் ஒருவர் தான் இருந்தார் என்றும் கேள்வி. இப்போது என்ன செய்யப்போகிறாய்? உன்னாலும் உன்னிடம் உள்ள ஆயுதங்களாலும் பிரசவிக்கும் உயிரையும் கற்பிணிகளையும் காப்பாற்ற முடியுமா?

கருணா கையோடு இன்னுமொரு சேவையும் செய்தாய். யாழ்ப்பாண வர்த்தகர்களையும் வெளியேறச் சொல்லியிருக்கிறாய். காலம் காலமாக இருந்த இவர்களிடம் வாங்கிக் கொட்டியதை மறந்து நன்றி கெட்டதனமாக வெளியேறச் சொன்னது என்ன மனிதாபிமானம்?



அம்பாறை மாவட்டத்தில் பாண்டிருப்பு எனும் கிராமத்தில் 20 வருடங்களுக்கும் மேலாக இருந்த வர்த்தகரின் கடையைப் பூட்டி திறப்பை எடுத்துக்கொண்டு துரத்தியதோடு, இரவோடிரவாக அக் கடையையும் கொள்ளையடித்திருக்கிறாய். மட்டக்களப்பு மாவட்டத்திலும் பல கடைகள் கொள்ளை அடிக்கப்பட்ட பின் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. உனது மனிதாபிமானத்தை எப்படிப்பாராட்டுவது என்றே புரியவில்லை.

ஒரு காலத்தில் உனது பெயர் கேட்டு அஞ்சியவர்கள் இப்போது உன்னையும், உனது செயலையும் பார்த்து சிரிக்கிறார்கள். ஒரு நாட்டின் பிரஜை அந்த நாட்டில் எங்கு செல்வதற்கும் எங்கு வசிப்பதற்கும் உரித்துடையவர் என்பது தெரியாதா?

விடுதலைப்புலிகள் ஏக பிரதிநிதிகள் என்றும், தேசியத் தலைவர் பிரபாகரன் வழிநடத்தலில் நடப்போம் என்றும் கோஷமிட்டதாலேயே உனது பிரதிநிதிகளுக்கு மக்கள்வாக்களித்தனர். அந்த மக்கள் பிரதிநிதிகளை அடகு வைக்க முனைவது உனது பிரதேச மக்களுக்குச் செய்யும் துரோகமாகாதா? 5 எம்.பிகளில் ஒருவர் நேரடியாகவே சென்றுவிட்டார். ஏனையவர்களின் நிலை இரு தலைக்கொள்ளி எறும்பாகிவிட்டது.

ஆனால் ஒன்று கருணா, உனக்கு கீழ் உள்ள போராளி முதல், பொது மகன் வரை யாரையாவது மன்னம்பிட்டிக்குக் கொண்டுவந்து எங்கு போக விருப்பம் என்று கேட்டுப்பார். வடக்கை நோக்கியதாக அவர்கள் சுட்டுவிரல் இருக்கும்.

இராஜன் சத்தியமூர்த்தி மாமனிதர் பட்டம் பெற என்ன செய்தார்?

அதை வழங்க நீ யார்?

இராஜன் சத்தியமூர்த்தியை மட்டுமல்ல, அவரது சடலத்தையே உன்னால் காப்பாற்ற முடியவில்லை. பிறகு எப்படி நீ கூறும் பிரதேச மக்களைக் காப்பாற்றப் போகிறாய்"

ரஹ்மான்

# உங்களது சிறந்த ஆலோசகர் யார்?



நல்ல குடும்பம் சிறந்த பல் கலைக்கழகம்என்பார்கள். அந்தப் பல்கலைக்கழகத்தில் நல்ல பெறுபேறு கிடைக்க வேண்டு மென்றால் எத்தனையோ தடை களைத்தாண்டி முன்னேற வேண்டிய கடப்பாடும் இருக்கத் தான் செய்கின்றது.

எந்த ஒரு பெரிய பதவி யில் இருந்தாலும் மனைவி சொல்லே மந்திரம் என்று சில ஆண்கள் விட்டுக்கொடுத்து வாழ்க்கை நடத்துவார்கள். ஆனால் அந்தக் குடும்பமும் சந்தோஷமாக, அமைதியாக வாழ்க்கை எனும் ஓடத்தில் வெற்றிகரமாகப் பயணித்துக் கொண்டிருக்கும். சில வீடுக ளில் மனைவியின் சண்டை யால் வீடே இரண்டுபட்டிருக் கும். இன்னும் சில குடும் பங்களில் மனைவி ஒரு பொம் மையாக மட்டுமே செயற்படு வாள்.

பல குடும்பங்களில் பல பிரச்சினைகள் தோன்றுவதற் குக் காரணமே மனைவியை மதிக்காது கணவன் நடப்பதால் தான். எல் லோருக்கும் வாழ்க்கை நூறு சதவீதம் மகிழ்ச் சிகரமாக அமைய வாய்ப்பில்லை. அவ்வாறு எதிர்பார்ப்பதும் தவறே.

மனைவிக்குப்பிடித்த கணவன் அமை யாமல் போவது, கணவனுக்குப்பிடித்த மனைவி கிடைக்காமல் போவது, கண வனின் நடை, உடை, பாவனைகள் மனை விக்குப் பிடிக்காமல் போவது, கணவனின் போக்குகள் மனைவிக்குப்பிடிக்காமல் இருப் பது, கணவனின் வெளிச்சேர்க்கை மனை விக்குப் பிடிக்காமல் போவது போன்ற பல காரணங்கள் ஒரு கணவனுக்கும் மனை விக்கும் இடையே பிரச்சினைகள் தோன்று வதற்குக் காரணமாக அமைகின்றன.

இவ்வாறு எண்ணும்போது தான் ஒரு மனைவியின் ஏக்கம் கோபமாக மாறி கடைசியில் அவளைத் தவறான திசைக்கு அழைத்துச்செல்கின்றது. கணவன் தன்னை மதிக்கவில்லை, தன்னை ஒரு பொருட்டாக நினைக்கவில்லை என்ற சிந்தனை அதி கரிக்கும்போது தான் கணவனுக்கும் மனை விக்கும் இடையே இருக்கும் விரிசல் பிள வாக முடிகிறது.

சின்னச்சின்னக் கீறல் கூட கணவன்— மனைவி இடையே வர அனுமதிக்கக் கூடாது. அப்படியே வந்தாலும், அடுத்த வரிடம் சொல்லித் தீர்க்க வழி தேடக்கூடாது. அப்படிக் கேட்கும் போது தான் மேலும் மேலும் அவர்களிடையே இடைவெளி அதிகமாகக் காரணமாகின்றது.

கணவன்—மனைவி இருவருக்கிடை யேயும் பிடிக்கவில்லை என்ற எண்ணமே தோன்றக்கூடாது. எதுவாக இருந்தாலும் பேசித்தீர்க்க முயல வேண்டும். பேச முடியாத நிலை என்பது கணவன்— மனைவிக்கிடை யே ஒருபோதும் இருக்காது. அவர்கள் இரு வரும் அன்னியர் போல் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளும் செயலை முளையி லேயே கிள்ளியெறிய வேண்டும். பேச முடி யாத நிலைதான் பிரச் சினைக்கு முதல் எதிரி.

மனைவியை விடக் குடும்பத்தில் நல்ல ஆலோசகர் வேறு எவ ருமே இருக்க முடியாது. பெரும்பாலான குடும் பங்களில் கணவனை மதிப்பார்கள். மனை வியை மதிப்பதில்லை. கூட்டுக்குடும்பங்களி டையே பிரிவு, சண்டை வரக்காரணமும் இதுவே.

கணவன் எக்கார ணம் கொண்டும் எந் தப்பிரச்சினையாகஇருந் தாலும், ஒன்று தாயிடம் ஆலோசனை கேட்கலாம். இல்லையென்றால் மனைவியிடம் ஆலோ சனை கேட்கலாம். இந்த இருவரை விட்டு குடும் பம் தொடர்பான எந்த விஷயத்திலும் ஆலோசனை கேட்கக் கூடாது. ஒரு குடும்பத்தின் வளர்ச்சி கணவன்— மனை வியையில்தான் உள்ளது. பிரச்சினைக்கான தீர்வும் அவர்களிடமே உள்ளது.

எனவே நான்கு சுவருக்குள் இருக்க வேண்டியவற்றை வெளியுலகிற்கு அம்பலப் படுத்தி உங்கள் நற்பெயரை வீணாக் காதீர்கள். ஒரு குடும்பத்தை சிறந்த வகையில் நிர்வாகம் செய்ய —ஒரு சிறந்த ஆலோசக ராகச் செயற்பட்டு அக் குடும்பத்தலைவியா லேயே முடியும் என்பதை நன்றாக உணர்ந்து செயற்படுவீர்களானால் அதை விட சிறந்த வாழ்க்கை வேறெங்கு கிடைக்கப்போகிறது?




## மூட்டு வலியா....

சத்திர சிகிச்சை, ஆயுள்வேத சிகிச்சை என்று இப்போது மூட்டு வலிக்குக் கூட நட்சத்திர அந்தஸ்து வந்துவிட்டது. கவனிக்காமல் விட் டால் தான் இந்த மூட்டு வலி விஸ் வரூபமெடுத்து எம்மை கலங்கடிக் கும். ஆரம்பத்திலேயே கவனம் செலுத்தினால், விபரீதங்களை உடனே தடுக்க முடியும்.

இந்தப் பயிற்சியைச் செய்து பாருங்கள். நீங்களே கண்கூடாக உணர்வீர்கள்.

*கால்களை அகட்டி நில்லுங்கள். கைகளை நேராக தொங்கவிட்டுக் கொள்ளுங்கள்.

*இரு கைகளையும் தோளுக்கு நேராக முன்புறம் தூக்குங்கள்.

*இடது கையை மடித்து, இடது உள்ளங்கையை இடது தோளுக்கு அருகே நேராகத் தூக்குங்கள். வலது கையை அதற்கு நேர் கீழே இடுப்பின் அருகே வையுங்கள். இடுப்பு இலேசாக இடது பக்கம் திரும்பி இருக்க வேண்டும்.

*அடுத்து வலது காலை முன் னால் நீட்டிக்கொண்டு, அதற்கு நேராக மார்புக்குப் பக்கத்தில் வலது கையை நீட்டுங்கள்.

*இடது கையை மெதுவாக வலது கைக்கு அருகில் கொண்டு வாருங் கள். அதே நேரம், வலது கையையும் சற்று மேலே தூக்குங்கள்.

*அடுத்து இடது கையைத் தரையை அழுத்துவது போல் இடுப் புக்கு அருகே வைத்துக்கொண்டு, வலது உள்ளங்கையை மார்பை நோக்கித்திருப்புங்கள்.

*பிறகு இரண்டு கைகளிலும் ஒரு பொருளை கஷ்டப்பட்டுத் தள்ளுவது போல் பாவனை செய்துகொண்டு வலது பாதத்தைக் குதிக்காலால் தாங் குங்கள்.

*அடுத்து வலது உள்ளங்கையை மார்புக்கு நேராகத்திருப்பி, இடது கையை வலது மணிக்கட்டில் வைத் தபடி வலது காலைத் தரையில் ஊன் றுங்கள்.

*இந்தப்பயிற்சியைத் தொடர்ந்து செய்து வந்தால் உடனடிப்பலன் நிச்சயம் உங்கள் உடலில்... நீங்களும் முயற்சி செய்து பாருங்களேன்

# மனமும் மரக்கறி உணவும்

மெல்லப் பதுங்கி வளர்கின்ற புற்று நோய், வாழ்நாளின் நீளத்தைக் குறைக்கும் கொழுப்புச்சத்து, எந்த நேரமும் மருந்தும், கையுமாக இருக்கச்செய்கின்ற நீரிழிவு நோய் போன்ற நோய்களின் ஆணிவேர் எதுவென் று ஆராய்ந்து பார்த்தோமானால் அதற்குக் கார ணம் மாமிச உணவுப்பழக்கமே ஆகும்.

பக்கவாதம், உயர் இரத்த அழு த்தம், புற்றுநோய் போன்றவைகள் மாமிச உணவு உண்பவர்களிடையே தான் அதிகம் ஏற்படுவதாக ஆய்வு கள் தெரிவிக்கின்றன.

மாமிச உணவு உண்பவர்களுக்கு மரக்கறி உணவு உண்டவர்களை விட 50 சதவிகிதம் அதிகமாக இருதய நோய் ஏற்பட வாய்ப்புகள் உண்டு என்று குறிப்பிடப்படுகின்றது. உணவு மற் றும் உடல்நலம் தொடர்புடைய அண்மைக்கால ஆய்வுகள் அனைத் தும் மாமிச உணவுகளையே குற்ற வாளிக் கூண்டில் நிறுத்துகின்றன.

பல மேலைநாடுகள் குறிப் பிடத்தக்க அளவில் மரக்கறி உண வுக்கு மாறிவருகின்ற வேளையில் எம்மவர்களுக்கு மட்டும் மாமிச உணவின் மேலுள்ள மோகம் இன்னும் குறைந்தபாடில்லை. மரக்கறி உணவு உடலுக்கு வலு சேர்க்குமா உடலுக்கு வேண்டிய சத்துக்கள் அனைத்தையும் மரக்கறி உணவிலிருந்து பெற முடியுமா என்ற சந்தேகங்கள் இன் னமும் பலரிடையே காணப்படுகின்றன.

ஜப்பானியரிடையே பெருங்குடல், மலக் குடல், மார்பகம், கர்ப்பப்பைப் புற்றுநோய் குறைவாக இருப்பதற்கு மரக்கறி உணவே காரணம் என்று மருத்துவர்கள் கூறுகின் றனர். அதிகம் புகை பிடிப்பவர்களிடம் ஏற்படுகின்ற நுரையீரல் புற்றுநோய் கூட தொடர்ந்து மரக்கறி உண்போரிடையே குறைவாக இருப்பதாக அறியப்பட்டுள்ளது.

பச்சைக்காய்கறிகளிலும், பழங்களி லும் தெளிக்கப்படும் பூச்சி மருந்துகளால் ஏற்படக்கூடிய தீய விளைவுகளைப்பற்றி விரிவாக விவாதங்கள் செய்யப்பட்டு வரு கின்றன. ஆனால் ஆடு, மாடு, கோழி



போன்றவற்றின் வளர்ச்சிப் பருவங்களி லும், பின்னர் இறைச்சியைப் பதப்படுத் தவும் சேர்க்கப்படுகின்ற பலவித தீவிர இர சாயனப் பொருட்களைப்பலரும் அறி வதில்லை.

இறந்த விலங்குகளின் உடலைப்பதப் படுத்த உபயோகிக்கப்படும் பார்மலின் என்ற இரசாயனத்தை மீன்களைப்பதப்படுத் தப் பயன்படுத்துகின்றனர். இறைச்சிக் கோழிகளுக்குத் தூக்க மாத்திரை கொடுக் கப்படுகின்றன. வீரியம் மிக்க இந்த இரசா யனக் கலவைகளால் மனித உடலில் பல புற்று நோய்கள் ஏற்படுகின்றன.

புரதமும், கொழுப்பும் குறைந்த நார்ச்சத்து மிகுந்த மரக்கறி உணவு இதயத்துக்கு மிகுந்த நலம் விளைவிக்கக் கூடியது. நார்ச்சத்துள்ள பொருட்களை அதிகமாக உண்ணும் நாட் களில் இரத்தத்தில் கொழுப்பின் அளவு குறை வதைக் காணலாம். பீன்ஸ், முள்ளங்கி, அவரைக்காய், பல்வகைப்பயறுகள் போன்ற வற்றில் நார்ச்சத்துக் காணப் படுகிறது.

தினமும் 150 கிராம் புரதச் சத்து உடலுக்குத் தேவை என்று முன்பு கூறப்பட்டு வந்தது. இந்த அடிப்படை யில்தான் மாமிச உணவு அவ சியம் என்று பலரும் கருதி வந்தனர். ஆனால் தற்போது ஒருவருக்கு தினமும் 45 கிராம் புரதச்சத்து இருந்தால் போதும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மேலும் அளவுக்கு அதிக மான புரதச்சத்துள்ள உண வால் எலும்புகள் பலம் குன் றிப்போவதுடன், சிறுநீரு டன் சேர்ந்து புரதச்சத்தும் வெளியேறிவிடும் என்றும் இதனால் சிறுநீரகங்கள் பாதிக்கப்படுகின்றன என்றும் மருத்துவர்கள் கருதுகின்றனர்.

இறுதியாக மனதுக்கும் மரக்கறிக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பிருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. மாமிசம் உண்பவர்களுக்கு அதிக கோபம், ஆத்திரம், வரும் என்றும் மரக்கறி உண்போரிடம் அது அதிகம் இல்லை என்றும் உறுதி செய்யப் பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

## முட்டை



### சீஸ் பரோட்டா

| | |
|---|---|
| சீஸ் | 25கிராம் |
| கொத்தமல்லி | 1/2 கப் |
| புதினா இலை | 1/4 கப் |
| பச்சை மிளகாய் | 2 |
| முட்டை | 3 |
| உப்புத்தூள் | தேவையான அளவு |
| மிளகாய்த்தூள் | சிறிதளவு |
| எண்ணெய் | சிறிதளவு |

**செய்முறை**

25கிராம் சீஸை மிக மெல்லிய தாக நறுக்கிக் கொள்ளவும். 1/2 கப் கொத்தமல்லித் தழை, 1/4 கப் புதினா இலை, 2 பச்சை மிளகாய் ஆகியவற்றைப் பொடியாக்கி நறுக் கிக் கொள்ளவும்.

மூன்று முட்டைகளைத், தேவை யான அளவு உப்புத் தூள், ஒரு தேக் கரண்டி மிளகாய்த்தூள் கலந்து முட்டை அடிக்கும் கருவியால் அடித் துக்கொள்ளவும்.

இத்துடன் நறுக்கிய பொருட் களை கலந்து கொள்ளவும். தாச்சிச் சட்டியில் 5 மேசைக்கரண்டி சமை யல் எண்ணெயை ஊற்றி சூடேற்றிய தும் முட்டைக்கலவையை ஊற்றிக் கிளறி முட்டை வெந்ததும் இறக்கிக் கொள்ளவும்.

# ஸ்ரீகாந்த் - சோனியா 'சதுரங்கம்'

ஸ்ரீகாந்த், சோனியா அகர்வால் ஜோடியாக முதல் முறையாக இணையும் 'சதுரங்கம்' படத்தை 'பார்த்திபன் கனவு' இயக்குநர் கரு. பழனியப்பன்இயக்குகிறார்.

படத்தில் ஸ்ரீகாந்துக்கு பத்திரிகை நிருபர் வேடம். ஆனால் 'பேனா முனையில் இந்த சமூகத்தை திருத்திக்காட்டுகிறேன்' என்று பேசுவதோஅல்லது கிரிமினல்களை ரகசியமாக போட்டோ எடுக்கும் சாகசம் செய்வதோ இல்லாமல் ஒரு நிஜமான பத்திரிகை நிருபரின் தனிப்பட்ட வாழ்க்கையை கொஞ்சம் பக்கத்தில்போய்பார்க்கின்றது இந்தப் படம். தினம் தினம் பரபரப்பு தேடி அலையும் வாழ்வின் மென்மையான பக்கங்களைப் புரட்டிப்பார்க்கின்ற படம் இது. 'பார்த்திபன் கனவு' பெண்கள் ரொம்ப விரும்பிப் பார்த்த படம். 'அடடா அக்சன் சீசனில் இப்படி ஒரு படம்ஓடுகிறதே என்று ஆச்சரியமாக புருவத்தை உயர்த்திப் பார்க்க வைத்த படம் அது. அதிலிருந்து விலகி, இயல்பாக காதல் பேசுகிற படம் 'சதுரங்கம்'. படத்தின் ஹீரோயின் சோனியா பற்றி இயக்குநர் கரு. பழனியப்பன் கூறும்போது, ''எப்பவுமே சோனியாவின் கண்களில் லேசான மென் சோகம் இருக்கும். அவங்க மலரச்சிரித்தாலும் அதனூடே லேசான சோகம் எட்டிப் பார்க்கும். அந்த சோகம் தான் இப்படி ஜனங்களை பிடிச்சு ஆட்டுது போல'' என்றார்

இன்னொரு உருக்கமான தகவலையும் சொன்னார் கரு. பழனியப்பன். '' படத்தில் நாயகனின் பெயர் ப.திருப்பதி சாமி. விகடனில்மாணவ நிருபராகவும் பிறகு திரைப்பட இயக்குநராகவும் இருந்த திருப்பதிசாமி. வருடங்களுக்கு முன் சாலை விபத்தில் சிக்கி இறந்து போனார். எனக்கு திருப்பதிசாமியை ரொம்பப் பிடிக்கும். விகடனிலும் சினிமாவிலும் எனக்கு சீனியர் அவர். வாழ்க்கையில் மிகச்சிலரைப் பார்க்கும்போது தான் எமக்கு வாழ்வின் மீதே நம்பிக்கை வரும். எனக்கு அப்படி ஒரு நண்பர் திருப்பதி சாமி. அவர் நினைவாகத் தான்என் கதாநாயகனுக்கு திருப்பதிசாமி என்று பெயர் வைத்தேன்.'' என்று கண் கலங்கக் கூறினார்.



# காதலுக்குப் புதுவிளக்கம்



ஷியாம், லைலா

தெலுங்கிலிருந்து தமிழுக்கு இறக்குமதியானவர் நடிகை நமீதா. இவர் ஆரம்ப கட்ட படத்திலேயே விஜயகாந்த், சரத்குமார் என பெரிய பெரிய நடிகர்களுடன் ஜோடிசேர்ந்து விட்டதால் எளிதில் பிரபலமாகிவிட்டார்.

'ஜெமினி' படத்தின்தெலுங்கு பதிப்பில் நடித்தவர் என்றாலும், படம் சரியாகப் போகவில்லை. அந்த நிலையில் தமிழுக்கு அழைத்தவுடன் அதுவும் விஜயகாந்த் சாருக்கு ஜோடியாகசான்ஸ் கிடைத்தது. உடனே வந்துவிட்டேன் என்றார்.

சினிமாவுக்கு வந்துவிட்டு கிளாமர்ரோல் பண்ணமாட்டேன் என்றெல்லாம் அலட்டிக்கொள்ளக்கூடாது. சினிமாவே கிளாமர் தானே.தவிர என் வயசுக்கும், இளமைக்கும் நிச்சயமாக நந்திதாதாஸ் மாதிரியெல்லாம் நடிக்க முடியாது என்கிறார். குதிரை மாதிரி உயரம், உடம்பென்று எனக்கே தெரியுது. சேலை கட்டினாலும் அள்ளிக்கிட்டுப் போகும். சுடிதார் போட்டாலும் எடுப்பாக இருக்கும். மேலும் ஜீன்ஸ் டி—சோர்ட் என்றால் சொல்லவே வேண்டாம். ஏற்கனவே டான்ஸ் கிளாஸ்முழுசாகப் படித்திருப்பதால் அந்த நளினமும் உண்டு. என் கண்களே நாலஞ்சு கவிதைத் தொகுப்புகளையாவது கொண்டுவரும்.என்னிடம் சிக்கிட்டா அவ்வளவுதான். அவ்வளவுசுலபத்தில் தப்பிவிட முடியாது'' என்று தன் பயோடேட்டாவை கொடுத்தவர்

காதல் பற்றி தன் அபிப்பிராயத்தைச் சொன்னார் — அதில்

''நல்ல காதலுக்கு அவசரப்படக்கூடாது. திடீரென்று ஐ லவ் யூ சொல்விட்டு, எதிர்பார்ட்டியை அலையவிட்டு, தெருவில் விட்டுவிட்டுப் போய்விடக் கூடாது. அதனால இப்போதைக்கு காதலுக்கு தடா, என்றாலும்இது எத்தனை நாளைக்கு நீடிக்கும் என்று தெரியாது. ஏன்னென்றால் , உடம்போட கெமிஸ்ட்ரிதானே காதல்'' என்கிறார். நிச்சயமாக நமீதா தமிழ் பட உலகில்ஒரு பெரிய ரவுண்ட் வருவார் என்பதில் சிறிதும் ஐயமில்லை என்கின்றனர் கோடம்பாக்கம் பட்சிகள்.

# சிம்பு தனுஷுக்கு வாழ்த்து

தனுஷ் கதாநாயகனாக நடிக்கும் 'சுள்ளான்' படம் வெற்றி பெற தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார் சிம்பு. தமிழ்த்திரையுலகில் தனுஷ், சிம்பு இரண்டு பேரும் மிக இளம் வயதில் கதாநாயகர்களாகி பரபரப்பாக இருப்பவர்கள். இருவரும் வாரிசு சலுகை பெற்றுத்திரைக்கு வந்தாலும் இருவருக்கும் தனிப்பட்ட திறமைகள், தகுதிகள் இருப்பதை எவரும் மறுக்க முடியாது. இரண்டு பேருக்கும் இடையே போட்டி, மனத்தாங்கல் என்று செய்திகள் வநத வண்ணம் இருக்கையில் சிம்பு தனது மனம் திறந்து பேசினார்.

''எல்லோரும் எனக்கும் தனுஷுக்கும் தான் போட்டி என்கிறார்கள். என் வழி வேறு. தனுஷ் வழி வேறு. நான் போட்டியாக யாரையும் நினைப்பதில்லை. உண்மையில் எனக்கு நான் தான் போட்டி. இங்கு ஏற்கனவே தியாகராஜ பாகவதர் — சின்னப்பா —எம்.ஜி.ஆர்— சிவாஜி, — ரஜனி— கமல் என்று ஒப்பிடல்கள் இருந்திருக்கு. சமீபத்தில் கூட அஜித்— விஜய் என்று பேசிக்கொண்டார்கள். இது சினிமாவுக்கு புதுதில்லை. அது போல எங்களையும் ஒப்பிடுறாங்க. வெவ்வெறு ஸ்ரைலில் பண்ணுகிறோம். அவர்படங்களும் ஓட வேண்டும் , என் படமும் ஓட வேண்டும். சினிமாத் துறை நல்லா இருக்க வேண்டும். எல்லோரும் வெற்றி பெறவே உழைக்கிறோம். அவர் நடிக்கும் 'சுள்ளான்' படம் வெற்றி பெற எனது வாழ்த்துக்கள் நிச்சயம் உண்டு'' என சிம்பு கூறுகிறார்.

தனது ' மன்மதன் ' படம் பற்றிக்கூறும் போது ''படத்தில் நான் 'பிளே போய்' கரக்டர் பண்ணுகிறேன். அழகான பெண்ணை பாத்தால் போதும் உடனே அவளை வளைச்சுப்போட்டிடுவேன். உண்மையில் இன்றைய இளைஞர்களின் கதை தான் இது. இப்போதெல்லாம் இளைஞர்கள் இங்கிலீஷ் தான் பேசுறாங்க. அதற்கு ட்றெசிங் ஸ்ரைல் மொத்தமாய் மாறிவிட்டது. வாழ்க்கை முறையே தலைகீழாக மாறிவிட்டது. காதலுக்காக ரிஸ்க் எடுக்க இன்றைய இளைஞர்கள் ரெடி இல்லை. ஒரு பெண்ணை லவ் பண்ணும்போது இன்னொரு பெண்ணோட சுத்தவேண்டும் என்று ஆசைப்படுறாங்க. இப்படி இன்றைய இளைஞர்களின் உண்மையான வாழ்க்கையை அப்பட்டமா 'மன்மதன்' இல் சொல்றோம்'' என்று கூறினார்.

*' மன்மதன்' வெற்றி பெற நாமும் வாழ்த்துவோம்.*



உள்ளம் கேட்குமே



மாதவன், ஸ்ரேயா

# 'அது'க்கடுத்தது 'அர்ஜுனா'

'பகைவன்', 'தேவ ராகம்', 'புதிய கீதை' போன்ற பல பிரமாண்டமான படங்களைத் தயாரித்த விஸ்வாஸ் வி.சுந்தர், இப்பொழுது சினேகா நடிக்கும் வித்தியாசமான திகில் படமான 'அது' என்ற படத்தைத் தயாரித்து வருகிறார். இப்படம் ஜூன் மாதம் திரைக்கு வருகிறது. இதையடுத்து பல கோடி ரூபாய் செலவில் பிரமாண்டமாக 'அர்ஜுனா' என்ற புதிய படத்தைத் தயாரிக்கிறார். இதில் சரத்குமார் இதுவரை நடித்திராத புதிய தோற்றத்தில் நடிக்கிறார். இதற்காக விசேட மேக்கப் செய்யப்படுகிறது. இவரது ஜோடிகளாக இரு நாயகிகள் நடிக்கிறார்கள். மன்மதராணி சாயாசிங் ஒரு நாயகியாக நடிப்பார். மற்றொரு நாயகி தேர்வு நடைபெற்று வருகிறது.

ஒகஸ்ட் மாதம் இப் படம் திரைக்கு வருகிறது. அகிம்சையைக் காப்பாற்ற வன்முறை செய்வது தப்பில்லை என்று ஆயுதம் எடுத்த ஒரு வீரனின் கதை இது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்




*த்ரிஷாவுக்கு நன்றாக தமிழ் பேசத் தெரியும். ஆனாலும் மேடைகளில் தமிழ் பேசாமல் 10 ஆங்கில வார்த்தைகளுக்கு ஒரு தமிழ் வார்த்தை வீதம் பேசுவார். ரொம்பத்தான் அலட்டிக்கிறார் என்று அவரது ரசிகர்கள் பேசுகிறார்கள்.

* ஒரு பாடலுக்கும் ஆடும் வாய்ப்பு விந்தியாவுக்கு வரவிடாமல் சங்கவியும், தாரிகாவும் திட்டம் போட்டு பறிக்கும் வேலையில் இறங்கி இருக்கிறார்கள்.

*ரஜினியிடம் சொன்ன கதையை சரத் குமாரிடம் சொல்வேன், அவருக்கு பிடித்திருந்தால் படம் எடுப்பேன் என்றார் டைரக்டர் தேஜா. கதை சரத்துக்கு பிடித்து விட்டதாம்.

* கில்லி படத்தில் விஜய்யுடன் ஜோடியாக நடித்திருந்தாலும் த்ரிஷா நிஜத்தில் அஜித்தின் ரசிகை. ஷாலினி த்ரிஷாவின் கிளாஸ் மேட்



அனு

# சினி டிப்ஸ்

*இன்று பல கோடிகளுக்கு அதிபதியான தனுஷின் தந்தை கஸ்தூரி ராஜா சென்னைக்கு வந்து முதன் முதலாக கற்பகம் ஸ்ருடியோவில் வேலை பார்த்தார். அப்போது அவரது வருமானம் மாதத்திற்கு ரூ.300 சம்பளமும் தினசரி ரூ.2 பொக்கற்பணமுமாம்.

*சென்னையில் ஒரு திருமண மண்டபம் கட்டும் திட்டத்தில் இருக்கிறார் விவேக்.

* பள்ளிப் படிப்பை முடித்த தனுஷின் காதலி லண்டனில் இருக்கிறார். தனுஷ் அவருடன் பேசுகிறார் என்பதெல்லாம் பழைய தகவல். புதுத் தகவல் இந்த டெலிபோன் பேச்சுக்கு மாதம் ரூ. 1, 1/4 லட்சம் பில் வருகிறதாம்.

* காரைக்குடியில் 'அருள்' படப்பிடிப்பும் 'மன்மதன்' படப்பிடிப்பும் ஒரே சமயத்தில் நடந்த போது விக்ரமுக்கும், ஜோதிகாவுக்கும் ஒரே ஹோட்டலில்தான் தங்கும் வசதியாம். இருவரும் ரொம்ப கொஞ்சிக் குலாவிக் கொண்டார்களாம்.

* கில்லியில் விஜய் அக்ஷனில் மட்டும் அல்ல நகைச்சுவையிலும் கலக்கி இருக்கிறாராம்.

*'தீனா', 'ரமணா' படத்தை தொடர்ந்து ஏ.ஆர் முருகதாஸ் இயக்கும் படத்தில் அஜித் நடிக்கிறார். முன்னர் விக்ரமிடம் கதை சொன்ன போது சில மாற்றங்கள் செய்யச் சொன்னாராம். அது முடியாது என்று மறுத்து விட்டாராம் ஏ.ஆர் முருகதாஸ்.

*பெரிய வனவிலங்குகள் சரணாலயம் அமைப்பது தான் எனது எதிர்கால லட்சியம். அதற்கு இந்தியா சரிப்பட்டு வராது. நியூசிலாந்தில் அப்படியொரு சரணாலயம் அமைக்கப் போகிறேன். அதற்கு நிறைய பணம் வேண்டும். அதற்காகத்தான் சினிமாவில் நடிக்கிறேன். என்கிறார். 'ஜே ஜே' பூஜா

*'மதுரா', 'சுள்ளான்', 'போஸ்' உள்பட ஏராளமான பெரிய படங்களில் நகைச்சுவையாக நடித்து வரும் முத்துக் காளைக்கு சிவசக்தி பாண்டியனின் படம் பெரிய அளவில் பெயர் வாங்கித் தரும் என்கிறார்கள். முழு நீளக் காமெடியில் வயிறு குலுங்க சிரிக்கவைத்திருக்கிறாராம்.



ரவுளி

# கனவு மெய்ப்பட வேண்டும்

'கனவு மெய்ப்பட வேண்டும்' பல தேசிய விருதுகளைப்பெற்ற 'குட்டி' திரைப்படத்தை அடுத்து இயக்குநர் ஜானகி விஸ்வநாதனின் இரண்டாவது படைப்பான 'கனவு மெய்ப்பட வேண்டும்' தமிழ்ப்புத்தாண்டு அன்று ரசிகர்களை மகிழ்விக்க வெளிவர இருக்கிறது. முன்னணி நட்சத்திரம் ரம்யாகிருஷ்ணன் மாறுபட்ட நடன மங்கை வேடத்தில் நடிக்கிறார். முதன் முதலாக 25 வயதில் தொடங்கி 65 வயது வரை செல்லும் கதாபாத்திரம். வரலட்சுமியாக அற்புதமாக தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியுள்ளார். முதன்முதலாக தனது சொந்தக்குரலில் 'தாழம்பூவே வாடா' என்ற அறிவுமதி இயற்றி மகேஷ் இசையமைத்த இனிமையான பாடலை மிக அழகாக பாடியுள்ளார். ஒரு மனிதன் பிறந்த பிறப்பு, அவனது சமூகம், மதம், சாதி போன்ற காரணங்களால் அவனது உரிமைகள் பறிக்கப் படக்கூடாது என்பதே படத்தின் அடிப்படைக் கரு. ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் பாதிப்பை ஏற்படுத்தும் மூன்று பெண்கள்— அவனது தாய், மனைவி, மகள். அவர்களிடையே ஏற்படும் மனப் போராட்டங்களையும் கதைக்குப்பின் புலமாக வைத்து சுவாரஸ்யமானதாகவும், ஜனரஞ்சகமாகவும் திரைக்கதை அமைத்திருக்கிறார்.

# வேதனைகளைக் கடந்து மீண்டும் நிமிர்ந்து நிற்கும் யாழ். சென்.பீட்டர்ஸ் ஆலயம்

யுத்தத்தினால் அழிந்து போன யாழ்ப்பாணம் சென்.பீட்டர்ஸ் மெடிஸ்த தேவாலயம் பெரும் பிரயத்தனங்களின் பின்பு மீண்டும் புதிதாக கட்டி எழுப்பப்பட்டுள்ளது.

இதன் அர்ப்பணிப்பு ஆராதனை எதிர் வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு கோலாகலமாக நடைபெறுகிறது.

இந்த நிகழ்வில் இலங்கை மெதடிஸ்த சபையின் தலைவர் வண.ஏ. நோயல் பி.பெர்னாண்டோ பிரதம விருந்தினராக் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்.

1823ஆம் ஆண்டு கட்டப்பட்ட சென் பீட்டர்ஸ் தேவாலயம் நீண்ட வரலாற்றைக் கொண்டது. யாழ் மண்ணில் பெரும் சேவையாற்றி உள்ளது.

## 80களில் ஆரம்பித்த நெருக்கடி

1980 களிலேயே இத் தேவாலயம் முதல் தடவையாக நெருக்கடியான சூழ்நிலையை எதிர்கொள்ள ஆரம்பித்தது. அன்றைய கால கட்டத்தில் யாழ் பொதுநூலகம் எரிக்கப் பட்டது. மாநகரசபை மண்டபம் சேதமாக்கப் பட்டது. கோட்டைக்கு சமீபமாக தேவால்யம் இருந்ததால் முதல் தடவையாக தேவாலயத்தின் சூழ்நிலை பாதிக்கப்பட்டது. அச்சமின்றி தேவாலயத்துக்கு வந்து வழிபாடுகளில் கலந்துகொண்டவர்களின் மனதில் ஒரு வித அசாதாரண நிலை உருவாகத் தொடங்கியது. வண எச்.ஆர்.எஸ். ஜெயச்சந்திரன் குருவானவராக இருந்த காலம் அது.

1986ஆம் ஆண்டு வண. கே.பி.கோவிந்தராஜ் இத் தேவாலயத்தின் முகாமைக்குருவாக நியமிக்கப்பட்டார். அந்தக்காலத்தில் இராணுவம் யாழ்.கோட்டைக்குள் இருந்தது. போராளிகள் கோட்டையைச் சூழ உள்ள இடங்களில் பதுங்குகுழிகளையும் காவல் நிலையங்களையும் உருவாக்கி மோதல்களில் ஈடுபட்டனர்.

இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் தேவாலயம் சேதம் அடைந்தது. முதல் தடவையாக அங்கு ஆராதனையை நடத்த முடியாத சூழ்நிலை அப்பொழுதுதான் ஏற்பட்டது.

ஷெல் தாக்குதல்கள் காரணமாக றிம்மர் மண்டபம், லொக்வூட் ஹவுஸ் ஆகியவற்றையும் ஞாயிறு ஆராதனைக்கு பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள அங்கிலிங்கன் தேவாலயத்தில் ஆராதனை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

கோட்டையில் இருந்து வந்து விழுந்த ஷெல்கள் காரணமாக அங்கிலிங்கன் தேவாலயத்திலும் ஆராதனையை நடத்த முடியவில்லை.பின்பு சென் ஜோன்ஸ் தேவாலயத்தில் ஆராதனை நடத்தப்பட்டது. இந்த நாட்களில் ஆறு ஷெல்கள் சென் பீட்டர்ஸ்தேவாலயத்தின் மீது விழுந்து பெரும் சேதம் விளைவித்தன. இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்திருந்த கிறைஸ்ட் தேவாலயமும் சேதம் அடைந்தது.



1987 இல் இலங்கை– இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது யுத்த நிறுத்தம் ஏற்படும்நிலை உருவானது. சென். பீட்டர்ஸ் தேவாலயம் சிறிய திருத்த வேலைகள் செய்யப்பட்டு ஞாயிறு ஆராதனை அங்கு மீண்டும் நடத்தப்பட்டது.

## மிக மோசமான காலப்பகுதி

1987 ஒக்டோபரில் விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்கும் இடையில் சண்டை ஆரம்பமானது.

தேவாலயத்தில் ஆராதனை நடத்த முடியாத நிலைமை மீண்டும் உருவானது. ஷெல்கள் விழுந்து ஆலயம் மீண்டும் சேதம் அடைந்தது.

சென் பீட்டர்ஸ் லேனிலும் மற்றும் பாதுகாப்பான இடங்களிலும் உள்ள தனியார் வீடுகளில் ஞாயிறு ஆராதனை நடத்தப் பட்டுவந்தது.

1990 ஜூனில் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையில் மீண்டும் யுத்தம் மூண்டது. இலங்கை இராணுவம் யாழ்.கோட்டைக்குள் முடங்கிக் கொண்டது. கோட்டைக்குள் சிக்கிக் கொண்ட படையினருக்கு விமானத்தில் இருந்து போட்ட உணவுப் பொதியில் ஒன்று தேவாலயத்தின் மீது விழுந்தது. தேவாலயத்தின் கூரையை மட்டும் அல்ல தேவாலயத்தின் உள்பகுதியையும் அந்த பொதி சேதமாக்கியது. விமானப்படையினரின் கண்மூடித்தனமான குண்டு வீச்சினால் தேவாலயம் மேலும் சேதமடைந்தது. மக்கள் பெருமளவு இடம் பெயர்ந்தனர். இதன் பின்பு தனியார் இல்லங்கள் றிம்மர் மண்டபம் என்று வசதிக்கேற்றவாறு ஞாயிறு ஆராதனைகள் நடத்தப்பட்டு வந்தன.

வண.கோவிந்தராஜ் காலத்திலே இந்த தேவாலயத்தை மீளக் கட்டியெழுப்பும் சிந்தனை உருவானது. முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கி ஒன்றில் இதற்காக பணம் வைப்புச் செய்யப்பட்டது. பின்பு வண. ஏ.டபிள்யூ.ஜெயநேசனின் காலத்தில் றிம்மர் மண்டபத்தில் ஆராதனைக்கு ஏற்ற வசதிகள் செய்யப்பட்டன தடையின்றி ஆராதனை நடைபெற்று வந்தது.

1994இல் வண.எஸ்.எஸ்.கருணைராஜ் முகாமைக்குருவாக நியமிக்கப்பட்டார். பின்பு அவர் வடக்கு–கிழக்கு மாவட்டத் தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டார். தேவாலயத்தை கட்டுவதற்கு நிதி சேர்க்கும் நடவடிக்கைகள் அவரது காலத்தில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன.

## வரலாறு காணாத இடம் பெயர்வு

1995 ஒக்டோபரில் வலிகாமம் படையினரால் வெற்றி கொள்ளப்பட்டபோது வரலாறு காணாத பெரும் இடம்பெயர்வு ஏற்பட்டது. தேவாலயம் மீண்டும் கைவிடப் பட்டது. சென் பீட்டர்ஸ் தேவாலய உறுப்பினர்கள்பருத்தித்துறைமெதடிஸ்தபெண்கள் பாடசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு தங்க வைக்கப்பட்டனர். சுமார் ஆறு மாதகாலம் அவர்களைப்பராமரிக்கும் பெரும் பொறுப்பை வண. கருணைராஜ் ஏற்றுக் கொண்டார். 1996 ஏப்ரலில் இடம் பெயர்ந்தவர்கள் மீண்டும் யாழ். திரும்பும் நிலைமை ஏற்பட்டது.

1999இல் வண. எஸ்.எஸ்.ரெறன்ஸ் சிறிதுகாலம் இங்கு கடமை யாற்றினார். தற்பொழுது வண.கே.கருணசேகரா முகாமைக் குருவாக கடமையாற்றுகிறார். புதிய தேவாலயத்தைக் கட்டும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன. அரசாங்கத்திடம் இருந்து 2 லட்சம் ரூபா பெறப்பட்டது. தென்கொரிய மெதடிஸ்த சபையின் நிதி உதவியாக 18 லட்சம் ரூபாவும் கிடைத்தது.

தென்கொரியா மெதடிஸ்த சபையின் ஆயர் வண.சுன்வா பார்க் தலைமையில் யாழ் வந்த தென்கொரிய மெதடிஸ்த சபை குழுவினர், முகாமைக் குருவானவரான கருண சேகராவினால் சென்.பீட்டர்ஸ் தேவாலயப் பகுதிக்கு அழைத்துச் செல்லப் பட்டு நிலைமை நேரடியாக அவர்களுக்கு காண்பிக்கப்பட்டது. இதனை அடுத்தே இப்பெரும்தொகைகிடைக்கவழிபிறந்தது.

அத்துடன் சென்.பீட்டர்ஸ் தேவாலய உறுப்பினர்கள், வெளிநாடுகளில் வாழும் தேவாலயத்தின் முன்னாள் உறுப்பினர்கள் என்று பலரிடம் இருந்து கணிசமான அளவு பணம் சேர்க்கப்பட்டு தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

13 ஆம் திகதி அர்ப்பணிப்பு ஆராதனையுடன் வழிபாட்டுக்காக புதிய ஆலயம் திறந்து வைக்கப்படுகின்றது.

–என்.பி.எஸ்–




பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# மரபுக் கவிதைகள்

அறிவினால் ஆராய்ந்து விடைகாண முடியாத குழப்பங்களுக்குத்தான் நாம் விதியென்று பெயரிட்டு அழைக்கிறோம் என்ற உண்மையை எம்மிடையே ஏற்றுக் கொள்வோர் மிகக்குறைவு. அனால், சில மனிதர்கள் தங்களின் இயலாமைக்கும் விதியென்று பெயர் சூட்டிக்கொள்கி றார்கள். இதுதான் வேடிக்கையான விடயம். உண்மையைச் சொல்லப்போனால் விதி யென்று ஒன்று கிடையாது. ஆனால், தீர்வு கள் தேட முடியாத குழப்பங்கள் உண்டு. அவையும் கூட நுட்பமான அணுகுமுறை களால் தீர்த்துக்கொள்ளக் கூடியனவே.

சில பிரச்சினைகள் எம்மையும் அறியா மல் எம்மை வந்தடைந்து விடுகின்றன. அந்தநேரங்களில் மனம் தடுமாறுகின்றது. தீர்வுகளைப் பெறுவதற்கு பல்வேறுபட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. இது யதார்த்தம். இதற்கு விளக்கம் தரமுடியாது. இதில் உழன்று மனம் ஒரு முடிவுக்கு வருகின்றது. அது பலனளிக்குமானால் வெற்றி என்றும், பலனளிக்காவிட்டால் விதியென்றும் கூறி எமக்கு நாமே சமா தானம் செய்து கொள்கிறோம். இந்த அறியாமைகள் என்று அகன்று போகுமோ அன்று நிறையக்குழப்பங்களுக்குத் தீர்வு கிட்டும். வசியின் குழப்பங்களுக்கும் வழிபிறக்கும்.

வசி.பெயருக்கு ஏற்றாற்போல் வசீகர மானவன்தான். ஒன்றை ஒன்று பற்றிப் படரும் சமுதாயப் பண்பாட்டின் தாற்பரி யங்களை கண்ணெனப் போற்றும் ஒரு அற்புதக் கலைஞன். மனித எண்ணங் கள் சில நேரங்களில் அசுர வேகத்தில் அடங்காது ஓட்டமெடுக்கும். அவற்றை கட்டிப்பிடித்து கடிவாளம் இடுவதில் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் வேறு பாடு உண்டு. வசீகரன் தன் உள்ளத்தை யும், எண்ணச் சுழலிகளையும் கலைக்கே அர்ப்பணிப்பவன் என்றால் அது மிகை யாகாது. அந்தளவிற்கு கலையில் பிரியம் கொண்டவன் வசி.

எண்ணச் சுழல்களிலே நினைவுச் சருகுகள் ஆலம்விழுதுகளாய் அங்கும் இங்கும் அசைந்தாடும் போது ஏற்படும் உற்சாகம் இருக்கிறதே! அதில் கிடைக்கும் சுகமே தனி. அது மட்டுமல்லாமல் அதன் உள்ளே கலந்திருக்கும் இன்பம் கலந்த சோகத்தையும் அனுபவிப்பவர்கள் மட் டுமே உணரமுடியும் என்பார்கள். அதை சமகாலத்தில் உணர்ந்துகொண்டிருப் பவன் வசி.

கனவுகளும் கற்பனைகளுமே இலட் சியங்களின் அஸ்திவாரங்கள். வசியின் எண்ணங்களும் நடத்தைகளும் இயல் பாகவே ஏனையோரில் இருந்து அவனை மாறுபட்டவனாகக் காட்டுவதை அவனே ஏற்றுக்கொண்டுள்ளான். நடைமுறைக் கும், யதார்த்தத்திற்குமே சராசரி மனிதன் அவனுடைய வாழ்க்கையில் அதிக முக் கியத்துவம் கொடுப்பதுண்டு. ஆனால், வசியோ தன்னுடைய வாழ்க்கையில் அதிகமாய் இடம் கொடுப்பது முரண் பாடுகளுக்கென்றால் ஆச்சரியமாகத் தான் இருக்கும். ஆனால், உண்மையும் அதுவே. யாரெல்லாம் ஐயோ இது பிரச் சினை என்று ஓடி ஒழிகிறார்களோ அதைத்தான் அவன் மனம் தொட்டுப் பார்க்கப் பிரியப்படுகின்றது. அதேநேரம் தொட்டுப்பார்ப்பது மட்டுமல்ல, வெற்றி யையும் தனதாக்கிக் கொள்ளும் ஆற்றலை யும் கொண்டவன் வசி.

கால மாற்றங்களையும் அதன் வளர்ச் சியையும் எல்லோருமே கை நீட்டி வரவேற் றாலும் மீறப்படாத மரபுகள் எத்தனையோ நல்ல உள்ளங்களை கசக்கிப்பிழிந்து காயப்படுத்திக் கொண்டுதான் இருக்கின் றன. இவ்வாறு மரபுகள் இட்ட விலங்குகளு டன் அவன் சந்தித்த மகோன்னதமானவளே ரஞ்சனா.

ரஞ்சனா ஒரு மாபெரும் ரசிகை. ஒரு கவிஞனுக்கு இருக்க வேண்டிய அடிப் படைதகைமையே ரசிப்புத்தன்மை தானே. அது அவளிடம் நிரம்பவே காணப்படு கின்றது. என்ன செய்வது இறைவன் புலன்களை வெளிநோக்கு கொண்டன வாகத்தானே படைத்துள்ளான். அதனால் தான் ஒவ்வொரு மனிதர்களினதும் உள்ள டக்கங்களை சரியாக புரிந்து கொள்ள




முடியாமல் பெரும் அவஸ்தைகளுக்கு உள்ளாகிறோம். அப்படித்தான் வெளித் தோற்றத்தில் விருப்புக் கொண்டு ஒரு வனை நம்பி ஏமாந்து போனாள் ரஞ்சனா.

ஒரு பெண் குழந்தையை எச்சமாகப் பெற்றும் அவிழ்க்க முடியாத அடிமை விலங்குகளை தனக்குத் தானே மாட்டிக் கொண்டு அடுப்படிக்குள் அடங்கிப் போகா மல் சாக்கடை சமூகத்தில் சமத்துவம் நிலை நாட்டப் புறப்பட்டவள்தான் ரஞ்சனா.

''காய்க்கின்ற மரத்துக்கு தானே கல் லடி'' ஒரு குழந்தையோடு தனியாக வாழ்வ தென்பது எவ்வளவு கஷ்டம் என்பதை நன்றாக உணர்ந்து கொண்ட அவளுக்குக் கிடைத்த நல்ல உறவு வசி. இறைவனின் ஒவ்வொரு இணைப்பிலும் ஒரு அர்த்தம் இருக்கும். அதுபோலத்தான் இவர்களின் உறவும். வெளியுலகம் இந்தப் புனித உறவைப் புடம்போட்டு பார்க்கத்தான் செய் கிறது. இருந்தும் எதிர்கொள்ளும் சக்தி இருவருக்குமே உண்டு.

வாழ்க்கை ஓர் ஓட்டம் நிறைந்த செயல். அதில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் மிக நிதானமாக இருக்க வேண்டும் என்பார்கள். வசி ரஞ்சனாவை மனதார ஏற்றுக் கொண்டு விட்டான் என்பது உண்மைதான். எடுக்கும் எந்தத் தீர்மானமாயினும் உறுதியாய் நிற்பவன்தான் வசி. ஆனால், இந்த விடயத்தில் ஏன் இப்படிக் குழம்பிப் போகிறான் என்று அவனாலே புரிந்துகொள்ள முடியவில்லை.

புதுமையான ஒரு முயற்சியில் யாராவது ஈடுபடும் போது பலரும் பலதை சொல்லிக் கொண்டுதான் இருப்பார்கள். அவர்களை எல்லாம் பார்த்து நம் செய்கைகளை நாம் தீர்மானம் செய்யப் போனால் ஒரு காரியத்தை யும் செய்து முடிக்கமாட்டோம் என்பதில் உறுதி யாக இருந்தவன் தான் வசி. அவனை நண் பர்களும், உறவினர்களும் பல்வேறு காரணங் களைக் காட்டி இந்த விடயத்தை கைவிடுவதற்கு தான் வழி சொன்னார்கள். யாருமே அவனுக் கும், அவளுக்கும் இடையில் இருக்கும் உறவைப் புரிந்துகொள்வதாய் இல்லை. ஆனால், சலனப்படாத அவன் மனம் மட்டும் அவளின் புனித அன்புக்கு துரோகம் இளைப் பதற்கு ஒரு கணமேனும் சிந்தித்துப் பார்த்தது கிடையாது.

அவன்தன் அபிலாஷைகளையும் அவாவை யும் பலருடன் பகிர்ந்துக்கொண்டதென்னவோ உண்மைதான். ஆனால், எல்லோரும் ஒட்டு மொத்தமாக ஒரு வட்டமிட்டு அதற்குள்ளே அமர்ந்து கொண்டு வர மறுக்கிறார்கள். ஏற் கனவே திருமணம் முடித்த ஒரு பெண்ணை மீண்டும் திருமணம் முடிக்க நினைக்கும் நல்ல உள்ளங்களுக்கு நம் சாக்கடை சமூகம் பல பெயர்களையிட்டு வைத்திருக்கிறது. என்ன செய்வது?

வாழ்க்கையின் ஜீவ துடிப்பு இருக்கிறதே அதன் ஆணிவேர் நம்பிக்கை தான். அந்த நம்பிக்கைதான் இத்தனை போராட்டங்களுக்கு மத்தியிலும் அவர்களின் காதலை வாழ வைத் துக்கொண்டிருக்கிறது. காதல் என்றாலே மோதல் கள் பின்னிப் பிணைந்ததுதான். வசியைப் பொறுத்தவரை சற்று அதிகமாகவே பிரச் சினைப்பட்டான். என்னதான் காதல் கை கொடுக்கும் என்றாலும் உறவுகளை உதறித் தள்ளுவது என்பது கடினமான விடயம்தான். அதே நிலைதான் வசிக்கும்.

தன்னுடைய இலக்கியப் படைப்புகளில் எல்லாம் தைரியமாக எத்தனையோ புரட்சிகர மான முடிவுகளைக் கொடுத்த அவன் தன்னு டைய வாழ்க்கைப் பிரச்சினைக்கு முடி வெடுக்க முடியாமல் தடுமாறிப் போனது தான் உண்மை. இதையிட்டு வசி வெட்கப் படுகிறான். வேதனைப்படுகிறான். இதன் மூலமாக வாழ்க்கை அஸ்தமித்துவிடுமோ என்கிற அச்சம் வேறு அவனைப் பாடாய்ப் படுத்தியது. இது தொடர்பாக தன்னுடைய மனப்பிரச்சினைகள் எல்லாவற்றையும் பேசித் தீர்த்துவிட வேண்டும் என்கிற சிந் தனையோடு ரஞ்சனாவைக் காணச் சென் றான் வசிகரன்.

''இங்க பாருங்க வசி நான் ஏற்கனவே பிரச்சினைப் பட்டவள்தான். இது எதையும் உங்களிடம் மறைத்தது கிடையாது. இருந் தும் உங்களின் மனப்பிரச்சினைகள் ஏன் இப்படி விஸ்வரூபம் எடுத்துள்ளன என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எடுத்த முடிவுகள் தவறாக இருக்குமென்று சிந்திக்கத் தொடங்கிவிட்டால் பின் அந் தச் செயலில் ஈடுபட்டு முழுமையான வெற் றியைப் பெறமுடியாது என்பதுதான் உண்மை. இதை நீங்கள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். வாழ்க்கை ஒரு நிர்ப் பந்தமாக இருக்கக்கூடாது. சுதந்திரமானதாக இருக்க வேண்டும். குழப்பங்களோடு கூடி வாழ்வதென்பது பெரிய வெற்றியைத் தராது வசி. நான் பிரச்சினைக்குள் இருப்பவள். நான் முடிவெடுப்பது சுலபம். ஆனால், நீங்கள் எடுக்கும் முடிவிற்குத்தான் வலிமை அதிகம். உறுதியான எண்ணங்கள் தான் முயற்சிகளுக்கு ஊக்கத்தை தருக்கின்றன. முதலில் எண்ணத்தில் உறுதி சேர வேண் டும். எண்ணங்களை ஒருமுகப்படுத்த வேண்டும். மனதில் அவற்றை வலுவான பதிவுகளாக செதுக்க வேண்டும். இல்லை யென்றால் இவ்வாறான பிரச்சினைகளில் இருந்து விடுபடுவது கடினம்தான்.

வசி வலுவான நல்ல எண்ணங்களை மட்டுமே மனதில் பதியவைக்க வேண்டும். எண்ணங்கள் திசை மாறினால் வாழ்க்கை யும் தடம் புரண்டு போகும். நாம் வாழ்க்கை யில் எப்படியாவது சேர்ந்துவிட வேண்டும் என்பதற்காக சுயநலமாக முடிவெடுக்கும் அளவிற்கு நான் சுயநலவாதி அல்ல. எந்தளவிற்கு நீங்களும் நானும் சேரவேண் டும் என்று பிரியப்படுகிறேனோ அந்த அளவிற்கு எதிர் காலத்தில் பிரச்சினைக ளும் வரக்கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றேன். ஏனென்றால் ஏற்கனவே நான் பல பிரச்சினைகளை சந்தித்து இருக் கின்றேன். இனிமேல் முடிவெடுக்க வேண் டியது நீங்கள்தான்'' என்றாள் ரஞ்சனா.

''சபலங்களும் சந்தேகங்களும் மனதை கவிழ்ந்து கொண்டிருந்தது உண்மைதான். எல்லாம் உன் சாந்த வார்த்தைகளால் இப் போது பகலவனைக் கண்ட பனி போல் விலகிப் போய்விட்டன. தெளிவுகளுக்கு அடிப்படையே குழப்பங்கள் தான்'' என்று மெல்ல நகைத்து ரஞ்சனாவை இறுகக்கட்டிக் கொண்டான் வசி.

(முற்றும்)

நிருபர் - ''என் சேர் நான் உங்களைப் பேட்டி காணும் பொழுதெல்லாம் உங்க ளுடைய கால்கள் இரண்டையும் கைக ளால் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளு கிறீர்களே?''

அரசியல் வாதி – ''எல்லாம் ஒரு பாது காப்புக்குத் தான். காலை யாரும் வாரிவிட்டு விடக்கூடாதே என்றுதான்.''





பொலிஸ் அதிகாரி– ''உனக்கு சட்ட அறிவு இல்லாவிட்டாலும் பரவாயில்லை, சாரசப் பொது அறிவாவது இருக்க வேண்டாமோ?''

''பால்க்கார மூனுசாமி பாலில் தண்ணீர் கலந்து விற்றதை பாலியல் வழக்கு என்று பதிவு செய்திருக் கிறாயே!''

இன்று பிறந்துள்ள புத்தாண்டு அனைவருக்கும் இனிதாக அமைய விநாயகப்பெருமானின் அருளுடன் வாழ்த்துகின்றோம்.

18.10.2003 அன்று தனது ஓராண்டு நிறைவைப் பூர்த்தி செய்து
அரிசி விற்பனையில் வெற்றிநடை போடும்
வன்னிப் பெருநிலப்பரப்பின் முதல்தர அரிசி ஆலையாகத்திகழும்

# பொன்னம்பலம் அரிசி ஆலை

வன்னி மண்ணின் தரமான நெல், அரிசிகளை
சில்லறையாகவும், மொத்தமாகவும்
பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்.....!




பொதி செய்யப்பட்ட
அளவுகளில்
கிடைக்கும்

# பொன்னம்பலம் அரிசி ஆலை

யாழ். சாலை, பரந்தன், கிளிநொச்சி
தொலைபேசி இல. 021 2285742

வெளிவந்துவிட்டது!

# கம்ப்யூட்டர் ருடே




மார்ச் 2004 இதழ்

புதுப்பொலிவுடன்
புத்தம்புதிய அம்சங்களுடன்

அச்சிட்டு வெளியிடுபவர்கள்:
உதயன் பப்ளிஷர்ஸ்

Dream Grafix

# புலிகளின் அதிரடிப் பாய்ச்சலும் கருணா தரப்பின் பின்வாங்கலும்

விடுதலைப்புலிகளின் தலைமை கருணாவுக்கு எச்சரிக்கை விடுத்து இருவாரங்கள் கழிந்த நிலையில், கருணாவையும் அவரது அடியாட்களையும் தேடிப் பிடித்து அழிக்கும் சண்டை மட்டக்களப்பில் ஆரம்பமாகி விட்டது.

புலிகளின் படையணிகள் மட்டக்களப்புக்கு வடக்கே உள்ள வெருகல் ஆற்றைக் கடந்து கருணாவின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் ஊடுருவி அதிரடித் தாக்குதலை நடத்தி வருகின்றன.



கருணாவின் சகோதரர் ரெஜி தனது சகாக்கள் சிலருடன்

இந்த தாக்குதலில் கருணா தரப்பு படைகளுக்குப் பெரும் உயிர்ச்சேதமும் ஆள் சேதமும் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையில் கருணாவின் பகுதியில் எல்லைப் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டவர்களும் புதிதாக அனுப்பப்பட்டவர்களுமாக நூற்றுக்கணக்கானோர் சரண் அடைந்தனர். தம்மிடம் இருந்த கனரக ஆயுதங்களை அவர்கள் கையளித்தனர்.

வெருகல் பகுதி ஊடாக புலிகள் நடத்தி வரும் தாக்குதல் நடவடிக்கையை அடுத்து வாகரை, பனிச்சங்கேணி, கந்தளடி, வம்மிவெட்டுவான் ஆகிய பகுதிகளை சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்தன. இந்த குடும்பங்களில் சுமார் 500 குடும்பங்கள் வரை மாங்கேணி றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் வேறு சிலர் 100 குடும்பங்கள் வெருகல் முருகன்கோவிலிரும் தஞ்சம் அடைந்துள்ளன.

தாக்குதலில் காயம்அடைந்தவர்களில் சிலர் வாழைச்சேனை வைத்தியசாலைக்கும் மற்றும் சிலர் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கும் இராணுவத்தின் உதவியுடன் கொண்டு செல்லப்பட்டனர்.

தாக்குதல்நடத்திய புலிகள் முதலில்கருணாவின்கதிரவெளிதளத்தையேகைப்பற்றினர்.

அந்தத்தளத்துக்குப் பொறுப்பாக இருந்த மார்க்கான் என்பவருக்கு என்ன நடந்தது என்றேதெரியவில்லை.

மருதங்கேணியில் இருந்து வெருகல் வரையான பகுதிகளுக்குப் பொறுப்பாக இருந்தவர் ரெஜி என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி சிவகணேசதுரை. கருணாவின் மூத்த சகோதரர் இவர். வெருகலில் தாக்குதல்ஆரம்பமான போது ரெஜிதப்பி ஓடிவிட்டார்என்று தெரிவிக்கப்படுகிறது.

சொர்ணம் தலைமையிலான புலிகளின் அணியேபலநூற்றுக் காணக்கில் கருணாவின் பிரதேசத்துக்குள் ஊடுருவி முன்னேறி வருகின்றன.

ஒருபுறம்கடல் வழியாக கதிரவெளியில்இருந்தும் மறுபுறத்தில் வெருகல் ஆற்றைக் கடந்தும் படைநகர்வை வெற்றிகரமாக ஆரம்பித்த புலிகள் ஆரம்பத்தில் சிறிய எதிர்ப்புகளை எதிர்நோக்கிய போதிலும் பின்புதங்குதடை இன்றி வாகரை வரை முன்னேறினர்.

கடந்த 25 ஆம் திகதி புலிகளின் தலைமையகம் மட்டக்களப்பு அம்பாறை போராளிகளுக்குவிடுத்த வேண்டுகோளில் கருணாவைவிட்டு விலகிச் செல்லுமாறு கோரி இருந்தது. கருணாவை ஒழித்துக் கட்டும் நேரம் வந்துவிட்டதாகவும் எச்சரித்திருந்தது.


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

2004.04.11



செல்வன் கவிந்தன்

உதயசூரியன் - ஜெயபாரதியின் செல்வப் புதல்வன் கவிந்தன் சுவிட்ஸர்லாண்ட் பாசெல்இல் உள்ள தனது இல்லத்தில் இன்று (2004.04.11) ஞாயிற்றுக்கிழமை தனது பிறந்த நாளைவெகு விமர்சையாக கொண்டாடுகின்றார். இவரை சுவிஸ் பாசெலில் உள்ள பெரிய அத்தையான வி.ரஞ்சினி, அத்தான்மாரான கபில் (சுவிஸ்), விஜேந்த் (சுவிஸ்), பெரியப்பாவான அ.மனோகர் (லண்டன்), பெரியம்மாவான தேவமோகனா (லண்டன்), அண்ணன்மார்களான டென்ஷன் (லண்டன்), டெஸ்மன் (லண்டன்) மற்றும் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் உள்ள அப்பப்பா (காலஞ் சென்ற அண்ணாமலை), அப்பம்மா அ.கமலாதேவி, சின்ன அத்தையான அ.வசந்தினி, குட்டி சித்தாவான அ.சந்திரமோகன் (டைட்டானிக் கொம்பியூட்டர் ரெக்கோடிங் - உடுப்பிட்டி) மற்றும் அம்மையா, அம்மம்மாவான ஜெயரட்ணம் கமலா, மாமன்மாரான ஜெகன் (லண்டன்), காந்தன், நிர்மல், சித்திமார்களான சுதா, பிரதா,பிரபா, சின்னக்காமார்களான சங்கீதா, சாளினி ஆகியோர் இவரை சகல கலைகளும் பெற்று வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்: பெரியப்பாவான சந்திரசேகர் (மனோகர்) (லண்டன்)


## சொற்சிலம்பம் போட்டி இல.103

சொற்சிலம்பம் 103 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் ஏப்ரல் 18ஆம் திகதி ஆகும். விடைகள் ஏப்ரல் 25ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மே2ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.101க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடுதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.103

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | ■ | 5 | |
| | ■ | 6 | | | 7 | | ■ |
| 8 | 9 | | ■ | 10 | | ■ | 11 |
| 12 | | ■ | 13 | | | 14 | |
| | ■ | 15 | | | ■ | 16 | |
| ■ | 17 | | | ■ | 18 | | |
| 19 | | | | 20 | | | ■ |
| 21 | | ■ | 22 | | | ■ | 23 |

## சொற்சிலம்பம் போட்டி இல.103

### இடமிருந்து வலம்

1. ஒருவரின் அல்லது ஒன்றின் சார்பாக வருபவர்.
5. வீட்டில் வளர்க்கும் பறவை.
6. சூரியன்.
8. சேறு.
10. முற்கால ஆயுதம்.
12. தீர்வை.
13. பக்கத்து வீட்டுக்காரன்/ பக்கத்தில் வசிப்பவன்.
15. வரையப்பட்டிருக்கும் ஒன்றின் தோற்றம்.
17. இல்லாது அழி.
18. நெருப்பு
19. இப்பிறப்பு முடிந்து பெறும் பேறு.
21. தர்க்கம்/ விவாதம்.
22. களவெடு.
23. பாடல்/ நெசவுக்கருவி

### மேலிருந்து கீழ்

1. பிறப்பு நிகழ்வு.
2. தினசரி மாறுவது.
3. பணம்/பொன்/ ஆபரணம்.
4. பொக்கிஷம்/ பொருள்.
5. அரசு.
7. இயலுமான/ செய்ய முடிந்த/ இயன்ற.
9. எரிந்த பின் மிஞ்சுவது.
11. கிரௌஞ்சப் பறவை
13. மிக நெருக்கமாக / திணிவுக்கும் கனவளவுக்கும் உள்ள வீதம்.
14. முகம்.
15. கூற.
17. தங்களுடையது.
18. ஒரு கால் எட்டில் நடக்கும் தூரம். காலை விரித்தால் இடைப்பட்ட தூரம்
19. ஆசைப்பெருக்கு.

## சொற்சிலம்பம் போட்டி இல.101

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 று | 2 மா | 3 ஸ் | ■ | 4 ச | ம் | 5 பா | 6 தி |
| 7 வா | ன் | ப | யி | ர் | ■ | 8 ர | தி |
| ய் | ■ | ரி | ■ | 9 வ | கு | தி | ■ |
| ■ | 10 வா | ச | 11 க | ம் | ■ | 12 யா | 13 து |
| 14 கு | ட | ம் | பி | ■ | 15 கோ | ர் | வை |
| 16 வி | ல் | ■ | 17 ல | 18 வ | ன் | ■ | த் |
| ப் | ■ | 19 ந | ன் | றி | ■ | 20 ச | ந |
| 21 பு | ழு | தி | ■ | 22 து | ம் | ம | ல் |

## சொற்சிலம்பம்-100 பரிசு பெறுவோர்.

1. ப.தமிழினி,
683, கொத்தம்பியாகுளம், துனுக்காய்.

2. கே.சிறிவிமலராணி,
10/1 கணேசபுரம், கிளிநொச்சி.

3. கு.கஜேந்தினி,
இல.403 ஏ,
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

### பாராட்டுப் பெறுவோர்

1. வீ.இராசதுரை, வீரபாண்டியன் வீதி, கரவெட்டி.
2. பொ.ராதிகா, மீசாலை கிழக்கு, மீசாலை.
3. ஆர்.ராகினி, என்பீல்ட் எஸ்டேட், டிக்கோயா.
4. இ.சரோஜினி, முத்து ஐயன்கட்டு, ஒட்டுசுட்டான்.
5. சி.குகதாசன், புதுக்குடியிப்பு, முல்லைத்தீவு.
6. திருமதி. ஆர்.எம்.தயானந்தன், 15ஆம் கட்டையடி, உடுப்பிட்டி
7. சி.ராஜரெட்ணம், இருதயபுரம் மேற்கு, மட்டக்களப்பு.
8. இ.குலசிங்கம், 5 ஏ வட்டாரம், யா/நயினாதீவு.
9. சி.லக்ஷன், கொம்மாதுறை, செங்கலடி.
10. திருமதி.எம்.ஆர் பாலேந்திரா, கொச்சிக்கடை, கொழும்பு—13.



# காதலுக்காக உயிர் நீத்த ஆசிரியை

கப்ரில்லா ரஸ்ஸி, ஐந்தடி உயரமானவள். செம்மறி ஆட்டுக்குட்டியின் முகம் போன்று அகலமானது அவளது முகம். 31 வயது அவளுக்கு. என்றாலும் பார்ப்பதற்கு உடன் கவரும் 18 வயதுத் தோற்றம்.

மார்சல்லா வீதி முழுதும் அவளை அறியும். அவளது எட்டும் நடையும், அவள் மீது மொய்க்கும் விழிகளும் எப்போதும் பின் தொடரும் நிழல் போல் ஒட்டிக்கொண்டே திரியும்.

பாரிஸ் காதலர்களுக்குப் பேர்போன நகரம். புரிந்துகொள்ளல், அன்பு கொள்ளல், சகித்துக்கொள்ளல் என்பன எமது மண்ணில் இல்லையே என்று வேறு நாட்டார் பொறாமை கொள்வர்.

கப்ரில்லா ரஸ்ஸி, தடை செய்யப்பட்ட சட்டங்களை எல்லாம் தாண்டிச்சென்றவள். தனது அன்பு, காதல் பற்றி பெருமிதம் கொள்வாள். எல்லோரிடமும் அவள் காதல் பற்றிப் பேசித்திரிவாள்.

கப்ரில்லாவின் காதலன் வயது தெரியுமா? பதினாறே தான். அவளது மாணவன். பாடசாலையில் ஆசிரியை. காலையில் படிப்பு. மாலையில் காதல்.

## மோசமான பரிசு

பாரிஸ் கலாசாரத்தில் வயதான பெண் பாலியல் பருவத்தில் உள்ள பையனைக் காதலிப்பது ஏற்கனவே உள்ளது தான். கொலற் எழுதிய கனியும் விதை(Colette's The ripening seed) எனும் நாவலில் இப்படியான பாத்திரங்களும் உண்டு.

போதனை ஆசிரியையான கப்ரில்லா நாவலில் வரும் பாத்திரங்களை தனது சொந்த யதார்த்தமான வாழ்வில் பிரயோகித்து வாழ்க்கையைக் குழப்பிக்கொண்டாள். இதற்காக மோசமான பரிசையும் பெற்றுக்கொண்டாள்.

கிறிஸ்ரியன் ரோஸிதான் அவளது காதலன். அவனுக்குப் பாலியல் ததும்பும் 16 வயது. கூச்சம் நிறைந்தவன். வெட்கப்படுவான்.

என்றாலும் காதல் ஒரு கட்டத்தில் துணிவையும் கொடுக்கும். கூச்சத்தையும் வெட்கத்தையும் தள்ளிவிட்டு முன்னேறும் சக்தி மிக்கது காதல். அது எப்போதும் வேகம் கொண்டது.

கிறிஸ்ரியன் ரோஸி, அவனது வயதை விட உயரமானவன். பார்ப்பதற்கு பெரிய ஆள். ஒருவரும் பதினாறு வயதுப் பையன் என்று சொல்வதில்லை. அவன் தீவிரவாத இடதுசாரிப்போக்குக் கொண்டவன். இவனது அரசியல் இப்படித்தான் இருந்தது. இவனது காதலுக்கும், அரசியலுக்கும் கூட உறவும், நெருக்கமும் தொடர்பும் இருந்தன. இதனால் சக மாணவர்களிடையே இவனுக்கு தனித்த பிரபல்யம் இருந்தது.

கப்ரில்லா 31 வயதுடையவள். ஏற்கனவே திருமணமாகி கைம்பெண்ணாக வாழ்பவள். ஒரு பிள்ளை வேறு உண்டு. காதலுக்கு இவையெல்லாம் ஒரு பொருட்டே அல்ல.

## சட்டத்தில் இடமில்லை

சட்டம் விட்டுவைக்கவில்லை. கிறிஸ்ரியன் ரோஸியை மைனராகவே பார்த்தது. இந்தப் பார்வை பிரச்சினையாகியது. பிரச்சினை பிணக்கில் தீர்வாகவும் அமைவதுண்டு. இங்கு பிரச்சினை. அவள் தனது மாணவனை துஷ்பிரயோகப்படுத்தி இருக்கிறாள்; மாணவனை பழுதாக்கியிருக்கிறாள்; என்று தான் சட்டம் அதன் நிலையில் இருந்து வியாக்கியானப்படுத்தியது.

## கற்பிக்கும் முறை

பாரிஸில் தொன்றுதொட்டு பேணி வரும் பழைமை முறையில் இருந்து விடுபட்டு மாணவர்கள் விரும்பும் வழிமுறையினைக் கடைப்பிடித்தாள்.

இங்கு தான் அவள் பல கல்வியியல் நடைமுறைகளை மீறிச் சென்றாள். மாணவர்களுடன் மிக நெருக்கமாகப் பழகியே போதனை செய்வாள். நெருக்கத்தில் படிப்பு நன்கு ஏறும்.

மாணவன் – ஆசிரியன் உறவின்மூலம் கல்விச் செயற்பாடு சுவாரஸ்யமானது. இவளிடம் இருக்கும் சகலவற்றையும் பரிமாறிக்கொள்ளும்வரை அந்த சுவாரஸ்யம் இட்டுச் சென்றது. உறவு திருப்தி என்றால் பரிமாற்றல் அதிகம் நிகழும். நிகழ்ந்தது அதிகம் அதிகம். பாடசாலைக்கு வெளியிலும் பரிமாற்றல் நடந்தேறியது.

மாணவர்களை மாலையில் வீட்டுக்கு அழைத்து பாடம் சொல்லிக்கொடுத்தாள். வேலை கொடுத்தாள். மேற்பார்வை செய்தாள். ஒலி நாடாக்களைச் செவியுறுமாறு மாணவர்களைக் கேட்டுக்கொள்வாள்.


இதனால் அவளை அவர்கள் Gatito என்று செல்லமாக பட்டம் சூட்டி கூப்பிடுவர். Gatito என்றால் சிறுபூனை என்று பொருள். அவளும் அதனை விரும்பினாள். சோகத்தில் செய்யும் எல்லாமே சரியாகவும் நல்லதாகவும் படும். கப்ரில்லாவுக்கும் அப்படித் தான்.

கப்ரில்லாவுக்கும் ஓர் அரசியல் பார்வை இருந்தது. அவள் இடதுபோக்குக் கொண்டவள்.

அவளின் அரசியல்பார்வை, அவளது கற்பித்தல் போக்கையும், நடத்தையினையும் மாற்றி இருந்தது. அரசியல் மாற்றத்தை உருவாக்கக் கூடியது தான்.

## காதலன் குடும்பம்

கிறிஸ்ரியன் ரோஸி, தீவிர அரசியல் ஈடுபாடு கொண்ட மாணவன். அவனது பெற்றோரும் அப்படித்தான். தனித்த அரசியல் கண்ணோட்டங்களை கொண்டவர்கள்.. பெற்றோர் இருவருமே பல்கலைக்கழக பேராசிரியர்கள். கம்யூனிசவாதிகள். இவர்களது வாழ்வியல் கருத்துக்கள் மாசேதுங்கின் சிந்தனையில் இருந்து பிறந்தவை.



என்னதான் அரசியல் கருத்து இருந்தாலும், என்னதான் அரசியல் உடன்பாடு ஏற்பட்டாலும் எந்தத் தகப்பனும் 16 வயதான மகனை 31 வயதானவளுடன் காதல் என்ற பெயரில் சேர்ந்து திரிய, சுற்றித்திரிய, படிப்பு என்ற பெயரில் விடுவார்களா?

அது மட்டுமல்ல, விடுமுறையைக் கழிக்க வெளியில் சென்று இரண்டு, மூன்று நாட்கள் என்று தங்கியிருந்தனர். கல்விச்சுற்றுலாக்கள் எல்லாம் காதல் சுற்றுலா என்று வெளியில் பொருள் கொள்ளப்பட்டன. அது தான் காதல். பேசுவார் பேச்செல்லாம் காதில் விழாது. காதலுக்கு செவிடும் தான்.

இது போக, இருவரும் – சோடிகள். காதலுக்கு அப்பால் அரசியல் போராட்டத்திலும் இணைந்து செயற்பட்டவர்கள். ஆசிரியை மாணவர் என்பதையும் மீறி, போராளிகளாகவும் அரசியல் எதிர்ப்பாளிகளாகவும் பங்கேற்றவர்கள். 1968 மே முதல் நிகழ்ந்த கிளர்ச்சியில் இருவரும் தீவிர பங்களிப்புச் செய்தனர்.

## கல்வி அமைச்சுக்கும் தெரியும்

இரகசியம் என்று நினைக்கும் இந்த உறவு முழுப் பாடசாலைக்கும் தெரிந்திருந்தது. போதாததற்கு உயர் அதிகாரிகள் வரை உயர்ந்து சென்றிருந்தது. உயர்ந்தால் பலருக்குத் தெரிய வருவதுண்டு. இதுவும் அப்படித்தான். கல்வி அமைச்சுக்கும் தெரிந்தது.

உடனே அமைச்சகம் அவளை ரென்னாஸ் பல்கலைக்கழகத்துக்கு மாற்றியது. அது பல நூறு மைல்கள் தூரமானது. அவள் அந்த மாற்றலை ஏற்கவில்லை. மாணவரையும் சேர்த்து மாற்றியிருந்தால் ஏற்றிருப்பாள். தனியே போவதற்கு இஷ்டமில்லை.

அடுத்த கட்டம் வழக்கு. கோர்ட்டுக்கு என்றானது. மைனரை பழுதாக்கிய குற்றம். அப்படி என்றால் பாரிஸ் சட்டத்தில் 10 வருடங்கள் சிறை.

இது பாரிஸ் சட்டத்தில் Detournement de Miner என்று வழங்கப்படுகிறது. இதுவே மைனர் தொடர்பில் பிரயோகிக்கப்படும் சட்டம்.

## மேலும் ஒரு குற்றம்

கப்ரில்லா கோர்ட்டுக்குப்போக வேண்டி இருந்தது. அங்கு அழைத்துவரப்பட்டாள்.

தொடக்கத்தில்தான் இளம் வயதுக்காரி என்றே வாதிட்டாள். என்றாலும் அவளது அடையாள அட்டை முரண்பட்டு நின்றது. இதனால் மேலும் ஒரு குற்றத்தையும் இழைத்தாள்.

கிறிஸ்ரியன் ரோஸியைத் தேடி வலை விரிக்கப்பட்டது.. அவன் அகப்படவில்லை. மறைந்திருந்தான்.

1968 கிறிஸ்மஸ் நிறைவுற்றது. கிறிஸ்ரியன் ரோஸியை பெற்றோர் மனோதத்துவ தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். ஓரளவு காதலில் இருந்து விடுபட்டதாகவே பெற்றோர் கருதினர்.

இதேவேளை, கப்ரில்லா ஜெயிலுக்கு அனுப்பப்பட்டாள்.

## பெயர் மாற்றமடைகிறது

அவளது பெயர் 59264 என்றானது. சிறை அறையில் சக பெண் கைதிகளுடன் பாலியல் உறவில் ஈடுபட்டாள். அதனால் சிறையில் lesbian (பெண்ணுடன் உறவுகொள்ளும் பெண்) என்று முத்திரை குத்தினர்.

கெப்ரில்லா கவிதை, இலக்கிய உலகில் வித்தியாசமாகப் பார்க்கப்பட்டாள். அடிமட்ட மக்களின் மனதிலும் அவள் ஒரு மாதிரியானவளாகவே தோன்றினாள். அவளுக்கு எதிராகவே கீழ்மட்ட மக்கள் கதைத்தனர். என்றாலும் அவள் துணிவு கொண்டவள். பாரிஸில் காலங்காலமாக நிலவி வந்த குடும்பஅலகு பற்றி கருத்தோட்டத்துக்கு மாற்றமான கருத்தினை வெளியீடாகப் பெற்றனர். பிள்ளைகளைத் தனக்குக் கட்டுப்படுமாறு நிர்ப்பந்திக்கக் கூடாது என்ற கருத்தினை வெளிப்படுத்தினாள். ஒழுக்கம் பற்றி வரைவிலக்கணத்தை புதுப்பித்து புது வியாக்கியானம் செய்தாள்.

இதனால் சிறைக்குள் ஆயிரம் ஆயிரம் கடிதங்கள் வந்து குவிந்தன. அவளைக் கடிந்தன. திட்டித் தீர்த்தன. "ஒழுக்கம் பேசுகிற ஒழுக்கம்" என்று திட்டித்தீர்த்தன.

வந்த கடிதங்களுள் பெரும்பாலானவை பெற்றார்களிடம் இருந்து தான் வந்தன. "இவளை இன்னும் வைக்கணும் சிறையில" என்று எழுதித் தீர்த்தனர். வெளியில் பல குரல்கள் எழுந்தன.

இவளின் விடுதலை விடயத்தில் அதிகாரிகள் பூனை எலி விளையாட்டுத் தோரணையில் நடந்து கொண்டனர். பின்பு விடுதலையானாள்.

## தற்கொலை எத்தனம்

குற்றம் சுமத்தப்பட்டு உத்தியோகபூர்வமாக கைது செய்யப்பட்டு வெளிக்கிடுகையில் அவள் தற்கொலை செய்ய முனைந்தாள். உள் மனம் உண்மை சொல்லும். பொய் சொல்ல வைத்தால் அது இந்த முடிவை எடுக்கும்.

பொலிஸ் அறிக்கையிலும், "ஆசிரியை என்ற ஸ்தானத்தில் இருந்து கொண்டு அத்தொழிலையும் துஷ்பிரயோகம் செய்துள்ளார்" என்று குறிப்பு எழுதி இருந்தது. எல்லாம் முடிந்த பிறகு, அவள் கோப்பியினுள் அதிக தூக்க மாத்திரைகளைப் போட்டுக் கொண்டு உறங்கினாள். உறங்கினாள். உறங்கினாள் எழும்பவே இல்லை.

சனிக்கிழமை உறங்கியவளை திங்கள் தான் கண்டுபிடித்தார்கள்.

கா. திகிலன்


இப்பொழுது வெள்ளவத்தையில்

சுடர் ஒளி உதயன் விளம்பர கருமபீடம்

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை எமது வெள்ளவத்தை 4C,6-1/1, (Fussells Lane) பசல்ஸ் லேன் இல் (பொலிஸ் ஸ்ரேசனுக்கு எதிராக) அமைந்திருக்கும் எமது விளம்பரக் கருமபீடத்திலும் கையளிக்கலாம்.

மேலதிக விவரங்களுக்கு:-

விளம்பர முகாமையாளர்
'உதயன்' 'சுடர் ஒளி' விளம்பரப்பிரிவு
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு – 14.
011 4 734401 – 3 , 011 2 399666 – 70

வெள்ளவத்தையில்
தொடர்புகளுக்கான
தொலைபேசி இலக்கம்.
071 4801391

நூலகம்
யாழ்ப்பாணம்



# டேஸ்ட்கடை தணிகாசலம்

நீண்ட நாட்களுக்குப்பின்பு கடைக்கு வந்த தணிகாசலம், கடைப்பையன் கொடுத்த கணக்கு வழக்குகளை எல்லாம் பார்த்து விட்டு கடை முன் கிடந்த பெஞ்சில் அமர்ந்து அன்றைய பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தார். அப்போது அப்பாவு தலைவரும், நடராசனும் வந்தனர்.

''வணக்கம் அண்ணே''

''வணக்கம், வணக்கம். வாங்க இப்படி உட்காருங்க'' எனக்கூறிய தணிகாசலம் இருவரையும் அமரச் செய்தார்.

''என்னங்க அண்ணே பேப்பரில போட்டு இருக்கு. அரசியல் சமாச்சாரம் எல்லாம் எப்படி இருக்கு? என ஆரம்பித்தார் அப்பாவு தலைவர்.

''அதைப் பார்த்துத் தான் நானும் மண்டையைப் போட்டுக்குழப்பிக் கிட்டு இருக்கேன். நாம எதிர்பார்த்தது ஒன்னு, நடந்தது ஒன்னா இல்லே ஆகிப்போச்சு'' என்றார் தணி அண்ணன்.

''ஆமாங்க அண்ணே நாமளும் எதை எதையோ நினைச்சு ஓட்டப் போட்டோம். நம்ம தலைவர் மாருங்க வெத்திப்புட்டாங்க. இப்ப என்னடான்னா எதையும் செய்ய முடியாம இல்ல போச்சு'' என்றான் நடராசன்.


''தம்பி நடராசன் சொல்லுறதும்சரி தான். மலையகத்தில நாம வெற்றியடையச் செய்துப்புட்டோம். ஆனால் தென் பகுதியில் இந்தத் துவேசகாரப்பசங்க கவுத்துப்புட்டாங்களே'' என்று அங்கலாய்த்தார் அப்பாவு தலைவர்.

''ஆமாம் தம்பி. இதுல ஒரு உண்மை இப்ப அப்பட்டமா தெரிஞ்சி போச்சி'' என்றார் தணி அண்ணன்.

''இதுல என்னங்க அண்ணே விசேஷம் இருக்கு?'' என்று எல்லோரும் வியப்புடன் கேட்டனர்.

''கொஞ்சம் நல்லா யோசனை பண்ணிப்பாருங்க. ரணிலோட யானைக்கட்சி வெற்றி பெற்றது எல்லாம் சிறுபான்மை முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஏரியாவுல தான்'' என்று நிறுத்தினார் தணி அண்ணன்.

''அண்ணன் சொல்றதும் சரியாத் தான் இருக்கு. இந்த நாட்டில அமைதியும் சமாதானமும் வேணும்னு வேண்டுறது நம்ப சிறுபான்மை இனம் மட்டும் தான். மத்த சனங்களுக்கு சமா



தானமும் வேண்டாம் மண்ணாங்கட்டியும் வேண்டாம். தங்கட வயிறு நிறைஞ்சாப் போதும்என்று முடிவு பண்ணிபுட்டாங்க போல இருக்கு'' என்றார் அப்பாவு தலைவர்.

''உண்மை தான் தலைவரே நாட்டைப் பிரிச்சுக்கொடுக்கப் போறாங்க. அப்படி இப்படின்னு கதை பரப்பிப்புட்டாங்க. சிவனொளிபாதமலையை வித்துப்புட்டாங்க, சிங்கராஜவனத்தை வித்துப்புட்டாங்க. தலதா மாளிகையை கொடுக்கப் போறாங்க. அனுராதபுர போதியையும் விலை பேசிப் புட்டாங்க என்று கதை கட்டிப்புட்டாங்க. அது நல்லா வேலை செஞ்சிருச்சு என்றார் தணி அண்ணன்.

''அப்படின்னா இதை நம்பித்தான் அந்த சனங்க ஒட்டுமொத்தமா கட்சியைக் கூடப்பார்க்காம அந்தப்பக்கம் அள்ளிப் போட்டுப்புட்டாங்களோ'' என்று மூக்கின் மேல் விரல் வைத்தார் நடராசன்.

''அவுங்களோட கதி இப்படின்னா நம்ப மலையக தலவர்மாரோட நிலைமை என்னா ஆச்சு பார்த்தீங்களா! நம்ப தலைவர் ஆறுமுகம் ஐயா எட்டு பேரோட பார்லிமெண்டுக்குப்போயிட்டார். சந்திரசேகரன் ஐயாவோட சேர்த்து ஒம்போது பேர் இப்ப இருக்காங்க. இவ்வளவு இருந்தும் நமக்கு என்ன கிடைக்கப் போவுது?'' என்று கவலையுடன் கூறினார் மீண்டும் அப்பாவு தலைவர்.

என்னங்க தலைவரே அப்படி கவலைப் படுறீங்க, ஆறுமுகம் ஐயாவும் சந்திரசேகரன் ஐயாவும் அம்மாவோட சேரப்போறதா இந்தப் பேப்பரில போட்டு இருக்கே'' என்றார் நடராசன்.

''நடராசு பேப்பரில போடுறது எல்லாமே உண்மையாகிவிடாது. சில பேப்பர்கள் இப்படி சர்ச்சையைக்கிளப்பி விட்டதாகவும் அதுல எந்த உண்மையும் இல்லை என்றும் தலைவர் சொல்லிப்புட்டாரே'' என்றார் தணி அண்ணன்.

''என்னங்க அண்ணே தலைவரே முந்தி ஒரு தரம் பெரியதொண்டமான் இருந்த போது யானையிலபோட்டி போட்டு அம்மாவோட சேர்ந்து வேலை செய்தார். மலையக மக்களைப் பாதுகாக்கவே அவர்களுடன் சேர்ந்தேன் என்று அறிக்கைவிட்டார்'' என்று இடைமறித்தான் நடராசன்.

''அப்ப நடராசன் சொல்லுறதைப் பார்த்தால் இப்ப நம்ம ஆறுமுகம் ஐயாவும் புத்திசாலித்தனமா ஒரு முடிவு எடுக்கலாம். எட்டு மந்திரிமாரைக்காட்டி பேரம்பேசலாம். அதுனால மலையகத்துக்கு ஏதாவது செய்ய முடியும் என்று கூட நம்பலாம் இல்லியா'' என்றார் அப்பாவு தலைவர்.

''என்னங்க தலைவரே நீங்களும் அப்படிச் சொல்லிப்புட்டீங்க. தலைவர் ஆறுமுகன் அப்படி ஒன்னும் செய்யமாட்டார். செய்யிறதுன்னா தடார் படார் என்று ஒடனே சொல்லிப்புடுவார். இப்படி இழுத்தடிக்கமாட்டார்.''என்று அந்த விவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார் தணிகாசலம்.

''என்னமோ போங்க அண்ணே எங்க எது நடந்தாலும் கடைசியில டேஸ்ட்டாகிறது தோட்டத்து சனங்க தான். அப்படி ஏதும் நடக்காம இருந்தா போதும்'' என்று கூறி அப்பாவு தலைவரும் நடராசனும் விடைபெற்றனர்.

# மலையகத்தின் எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும்




ஆடிய ஆட்டங்களும் பாடிய பாட்டுகளும் ஓடிய ஓட்டங்களும் ஓய்ந்து விட்டன.

வழமையாகவே தேர்தல்கள் முடிந்தவுடன் காணப்படும் கலகலப்புகளும் சலசலப்புகளும் இம்முறை காணப்படவில்லை.

மலையகத் தலைவர்கள் அள்ளிவீசிய வாக்குறுதிகளும், உத்தரவாதங்களும் எவ்வளவு தூரத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன? யார்யார் நிராகரிக்கப்பட்டுள்ளனர்? எத்தனை புது முகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன? இது பலருக்கு மகிழ்ச்சியையும் சிலருக்கு அதிர்ச்சியையும் ஏற்படுத்தி விட்டது என்னவோ உண்மைதான்.

கடந்த நாடாளுமன்றத்தில் இடம்பெற்றிருந்த தலைகள் உருட்டித் தள்ளப்பட்டுள்ளன. கடுமையான உழைப்பாலும், தொகுதிக்குச் செய்த சேவைகளாலும் வெற்றி உறுதி என நம்பிக்கையுடன் இருந்தவர்கள் வெற்றிவாய்ப்பை இழந்துள்ளனர்.

மலையகத்தின் தனிப்பெரும் சக்தி எனக் கூறப்படும் இ.தொ.கா. அதன் தனித்துவத்தை நிலைநாட்டிவிட்டது.

இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமானால் மலையகத்தில் நிறுத்தப்பட்ட ஏழு பேரில் ஆறு பேர் வெற்றி பெற்றனர். கொழும்பில் போட்டியிட்ட யோகராஜன் தோல்வியைத் தழுவி உள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் ஆறுமுகம் தொண்டமான் , முத்துசிவலிங்கம், ஜெகதீஸ்வரன் ஆகியோர் வெற்றி பெற்றவர்களாவார்கள்.

இம் மாவட்டத்தில் எந்தவொரு அரசியல் கட்சியினதும் ஆதரவின்றி போட்டியிட்ட மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் வெற்றி பெற்றார்.

தமிழர்களின் ஐக்கியம், மலையக அரசியல் அபிவிருத்தி என்ற இரண்டு நோக்கங்களையும் முன்வைத்தே சந்திரசேகரன் போட்டியிட்டார். நான் எவரையும் தோல்வியடையச் செய்வதற்காகப் போட்டியிடவில்லை. நுவரெலியா மாவட்டத்தில் மேலும் ஓர் அங்கத்தினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகவே தனித்துப்போட்டியிடுகிறேன் என்றார்.

சந்திரசேகரன் கூறுவது போல அவரும் ஐக்கிய தேசிய முன்னணிப் பட்டியலில் போட்டியிட்டிருந்தால் அங்கு தெரிவாகும் தமிழர்களின் எண்ணிக்கை மூன்றாக மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால் சந்திரசேகரன் தனித்துப்போட்டியிட்டதால் நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் சந்திரசேகரனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்கள் எடுபடவில்லை. அவரை மலையக மக்கள் அங்கீகரித்துவிட்டனர்.

பதுளை மாவட்டத்தில் இ.தொ.கா. உறுப்பினர்களான எம்.சச்சிதானந்தனும் வடிவேல் சுரேஷும் வெற்றி பெற்றுள்ளனர்.

வடிவேல் சுரேஷ் புதுமுகம் என்றாலும் துடிப்புள்ள வாட்டசாட்டமான இளைஞர். இ.தொ.கா.வில் நிர்வாகம் உட்பட பல பொறுப்பான பதவிகளை வகித்தவர்.

முருகன் சச்சிதானந்தன் நீண்ட கால அனுபவம் உடையவர். ஊவா மாகாண சபையில் உறுப்பினராகவும் அமைச்சராகவும் இருந்து பணியாற்றியவர். ஊவா மக்கள் இவருடைய சேவையை மறந்து விடவில்லை என்பதை உறுதிப்படுத்துவது போல் அவரை வெற்றியடையச் செய்து விட்டனர்.

இ.தொ.கா. வேட்பாளர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாகவும் வெற்றி வாய்ப்பைப் பெறக் கூடியவரும் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்பட்டவர் ஐ.தே.கவின் நேரடி உறுப்பினரான கே.வேலாயுதம். நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர் இவர்.

வேலாயுதத்தின் தோல்வி ஜீரணிக்க முடியாததாகவும், அதிர்ச்சியாகவும் இருப்பதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

பிரஜா உரிமை வழங்கும் விடயத்தில் மலையகத் தலைவர்களுக்கு ஏற்பட்ட சர்ச்சை வேலாயுதத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

பிரஜா உரிமை பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை இ.தொ.கா. தயாரித்து விநியோகித்த போது வேலாயுதம் அசர்ச்சையை ஏற்படுத்தியவர்.

இதனால் தோட்டத் தொழிலாளர்களுக்குப்பிரஜா உரிமை பெற்றுக்கொடுப்பதற்கு வேலாயுதம் முட்டுக்கட்டையாக இருக்கின்றார் என்ற பிரசாரம் துரிதமாக மேற்கொள்ளப்பட்டது. இந்தப்பிரசாரம் வேலாயுதத்தின் தோல்விக்கு ஒரு காரணமாக இருந்தது என்றும் கூறப்படுகின்றது.

கண்டி மாவட்டத்தில் இதொ.கா சார்பில் மத்திய மாகாணசபைத் தலைவர் மதியுகராஜாவும், இ.தொ.கா உப தலைவர் பைஸல் முஸ்தபாவும் போட்டியிட்டனர். இவர்களுள் புதுமுகமான பைஸல் முஸ்தபா வெற்றி பெற்றார். பழையவரான மதியுகராஜா தோல்வி கண்டார்.இவர் 284 வாக்கு வித்தியாசத்திலேயே பின்தள்ளப்பட்டுள்ளார். கண்டி மாவட்டத்தில் பைஸல் முஸ்தபாவும் மதியுகராஜாவும் இணைந்து செயற்பட்டிருந்தால் மதியுகராஜாவும் வெற்றி பெற்றிருக்க முடியும். ஆனால் அங்கு விருப்பு வாக்கு மோதல் குழிபறித்து விட்டது.

எது எப்படியோ இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமான் மலையகத்தில் சாதனை படைத்து கிங் மேக்கராகிவிட்டார். ஆனால் கொழும்பில் இவரது சாணக்கியம் பலிக்கவில்லை.

தேர்தல் முடிந்தவுடன் ஆறுமுகம்தொண்டமான் பல்டி அடித்துவிடுவார். அமைச்சர் பதவியை வாங்கிக்கொண்டு அம்மாவுடன் சேர்ந்துவிடுவார் என்றெல்லாம் சர்ச்சைகள் கிளப்பப்பட்டன.

ஆனால் ஆறுமுகன் தொண்டமான் அந்த சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளிவைத்து விட்டார்.

இவை எல்லாம் கட்டுக்கதை. இ.தொ.கா. எந்த ஒரு கட்சியுடனும் சேராது. அமைச்சுப்பதவிகளுக்காக காவடி எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அப்பட்டமாக அடித்துக்கூறிவிட்டார். ஆறுமுகம் தலைவர் தலைவர்தான் என்பதை உறுதிப்படுத்திவிட்டார். இப்படி உறுதியான தலைமைகள் தான் இன்று தேவை. எனவே வெற்றி பெற்றவர்கள் இறுமாப்படையாமலும், தோற்றவர்கள் துவண்டுவிடாமலும் விட்ட தவறுகளைத் திருத்திக்கொள்ள வேண்டும்.



## சொல்லாதே இது இரகசியம்!

அந்த அழகான டெவன் நீர்வீழ்ச்சிக்குப் பக்கத்தில் இருக்கும் கலைக்கூடத்தில் புதிதாக பயிற்சி ஆசிரியர்களைச் சேர்க்கும் படலம் ஆரம்பித்துவிட்டதாம். நேர்முகப் பரீட்சைகளும் தொடர்ந்து நடைபெறுகின்றனவாம்.

மலையகத்துக்கு வெளியே இருந்து வந்த இளம் நெஞ்சங்கள் மலையகத்தின் எழில் கண்டு வியந்துவிட்டனராம்.

இதனை தனக்கு சாதகமாக்கிக் கொள்ள முயன்றாராம் இவர்களுக்குத் துணையாக வந்த அந்தத் தூரப்பிரதேச பாடசாலையின் தலைவர்.

''இது உங்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம். இயற்கைநீர்வீழ்ச்சிகளையும், பூந்தோட்டங்களையும் பார்த்துவிட்டுப்போகலாம்'' என்றாராம்.

மாணவக் குஞ்சுகளுக்கும் மனதுக்குள் ஆசை தான். ஆனாலும் கையில் பணம் இல்லையே என குசுகுசுத்தனராம்.

அடச்சீ நீங்கள் என்னுடைய சகோதரங்கள் மாதிரி. எனது நண்பர்கள் பலர் இருக்கின்றனர். என்னிடம் பணம் இருக்கின்றது. கவலைப்பட வேண்டாம். எல்லா இடங்களையும் சுத்திப் பார்த்துவிட்டுப்போகலாம்'' என்று ஆறுதல்படுத்தி அழைத்துப்போனாராம்.

எல்லா இடங்களையும் சுத்திப் பார்த்த அலுப்பில் சாப்பிட்டும் சாப்பிடாமலும் படுக்கைக்குப்போய்விட்டனராம்.

அதிகாலையில் எழுந்தபோது தலைவரும், அவரது நண்பரும் அதே அறையில் அலங்கோலமாகக் கிடந்ததைக்கண்டு பதறிப்போய்விட்டனராம்.

பின்பு தான் தெரிய வந்ததாம். தமக்கு வழங்கப்பட்டது கொக்காகோலா அல்ல, பியர் டின்கள் என்பது. கொடுக்கக் கூடாததைக் கொடுத்து எடுக்கக் கூடாததைப்பறித்து விட்டதாம் அந்தப்பாடசாலைத் தலைமை. இது தான் இப்போது காவத்தையில் லேட்டஸ்ட் ஸ்டோரி.

# ஒரு நாளைக்கு 500 கெப்சூல்
# 500 கெப்சூலில் 250 250 கெப்சூல்கள்

அறிமுகமாகிறது விட்டமின் H 500 mcg அடங்கிய

# BIOTIN PLUS 500

நாள் ஒன்றுக்கு 1 கெப்சூல் போதுமானது!




ஒரு பக்கெட்டின் விலை
ரூ.295/- மட்டுமே.

பயோட்டின் பிளஸ் 500 உங்களுக்குச் சகல வழிகளிலும் நன்மையானது, வசதியானது, இலாபகரமானது. ஆசிய நாட்டு மக்களுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள பயோட்டின் பிளஸ் 500 ஒரு கெப்சூலில் இரண்டு கெப்சூல்களின் சக்தியைக் கொண்டுள்ளது. ஆகவே, நீங்கள் நாள் ஒன்றிற்கு எடுக்க வேண்டியது ஒரு கெப்சூல் மாத்திரமே.

- தலைமுடி இளமையில் நரைப்பதைத் தடுக்கும்
- தலைமுடி உதிர்வதைத் தடுக்கும்
- தலைமுடி வளரும் வேகத்தைக் கூட்டும்
- சருமத்தில் சுருக்கங்கள் ஏற்படுவதைத் தடுக்கும்
- சருமம் வறட்சி அடைவதைத் தடுக்கும்
- நகங்களை வலிமையாக வைத்திருக்கும்

## BIOTIN PLUS 500

பளபளப்பான மேனி - எழிலான கூந்தல்

இப்போது சகல மருந்தகங்களிலும், பிரபல சுப்பர் மார்கட்டுகளிலும் வாங்கலாம்.
சந்தைப்படுத்துவோர்:
மெக்ரா ஃபாமா, 301A, டாம் வீதி, கொழும்பு 12. தொலைபேசி: 011 5377746



உங்கள் இல்லத்துக்கு அதிசிறந்தது, கூரை முதல்



# நீவச

கூரை ஓடுகள் மற்றும் டெராகொட்டா தரை ஓடுகள்

தரை வரை

அதிசிறந்த சர்வதேச தராதரத்துக்கு நிகராக, இலங்கை உற்பத்திகளை உயர்த்தும் இலட்சியம் கொண்ட பல்துறைகள் இணைந்த வர்த்தகர்களுள் ஒருவரான **DSI** குழுவினரின் தயாரிப்பு 'நீவச' கூரை ஓடுகள்! பலவகையான நிறங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

நாம், தரமான டெராகொட்டா தரை ஓடுகளையும் அதே தராதர உயர்வுடன் தயாரிக்கிறோம்.



DSI Samson group

சம்சன் ரஜரட்ட டைல்ஸ் (பிறை) லிமிட்
ஜினசேன மாவத்தை, மஹார, கடவத்தை.
விசாரணைகளுக்கு தொடர்புகொள்ள வேண்டியது:
கிஹான் 0777-815440 அல்லது மஹாநாம 0777-815439
தொலைபேசி: 0112-926065, 0112-928700, 0114-815423, 0114-816443
தொலைநகல் 0112-925064, 0114-816440 தகவல் தளம்: http://www.dsitiles.com



# உதயமாகும் சித்திரைப் புத்தாண்டில் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!




# தமிழீழ வைப்பகம்
# Bank of Tamileelam

யாழ் சாலை, கிளிநொச்சி. தொலைபேசி : 021 2226190



இப்பத்திரிகை கொழும்பு -- 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 ஏப்ரல் 18 ஆம் திகதி வெளியிடப்பட்டது.